Registered as a News Paper in Sri Lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

**அற்புதன் அச்சகம்**

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 புரட்டாதி 25 சனிக்கிழமை (11.10.2014) பக்கங்கள் 20 ஓசை – 011

## இந்த ஆண்டுக்கான நோபல் பரிசு கைலாஷ் மற்றும் மலாலாவுக்கு



இந்தியரான கைலாஷ் சத்யார்த்தி மற்றும் பாகிஸ்தான் சிறுமி மலாலா யூசப்ஸாய் ஆகியோருக்கு நடப்பாண்டின் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நோபல் குழுவின் தலைவர் தோர்ப் ஜோயெர்ன், நேற்று அமைதிக்கான நோபல் விருதுகள் பற்றிய அறிவிப்பை வெளியிட்டார்.

அமைதிக்கான நோபல் பரிசுக்கு மொத்தம் 278 பேரின் பெயர்கள் பரிசீலிக்கப்பட்டன.

இறுதியாக இந்தியரான (19) ஆம் பக்கம் பார்க்க

## கோரிக்கைகளை நிறைவேற்றவில்லை; ஒருங்கிணைப்பு குழுவில் பங்கேற்க மாட்டோம்

### ஜனாதிபதிக்கு விக்கி கடிதம்

வடமாகாண சபை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் மற்றும் வேண்டுகோள்கள் எவையும் மத்திய அரசு ஏற்றுக்கொள்ளாத நிலையில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்குபற்றுவது அர்த்தமற்றதாகும் என முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் 23 ஆம் திகதி ஜனாதிபதியால் விடுக்கப்பட்ட அழைப்பு கடிதத்திற்கு நேற்று அனுப்பியுள்ள பதில் கடிதத்திலேயே முதலமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்தக் கடிதத்தில் முதலமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

வடமாகாண ஆளுநரை மாற்றவேண்டும், பிரதம செயலாளர் (19) ஆம் பக்கம் பார்க்க

# சட்டத்திற்கு முரணான பிரேரணை ஏற்றுக்கொள்ளாது அரசாங்கம்

### வடக்கு மாகாணசபைக்கு மத்திய அரசு ஆலோசனை

(கொழும்பு)

நாட்டின் சட்டத்திற்கு முரணான வகையில் வடக்கு மாகாண சபையினால் நிறைவேற்றப்படும் தீர்மானங்களையோ அல்லது பிரேரணைகளையோ அல்லது கோரிக்கைகளையோ அமுல்படுத்த முடியாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாட்டின் சட்டத்திற்கு முரணாக வடக்கு மாகாண சபை நிறைவேற்றும் எந்த யோசனையாக அல்லது பிரேரணையாக் அல்லது கோரிக்கையாக இருந்தாலும், அதனை செயற்படுத்தாது இருக்கும் உரிமை அரசாங்கத்திற்கு இருப்பதாக அரசாங்கத்தின் உயர் அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி அரசாங்க இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

நாட்டில் அமுலில் இருக்கும் சட்டத்திற்கு முரணான யோசனைகள், வடமாகாண சபையில் நிறைவேற்றப்படுவதாக அரசாங்கத்தின் உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

மாகாண சபை யோசனைகளை நிறைவேற்றினாலும் அதனை அமுல்படுத்த மத்திய அரசாங்கத்தின் அனுமதி அவசியம் எனவும் அந்த அதிகாரி (19) ஆம் பக்கம் பார்க்க

## அங்கரின் தடை நீக்கம்

(கொழும்பு)

400 கிராம் அங்கர் பால்மாவின் மூன்று தொகுதிகளுக்கு விதிக்கப்பட்ட தற்காலிக விற்பனைத் தடையை அரசாங்கம் தளர்த்தியுள்ளது.

குறித்த மூன்று தொகுதிகளிலும் செய்யப்பட்ட சோதனையின்போது சிறுவர்களை பாதிக்கக்கூடிய எவ்வித நச்சுத்தன்மையும் அடங்கியிருக்கவில்லையென அதிகாரிகள் நேற்றைய (19) ஆம் பக்கம் பார்க்க

## மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு சுயலாப அரசியல்வாதிகளுக்கு விருப்பமில்லை

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

எமது மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு உரிய வகையில் தீர்வு காண்பதற்கு சுயலாப அரசியல்வாதிகள் விரும்பாததைப் போன்றே சில தமிழ்ப் பத்திரிகைகளும் திட்டமிட்டு செயற்படுவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக் காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் நேற்றைய தினம் இடம் பெற்ற வடமாகாண ஆசிரிய உதவியாளர்களுடனான கலந்துரையாடலின் (19) ஆம் பக்கம் பார்க்க

## முடிவுக்கு வந்தது ரயில் ஊழியர் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

ரயில்வே திணைக்கள ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் முடிவுக்கு வந்தது. இதனால் இன்று காலை 7 மணி தொடக்கம் அனைத்து ரயில் சேவைகளும் வழமைக்குத் திரும்பும் என அறிவிக்கப்பட்டது.

தமது அடிப்படைச் சம்பளத்தை 15 ஆயிரம் ரூபாவில் இருந்து 16 ஆயிரம் ரூபாவாக (19) ஆம் பக்கம் பார்க்க


## மதூர் - ஜனாதிபதி கண்டியில் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய பாதுகாப்புச் செயலாளர் ஆர்.கே. மதூர் நேற்றுக் காலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தார்.

கண்டியிலுள்ள ஜனாபதிபதி மாளிகையில் இச்சந்திப்பு இடம் பெற்றது.

இச்சந்திப்பின் போது பயிற்சிகளை அதிகரித்தல், மீனவர் பிரச்சினை, பாதுகாப்பு, போன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் (19) ஆம் பக்கம் பார்க்க




## முழுமையாக அமுல்படுத்த முடியாது

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சகல பரிந்துரைகளையும் அமுல்படுத்த வேண்டும் என்ற கடப்பாடு அரசாங்கத்திற்கு இல்லை என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

யோசனைகளை பெற்றுக் கொள்ளும் முறைமை ஒன்றை உருவாக்குவதற்காகவே அந்த ஆணைக் குழு நியமிக்கப்பட்டது எனவும் அவர் கூறினார்.

அரசாங்க தகவல் (19) ஆம் பக்கம் பார்க்க




**விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?**

இது ஒரு அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண், பெண் தேவை சம்பளம் 18,000-35,000 வரை தங்குமிடம் உணவு, பயிற்சி வழங்கப்படும் (சிங்களம் அவசியமில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள் 0766398366.

(C/3775)

## யாழ்.போதனா வைத்தியசாலையிலுள்ள சிற்றுண்டிச் சாலையை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல்

### 01.11.2014 தொடக்கம் 30.11.2015 வரை

யாழ்.போதனா வைத்தியசாலை பிராந்திய பெறுகைகள் குழு தகுதியான/தகைமைவாய்ந்த சிற்றுண்டிச்சாலை நடாத்துனர்களிடமிருந்து 01.11.2014 தொடக்கம் 30.11.2015 வரையான காலப்பகுதிக்குள் யாழ்.போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலையினை நடாத்துவதற்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றோம்.

01. நாட்டமுள்ள வலைக்கேள்விதாரர்கள் இவ்வைத்தியசாலையில் கிடைக்கும் Application For Bid Documents என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 500 காசாக அலுவலக காசாளரிடம் செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 13.10.2014 தொடக்கம் 23.10.2014 வரையான காலப் பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை (12.30 தொடக்கம் 13.00 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

02. விலைக்கேள்விகள் 24.10.2014 ஆம் திகதி 03.00 மணிக்கு முன்பதாக இப் போதனா வைத்தியசாலையின் கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கேள்வி நேர முடிவில் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.

03. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும், விலைக் கேள்விப் பத்திரங்களினையும் அலுவலக நேரங்களில் கீழ்க்காணப்பட்ட முகவரியில்/தொலைபேசி இலக்கத்துடன் 021 222 2260 பெற்றுக்கொள்ளலாம்.

04. இது தொடர்பான பெறுகை முன்னறிவிப்பு கூட்டம் (Pre bid meeting) 2014.10.20 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

05. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கெள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பிராந்திய பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**தலைவர்/பணிப்பாளர்,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

(C/3548)


# நெருக்கடி காலத்தில் எமக்கு கைகொடுப்பவர் அமைச்சர் டக்ளஸ்

## தொழிற்சங்கத் தலைவர் ஜோன்சன் தெரிவிப்பு



மழையில்லாத தேசம் எப்படி வறட்சியாக இருக்குமோ அதேபோல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இல்லாத பகுதியும் அபிவிருத்தியில்லாது வறண்ட பகுதியாகவே இருக்குமென வட பிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கத்தின் தலைவர் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கத்தின் 47 ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நெருக்கடியான காலகட்டங்களிலெல்லாம் எமக்குள்ள தேவைகளை இனம் கண்டு அவற்றை உரிய நேரத்தில் தீர்த்து வைத்தவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மட்டுமே.

அவரது சிறந்த தலைமையின் கீழ் யாழ்ப்பாண மாவட்டம் மட்டுமல்லாது வடபகுதி முழுமையும் முன்னேற்றத்திலும் அபிவிருத்தியிலும் மேம்பாடு கண்டு வருகின்றது.

அதுமட்டுமல்லாது இவ்வாறான அபிவிருத்திக்கும் மேம்பாட்டுக்கும் அமைச்சரது சிறந்த தலைமையும் வழிநடத்தலுமே முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன.

அத்துடன், எமது ஐக்கிய தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளது குடும்பங்களினது நலமேம்பாடுகளுக்காக மட்டுமன்றி நாம் பிரச்சினைகளை எதிர்நோக்கும் வேளைகளிலும் எமக்கான நியாயங்கள் மறுக்கப்படும் வேளையிலும் அதற்காக குரல் கொடுத்து அவற்றை கிடைக்கச் செய்வதற்கும் மிகுந்த அக்கறையுடன் செயற்படுபவர் அமைச்சர் என்றும் சுட்டிக்காட்டினார்.

ஒருகாலத்தில் நாம் பயந்து நடுங்கி வாழ்ந்த காலம் முடிவு பெற்று இன்று ஒரு அமைதியான சூழல் நிலவும் நிலையில் இங்கு பல்வேறுபட்ட அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, சிறுவர்களது பொழுது போக்கிற்காக யாழ்ப்பாணம் பழைய பூங்கா வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பொழுது போக்கு மையத்தின் மூலம் சிறுவர்கள் மகிழ்ச்சியான வாழ்வை அனுபவித்து வருகின்றனர் என்பதுடன் எதிர்கால சிறுவர்களுக்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இம்மையமானது அமைச்சரின் சிறந்த ஆலோசனைக்கான வழிகாட்டலுக்கு சான்றாக அமையப் பெற்றுள்து என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினர் உரைநிகழ்த்தினார்.

இதன்போது யாழ்.மாநகரசபை ஆணையாளர் பிரணவநாதன், அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குகேந்திரன், ஈ.பி.டி.பியின் யாழ்.நகர இணைப்பாளர் இளங்கோ (றீகன்) உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## "சுவர்ணபுரவர" விருது வழங்கும் விழா

## எதிர்வரும் 21 ஆம் திகதி; ஜனாதிபதி தலைமை

### வடக்கு உள்ளூராட்சிமன்ற தலைவர், செயலாளர்களும் கலந்துகொள்வர்

உள்ளூராட்சி நிறுவனங்களின் செயற்றிறனை மேம்படுத்துவதற்கான சுவர்ணபுரவர விருது வழங்கும் விழா எதிர்வரும் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் பத்தரமுல்லையில் இவ்விருது விழா இடம்பெறும் நாடு தழுவிய ரீதியில உள்ளூராட்சி நிறுவனங்களின் செயற்றிறனை அதிகரிக்கும் நோக்குடன் வருடாவருடம் தேசிய விருது விழாவாக சுவர்ணபுரவர விருது வழங்கும் நிகழ்வு மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்படுகிறது.

2013 இல் நாடுதழுவிய ரீதியில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையே மாவட்ட, மாகாண, தேசிய, ரீதியில் வெற்றி பெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கு ஜனாதிபதி விருதுவழங்கிக் கௌரவிப்பார். மேற்படி நிகழ்வு பத்தரமுல்லையில் உள்ள வோட்டர்ஸ் எஜ் இல் இடம்பெறும்.

நாடுதழுவிய ரீதியில் உள்ளூராட்சி சபைகளின் தலைவர், உபதலைவர், செயலீளர்கள் ஆகியோர் அழைக்கப்படவுள்ளனர். மேற்படி சுவர்ணபுரவர விருது வழங்கும் விழாவிற்கான ஏற்பாடுகளை மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா மேற்கொண்டு வருகின்றார்.

## குழு மோதலில் ஒருவர் படுகாயம்

(சுன்னாகம்)

சுன்னாகம் மேற்கு பகுதியில் இரண்டு குழுக்களுக்கிடையில் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற மோதலில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் நேற்றுக் கூறினர்.

சுன்னாகத்தைச் சேர்ந்த 26 வயதான சந்திரசேகரம் வித்தியரூபன் என்பவரே படுகாயமடைந்தார். முச்சக்கர வண்டியொன்றில் வந்தவர்களுக்கும் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தகர்க்கம் கைகலப்பாக மாறியதாக பொலிஸார் கூறினர்.

அத்துடன், இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்தன

## வயோதிபப் பெண் மாடு முட்டிக் காயம்

வடவரணி சிமிழ் கண்ணகைபுரம் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வீதியால் சென்ற மாடு, வீட்டு வாயிலில் நின்ற வயோதிப மாதுவை இடித்து வீழ்த்தித் தாக்கியதில் காலில் பலத்த காயமடைந்த நிலையில் அயலவரின் உதவியுடன் அவசர அம்புலன்ஸ் உதவி பெறப்பட்டு மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவத்தில் காயமடைந்தவர் அதே இடத்தைச் சேர்ந்த இ.தங்கச்சிப்பிள்ளை (வயது - 75) என்பவராவார். (150)

## வீதி விபத்தில் வயோதிபர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சுதுமலைப்பகுதியில் நேற்றுக்காலை துவிச்சக்கர வண்டியில் பயணம் செய்த வயோதிபர் ஒருவர் மோட்டார் சைக்கிளினால் மோதுண்டு படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த சிவப்பிரகாசம் (வயது 80) என்பவரே இவ்வாறு படுகாயமடைந்து சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். (பா)


**சிறு விளம்பரம்**

**டயானா பிளாஸ்ரிக் இடமாற்றம்**

இல.108 பலாலி வீதி
யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி சந்தி அருகாமை)
021 222 8680,
077 592 5088.

(C/3800)



# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1099

திகதி 09.10.2014

வெற்றி எண்கள்: 01 22 35 41 — ஆங்கில எழுத்து: I

ஜக்பொட் பரிசு ரூ. 4,13,60,400/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 4,13,60,400/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 14 | 50,000/= | ரூ. 7,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 264 | 1,000/= | ரூ. 2,64,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 459 | 1,000/= | ரூ. 4,59,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11874 | 60/= | ரூ. 7,12,440/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6247 | 40/= | ரூ. 2,49,880/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 155489 | 20/= | ரூ. 31,09,780/= |
| ஆங்கில எழுத்து | 22479 | 20/= | ரூ. 4,49,580/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 69,44,680/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூபா 41,664,760/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.10.13 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை
யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 2 338546/7

(C/3535)





# பாராட்டி வாழ்த்துகின்றோம்

கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும்

**செல்வன் இளங்கீரன் மருதன்**

2014 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 168 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவ்வேளையில் இவ்வித்தியாலய அதிபர், ஆசிரியர்களுக்கும் (ஆசிரியர் நிஷாந் கரோலின்) அவர்கட்கும் மற்றும் பாலர் பாடசாலையில் கல்வி கற்பித்த யாழ். கரவெட்டி சிந்தாமணி முன்பள்ளி ஆசிரியர் கதிர்காமநாதன் சுதாஜினி அவர்கட்கும் யாழ். கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். இவர் மேலும் கல்வியில் சிறக்க இறைவனை பிரார்த்திப்பதோடு அவரை மனதார பாராட்டி வாழ்த்துகிறோம்.

**உதயநகர், கிளிநொச்சி.** அப்பா, அம்மா, தம்பி (விருதன்) பூட்டி, அப்பம்மா, அம்மம்மா.

# வடமாகாண உள்ளூராட்சி வெளிநிலை அலுவலர்களுக்கு மோட்டார் சைக்கிள்

## ஜனாதிபதி வழங்கி கௌரவிப்பார்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண உள்ளூராட்சி திணைக் களத்திற்குட்பட்ட வகையில் மூன்று வெளிநிலை அலுவலர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன.

தெரிவு செய்யப்பட்டவர்கள் நேற்று முன்தினம் குறித்தொதுக்கப்பட்ட தொகைகளை செலுத்தினர். என வடமாகாண உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

ஜனாதிபதியின் விசேட வருகையை தொடர்ந்து வெளிக்கள உள்ளூராட்சி பணியாளர்கள் ஆய்வு உத்தியோகத்தர்கள், சனசமூக அலுவலர்கள், வருமான பரிசோதகர்களுக்கு ஆகக்குறைந்த முதற் கட்டணத்தில் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன.

எனினும் உள்ளூராட்சி திட்டமிடல் பணிகளில் கடமையாற்றும் அலுவலர்களுக்கு மோட்டார் சைக்கிள் ஒதுக்கீட்டில் இடம்கொடுக்கவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி விடயம் தொடர்பில் உள்ளூராட்சி அபிவிருத்தி பணியாளர்கள் வடக்கு ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு வரவுள்ளதாக தெரியவருகிறது.

# அஞ்சல் தின நிகழ்வு ஒட்டுசுட்டானில்




உலக அஞ்சல் தின நிகழ்வுகள் வடபகுதியில் உள்ள பல்வேறு அஞ்சல் அலுவலகங்களிலும் நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டன.

இதனை முன்னிட்டு பல்வேறு அஞ்சல் அலுவலகங்களிலும் நேற்று முன்தினம் காலை முதல் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன இதில் ஒட்டுசுட்டான் அஞ்சல் அலுவலகத்திலும் நேற்றுமுன்தினம் விசேட நிகழ்வுகள் நடைபெற்றன. அஞ்சல் அதிபர் நவரட்ணம் மகேஸ்வரி தலைமையில் நிகழ்வுகள் மங்கள விளக்கேற்றலோடு ஆரம்பமாகி நடைபெற்றதுடன் பொது மக்கள், அஞ்சலக ஊழியர்கள் உள்ளிட்ட பலர் இந் நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

# தரமான நாட்டரிசிக்கு தட்டுப்பாடு; குடாநாட்டில் நாளுக்குநாள் விலை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தரமான நாட்டரிசிக்கு தட்டுப்பாடு நிலவுவதோடு அதன் விலையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கடந்த வாரங்களில் 80 ரூபா முதல் 90 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வந்த நாட்டரிசி தற்போது 100 ரூபா முதல் 110 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி தொடக்கம் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சினால் சில அரிசி வகைகளுக்கு கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ வெள்ளைப்பச்சை அரிசி 66 ரூபாவும், ஒரு கிலோ சிவப்புபச்சை 60 ரூபாவும் ஒரு கிலோ வெள்ளைநாட்டரிசி 68 ரூபாவும் ஒரு கிலோ சிவப்புநாட்டரிசி 66 ரூபாவும் ஒரு கிலோ சம்பாஅரிசி 66 ரூபா எனவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

ஆனால் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் நாட்டரிசி உட்பட சில குறிப்பிட்ட அரிசி வகைகளுக்கு கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்படவில்லை

கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்பட்ட அரிசிவகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக உள்ளூர் நாட்டரிசியை வாங்குவதில் நாட்டம் காட்டி வருவதால் அதன் விலையும் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது.

பெரும்போக விதைப்பு ஆரம்பித்து நெல்விளைச்சல் காணும் வரை கையிருப்பில் உள்ள உள்ளூர் உற்பத்தி நெல்லைக்கைவிட விவசாயிகள் தயக்கம் காட்டிவருவதும் உள்ளூர் நாட்டரிசியின் விலை உயர்வுக்குக் காரணமெனவும் கூறப்படுகின்றது.

(10)



முதியோர் தினவிழா அண்மையில் கைதடி அரச முதியோர் இல்லத்தில் இடம் பெற்றது. இதில் கைதடி சரஸ்வதி சனசமூக நிலையத்தினரால் நடாத்தப்பட்ட கலைநிகழ்வுகளில் பங்குபற்றியவர்களைக் காணலாம். (51)

# தமிழற்ற அரசியல் பிரச்சினையை எப்பிடித் தீர்க்கலாம் – 04




இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியாவை நம்பிப் பயனில்லை எண்டால்...?

**'இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியாவை மிஞ்சி எதுவும் செய்ய முடியாது. தன்ரை கையை மீறிப் போறதுக்கு இந்தியா விடவும் மாட்டுது'** எண்டு ஒரு கருத்துக் கனபேரிட்ட இருக்கு.

இதைப்போல **'இந்தியாவை விட்டுப்போட்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணமுடியாது. வரலாற்று அடிப்படையிலும் பூகோள அரசியலிலும் இந்தியாவுக்கு இலங்கையில் முக்கியமான பாத்திரம் உண்டு. அதிலும் தமிழர்களை இந்தியா அரவணைத்தே தீர வேணும்'** எண்டமாதிரியான அபிப்பிராயமும் கனபேரிட்ட இருக்கு.

**'இந்தியாவை நம்பினால் மீண்டும் நடுத்தெருவிலதான் நிக்க வேண்டி வரும் எண்டு அடித்துச் சொல்லுகிற ஆட்களும் இருக்கினம். கையில கனிஞ்சு வந்த தமிழீழத்தைக் கெடுத்ததே இந்தியாதான்'** எண்டும் இவை சொல்லுகினம்.

ஆனால், இலங்கைப் பிரச்சினையில இந்தியா எப்பவும் ஒரே மாதிரித்தான் செயற்பட்டு வருகுது. ஆட்சி மாறினால் என்ன? அரசாங்கம் மாறினால் என்ன? தலைவர்கள் புதிசு புதிசாக வந்தாலென்ன? இலங்கை தொடர்பான இந்தியாவின் கொள்கையும் நடைமுறையும் பெரிய அளவுக்கு மாறி விடவில்லை. இனியும் அது மாறும் எண்டில்லை.

இந்திய நலனை மையமாக வைச்சுக்கொண்டே அது சிந்திக்கும்.

இதில 'தமிழ்நாட்டின் எழுச்சியும் தமிழ்நாட்டின் பேரம்பேசும் ஆற்றலும் சரியாக இருக்குமாக இருந்தால் டில்லியைப் பணிய வைக்கலாம்' எண்டு சில அரசியல் மேதைகள் நீண்டகாலமாக நம்பிக்கொண்டிருக்கினை.

இதைக் கேட்கக் கேட்க எனக்குச் சிரிப்புச் சிரிப்பாக வரும்.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்படுகிறதையே நிற்பாட்டக் காணேல்ல. அதை நிப்பாட்டிறதுக்கொரு வக்கில்லை. பறிபோன படகுகளை மீட்க முடியேல்ல. தமிழ்நாட்டில இருக்கிற இலங்கை அகதிகளுக்கு முறையாக ஒரு ஒழுங்கு கிடைக்கேல்ல. தமிழ் நாட்டுக்கும் பிற மாநிலங்களுக்கும் இடையிலான தண்ணிப் பிரச்சினை தொடக்கம் இருக்கிற ஆயிரம் பிரச்சினைகளில் ஒரு பிரச்சினையைக் கூட முறையாகத் தீர்க்கக் காணேல்ல.

இந்தச் சீரில தமிழ்நாடு திரண்டெழுந்து, டில்லியைப் பணிய வைத்து, அப்பிடிப் பணிந்து தோப்புக்கரணம் போடுகிற டில்லியை வைச்சு தமிழீழத்தை அமைக்கலாம் எண்டால்...

அப்பப்பா... என்ன மாதிரியான ஒரு சுகமான கற்பனை!!! கேட்கவே உடம்பெல்லாம் சிலிர்க்குது....

இந்தக் குருட்டுச் சாத்திரிகள் தாங்கள் விசர்த்தனமாக நம்பினாலும் பரவாயில்லை. சாதாரணமான அப்பாவிச் சனங்களையும் பேய்த்தனமாக நம்ப வைச்சு நடுத்தெருவுக்குக் கூட்டிக் கொண்டு வந்து அம்போ எண்டு விட்டிட்டுப் போயிடுவினம்.

என்னதானிருந்தாலும் இந்தியாவின்ரை எல்லை 13 ஆவது திருத்தமும் அதன் அடியாக வந்த மாகாணசபையும்தான் எண்டது நிறுதிட்டமான உண்மை.

இதுக்கு மேல ஆசைப்பட்டால்...! அதுக்கு இந்தியா பொறுப்பில்லை. இந்தியாவினால் இதுக்கு மேல எதுவும் செய்யவும் முடியாது.

இதிலகூடப் பிரச்சினை இருக்கு.

இந்த 13 ஐக் கூட முழுசாக – ஒழுங்காக வழங்கிறதுக்கு உதவினால் பரவாயில்லையே!

இந்த நிலைமையிலதான் எங்கட ஆட்கள் இன்னும் இந்தியாவை நம்பிக்கொண்டிருக்கினம்.

ஒவ்வொரு தடவையும் ஆட்சி மாறும்போதும் ஆள் மாறும்போதும் ஏதோ ஒரு புது நம்பிக்கையோட இவை காத்திருப்பினம்.

ஆனால், நிலைமையோ பழையபடி வேதாளம் முருங்கையில் ஏறிய கதைதான்.

ஆகவேதான் திரும்பத்திரும்ப அடித்துச் சொல்ல வேண்டியிருக்கு – 'இந்தியாவை அளவுக்கு மேல நம்பிப் பிரயோசனமே இல்லை' எண்டு.

அப்பிடியெண்டால் தமிழற்றை பிரச்சினைக்கு என்னதான் தீர்வு?

அந்தத் தீர்வை இந்தியாவை விட்டுப் பெற முடியுமா? அதுக்கு இந்தியா அனுமதிக்குமா?

இதுதான் திரும்பத்திரும்பப் பலபேரிட்டயும் இருக்கிற கேள்வி.

அரசியல் எண்டது சடுதியாக மாறும் ஒரு சங்கதி. எதிர்பாராத நிகழ்ச்சிகளையும் திருப்பங்களையும் உடைய ஒரு விசயம்.

ஆனாலும் தன்னுடைய நலன்சார்ந்த அடிப்படைகளை எந்தப் பெரிய நாடும் விட்டு விடாது. அதுதான் அதனுடைய உயிர்நாடி.

இந்தியா இந்த வகையில் தன்னை விட்டுக்கொடுக்காமல்தான் கடந்த 40 வருசமாகச் சதுரங்கத்தை விளையாடிக் கொண்டிருக்குது.

தமிழர்கள் இதில் காய்கள் மட்டும்தான்.

அதிலும் தோற்கடிக்கப்படும் காய்களாகவே இருக்கிறார்கள்.

எனவே, இந்தியாவை விட்டு விட்டு அல்லது இந்தியாவைச் சேர்த்துக்கொண்டு பார்க்கிற காரியத்தைப் பார்க்க வேணும்.

இதையெல்லாம் செய்ய வேணும் எண்டால் கொழும்பை அனுசரிக்கவே வேணும்.

அப்பிடியான ஒரு நிலை வருமா?

வெற்றி என்பது தோல்விகளுக்கிடையேதான் இருக்கிறது.
- அப்துல் கலாம்

தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## கூட்டமைப்பின் மிளகாய் அரைப்பு!

"இந்த ஆண்டு இறுதிக்குள் வடக்கிலிருந்து இராணுவம் வெளியேறிவிட வேண்டும்" என்று மாகாண சபையில் அறுதித் தீர்மானமாக முழங்கித் தமிழ் மக்கள் மனங்களில் பாலை வார்த்திருக்கிறார் முதலமைச்சர் விக்கினேஸ்வரன்.

இராணுவத்தினர் இங்கே சுவீகரித்து வைத்துள்ள காணிகளின் விபரங்களும் ஆவணங்களுடன் ஆர்ப்பாட்டமாக சபையில் சமர்ப்பிக்கப்பட்டு விட்டது. இனியென்ன? இராணுவத்தினர் தாம் இனி இங்கு இருக்க முடியாதென்பதைத் தெரிந்துகொண்டு அவர்களாகவே வெளியேறிவிட வேண்டியதுதான்.

"அரசின் பிழைகளை பட்டியல் போட்டுச் சொல்லியாகி விட்டது; இராணுவம் எப்போது வெளியேற வேண்டும், தீர்வை எந்தக் காலக்கெடுவுக்குள் வைக்க வேண்டும் என்றும் அரசுக்கு எச்சரித்தாகி விட்டது... இதற்குமேல் அரசுதான் ஏதாவது செய்தாக வேண்டும்... அதுவரை மக்களே நீங்கள் ஒற்றுமையைக் காட்ட வாக்குகளை அள்ளி அளித்துக்கொண்டிருக்க வேண்டும்..." – இவ்வளவுதான் தமிழ்த் தலைமையாகச் சொல்லிக்கொள்ளும் கூட்டமைப்பின் அரசியல்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் நோக்கம் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் கொண்டுவருவதோ, யுத்தத்தால் சரிவடைந்த நம் சமூகத்தை மற்ற சமூகங்களுக்கு இணையாக நிமிர்த்துவதற்குச் செய்ய வேண்டியதைச் செய்வதோ அல்ல.

பிரச்சினைகள் தொடர்ந்தும் இருப்பதைச் சொல்லிச் சொல்லியே மக்களை உணர்ச்சிகர நிலையில் வைத்திருப்பதன் மூலம், தாங்கள் பதவிகளைப் பிடித்துக்கொண்டிருப்பதே அவர்களது ஒரே குறி என மறுபடியும் மறுபடியும் நிரூபித்து வருகிறார்கள்.

திரும்பத் திரும்ப ஒரே குற்றச்சாட்டுகளையும், நடக்காதென்று அவர்கள் நன்கறிந்த – அவர்களது அந்தப் பழைய வாய்பாட்டு மட்டையிலுள்ள – அலுவல்களை "அரசே செய்" என காலக்கெடு விதித்து அறிவிப்பதோடு அவர்களது அரசியல் முடிந்து விடுகிறது.

வழக்கம்போல அரசும், இவர்கள் தங்கள் மக்களைச் சமாளிக்கச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்ற புரிந்துணர்வுடன், இவர்களது காலக்கெடு விதிப்புகளைக் கண்டுகொண்டதாகக் காட்டிக்கொள்வதில்லை.

இவர்களும் அந்த காலக்கெடு முடிந்தபிறகு மற்றுமொருமுறை அதே குற்றப் பட்டியல்களை மற்றுமொரு காலக்கெடுவுடன் சமர்ப்பித்து, அரசை வன்மையாக எச்சரித்தபடி தானிருக்கிறோம் என்று தமிழ் மக்களுக்குக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அவ்வப்போது உரத்து முழங்கினால் மக்களை ஏமாற்றிவிடலாம் என்று கொஞ்சம் மொக்குத்தனமாகவே யோசிக்கும் மாவை போன்றவர்கள்தான், அரசுக்கு விதித்த காலக்கெடு முடிந்தபிறகு தீர்வு கிட்டும்வரை உண்ணாவிரதப் போராட்டம் என்று துணிந்து முழங்குகிறார்கள்.

தீர்வு கிட்டும் வரை என்றால், இடையிலே எழும்பாமல் உண்ணாவிரதத்தில் சாகும்வரை இருக்க வேண்டியிருக்குமே என்றெல்லாம் யோசித்து மினக்கெடாமல் மேடைக்கு மேடை அகிம்சைப் போராட்ட அறிவிப்பை சூடுபறக்க அடித்துவிட்டுக் கொண்டே வருகிறார் மாவையண்ணை.

ஆக்ரோசப் பேச்சு என்று வந்துவிட்டால், சொல்வது நடக்குமா நடக்காதா என்றெல்லாம் எண்ணிக் கிறுங்காதவர் அவர். அடுத்த மார்ச் மாதத்தில் வரும் ஜெனீவா திருவிழாவுக்குரிய அடுக்குகளை ஜனவரியிலேயே விறுவிறுப்பான முஸ்தீபுகளுடன் ஆரம்பித்து விட்டால், அதையே அகிம்சைப் போராட்டமாக மக்களை நம்பப் பண்ணி விடலாம்தானே என்றும் நம்பக் கூடியவர்தான்.

இலங்கை அரசைத் தண்டிப்பதற்கான சர்வதேசத்தின் கிடுக்கிப்பிடி, அடுத்த ஜெனீவாத் தீர்மானம் மூலம் மேலும் அங்கே இறுகிவருகையில், "அகிம்சைப் போராட்டம் என்றீர்களே, எங்கே அது?" என்றெல்லாம் நமது மக்கள் சில்லறைத்தனமாகக் கேட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள் என்பதையும் அவரறிவார்.

தொடர்கிறது, தமிழ் மக்களின் தலையில் தலைவர்களின் மிளகாய் அரைப்பு!

- ஆசிரியர்

# ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முனைகிறது சர்வதேச சமூகம்

## – என்கிறது அரசு –

சர்வதேச சமூகம் இலங்கையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதில் முனைப்பு காட்டி வருவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. உலகின் ஏனைய நாடுகளின் தலைவர்களை விடவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகம் என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

பல பில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிட்டு எப்படியாவது தமது கைப் பொம்மை ஒன்றை இலங்கையின் ஆட்சி பீடத்தில் அமர்த்த சர்வதேச நாடுகள் முயற்சிப்பதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டின் சில பகுதிகளை பிரிவினைவாத சக்திகளுக்கு தாரை வார்த்துக்கொடுத்த சில தலைவர்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முயற்சிக்கின்றனர். இவ்வாறு தேர்தலில் போட்டியிட முயற்சிக்கும் நபர்களுக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்ட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். நாட்டின் இருண்ட யுகத்தை மாற்றியமைத்த பெருமை ஜனாதிபதியையே சாரும் என அவர் குறிப்பிட்டுள்ளார். சில சர்வதேச நாடுகள் யுத்த வெற்றியை விரும்பவில்லை எனவும் நாட்டில் மீளவும் பிரச்சினைகளை ஏற்படுத்த முயற்சிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பெரும்பான்மை வாக்குகளுடன் மக்கள் இரண்டு தடவைகள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக தெரிவு செய்தனர். இரண்டு தடவைகள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தவரும், 28 தேர்தல் தோல்விகளை சந்தித்தவருமான ரணில் விக்ரமசிங்க இம்முறை தேர்தலில் போட்டியிட அருகதையற்றவர் என அவர் தெரிவித்துள்ளார்.

# புராதன பொருட்களை கடத்திய இருவர் கைது

புராதன பெறுமதி வாய்ந்த பொருட்கள் சிலவற்றை கனடாவிற்கு கொண்டு செல்ல முயற்சித்த இருவர் வவுனியா - புளியங்குளம் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த முச்சக்கர வண்டியொன்றை புளியங்குளம் பகுதியில் வைத்து வழிமறித்த பெரியமடு பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் சோதனை செய்துள்ளனர்.

அதன்போது குறித்த முச்சக்கர வண்டியில் இருந்து 5 சங்குகள் உள்ளிட்ட புராதன பெறுமதி வாய்ந்த பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் புராதன பொருட்களுடன் புளியங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# யானை தாக்கியதில் கணவன் பலி, மனைவி காயம்

புல்மோட்டை - மயிலக்குளம் பிரதேசத்தில் யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதோடு, அவரது மனைவி படுகாயமடைந்துள்ளார். நேற்றுமுன்தினம் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போதே இவர்கள் யானைத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர். சம்பவத்தில் பலியானவர் மஹசேனபுர பகுதியைச் சேர்ந்த 48 வயதான ஒருவர் எனத் தெரியவந்துள்ளது.

மேலும் இதன்போது காயமடைந்த மனைவி பதவிய வைத்தியசாலையில் இருந்து அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை புல்மோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ். மாநகர பகுதிகளிலுள்ள மலசலகூட கழிவுகளை அகற்ற திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர் பகுதிகளிலுள்ள 16,000 மலசலகூட கழிவுகளை அகற்றி கல்லுண்டாய் வெளிப் பகுதியில் உரிய முறையில் அழிக்கவுள்ளதாகவும் இதன் மூலம் 80,000 மக்கள் பயனடைவார்கள் என்றும் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் சமூக அணிதிரட்டல் அலுவலர் ரி.பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

யாழ்ப்பாண தரைத்தோற்றம் சுண்ணாம்புக்கல் பாறையால் ஆனது. பொதுவாக மலசலகூட குழிகளுக்கும் கிணறுகளுக்கும் இடையே 30 அடி இடைவெளி இருக்க வேண்டும்.

யாழ் நகர் பகுதிகளிலுள்ள பல கிணறுகளுக்கும் மலசல கூட குழிகளுக்கிடையிலான இடைவெளி 4, 5 அடியாகவே உள்ளது. அது மாத்திரமன்றி இந்த குழிகளின் ஆழத்தில் வித்தியாசம் இல்லாதுள்ளது.

இதன் காரணமாக மலசலகூட கழிவு நீர் கிணற்று நீருடன் கலக்கின்றது. 1990ஆம் ஆண்டு ஆய்வுகளிலேயே மலசலகூட நீர் காரணமாக தண்ணீர் மாசடைந்திருந்தமை கண்டறியப்பட்டு ஜீ.டி.இஸட் நிறுவனம் குடிநீர் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. பொதுவாக யாழ். மாவட்டத்தில் 4 வகையான தண்ணீர் பிரச்சினை காணப்படுகின்றது. அதாவது, சுண்ணாம்பு நீர் பிரச்சினை, நைத்திரேற்று நீர் அதிகமுள்ள பிரச்சினை, மலத்தொற்று பிரச்சினை, நைதரசன் செறிவு அதிகரித்த பிரச்சினை ஆகியவையாகும்.

யாழ். நகர்ப் பகுதிகளிலுள்ள கிணறுகளில் மலத்தொற்று அதிகமாக காணப்படுகின்றது. இதன் காரணமாக தொடர் புற்றுநோய், சமிபாட்டு நோய், சரும நோய் என்பன ஏற்படுகின்றது. என அவர் மேலும் தெரிவித்தார்.

# கைது செய்யப்பட்ட மீனவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

நெடுந்தீவு பொலிஸாரினாலும் யாழ்.கடற்றொழில் நீரியல்வளத்திணைக்களத்தினாலும் இலங்கைக்கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தப்பட்ட 24 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அண்மையில் காரைநகரிற்கு மேற்காக நான்கு படகுகளில் எல்லை தாண்டி கடற்றொழிலில் ஈடுபட்ட 16 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு யாழ். கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்த நிலையில் அவர்கள் நேற்றைய தினம் வரை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை நெடுந்தீவுக்கடற்பரப்பில் இரண்டு தடவைகளில் நான்கு இந்திய மீனவர்கள் கடலில் தத்தளித்த போது ஊர்காவற்றுறைப் பொலிஸாரினால் பிடிக்கப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்ற உத்தரவிற்கமைய நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த எட்டு மீனவர்களும் நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டிருந்த போது அவர்கள் 24 பேரையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கில் இந்திய மீனவர்களின் நான்கு இழுவைப்படகுகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# வேலைநிறுத்தத்திற்கு நீதிமன்றம் தடை

ரயில் ஊழியர்களின் தொழிற்சங்கங்கள் முன்னெடுத்துவரும் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

வேலை நிறுத்தப் போராட்டத்தால் பொது மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் தொடர்பில் முன்வைக்கப்பட்ட மனு ஒன்றை பரிசீலித்த பின்னர் நீதிமன்றத்தால் இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**“புனரமைக்கப்பட்ட பாதைகள், தொடருந்துகள் மணிக்கு 120 கி.மீ வேகத்தில் செல்வதற்கு உகந்த வகையில் அமைக்கப்பட்டுள்ளன. அதன் கருத்து கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்தை அடைவதற்கு முன்னரைப் போல எட்டு முதல் ஒன்பது மணி நேரம் எடுக்காமல், ஐந்து மணி நேரமே போதுமானதாக உள்ளது”**



# 24 வருடங்களுக்குப் பின் யாழ்ப்பாணத்திற்கு ரயில்

**சுலோசனா இராமையா மோகன்**

**நான்கு தசாப்தங்களாக வட பகுதியினர் அனுபவித்து வரும் போக்குவரத்து கஷ்டங்கள், களைப்பு என்பன இனி, ஒரு கடந்த கால விடயமாக மாறப் போகிறது. முன்புபோல் அவர்கள் பேருந்து நிலையங்களில் கிடந்து நலிவுறவோ அல்லது அளவுக்கு மீறிய தொகையினைக் கொடுத்து வாகனங்களை வாடகைக்கு அமர்த்தவோ வேண்டிய தேவை, இனிமேல் அவர்களுக்கு இருக்கப் போவதில்லை.**

முறையான போக்குவரத்து அமைப்புகள் இல்லாததால், கிட்டத்தட்ட நான்கு தசாப்தங்களாக வட பகுதியினர் அனுபவித்து வந்த சொல்லொணா துன்பங்கள் மற்றும் நீண்ட தூர பிரயாணக் களைப்பு என்பன ஒரு கடந்த கால விடயமாக மாறப் போகிறது.

அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் வட பகுதிக்கான முழு தொடருந்துப் பாதையும் இந்திய அரசாங்கத்தின் தலைமையின் கீழுள்ள இர்கோன் இன்ரர் நஷனலினால் மக்களிடம் கையளிக்கப்படவிருப்பதால், இலங்கையின் தென் பகுதியையோ அல்லது ஏனைய இடங்களையோ அடைவதற்கு அவர்கள் பேருந்து நிலையங்களில் கிடந்து நலிவுறவோ அல்லது அளவுக்கு மீறிய தொகையினைக் கொடுத்து வாகனங்களை வாடகைக்கு அமர்த்தவோ வேண்டிய தேவை, இனிமேல் அவர்களுக்கு இருக்கப்போவதில்லை.

1956ஆம் ஆண்டு முதல் இயங்கிவந்த யாழ்தேவி கடுகதி தொடருந்து, யுத்தம் காரணமாக தனது சேவையை தொடர இயலாமல் 1990ல் முழுமையாக நின்றுபோனது, காங்கேசன்துறைக்கும் மற்றும் வவுனியாவுக்கும் இடையேயான அதன் செயற்பாடு முற்றாக நிறுத்தப்பட்டது.

பல தசாப்தங்களாக வடக்கு தீபகற்பம் போரினால் பாதிக்கப்பட்டு, தொடருந்து அமைப்பு முழுவதும் செயற்பாடு அற்றுப் போனதால், குழப்பங்கள் வெடித்த போது மக்கள் தங்கள் கிராமங்களை விட்டு வெளியேற முடியாமல் அளப்பரிய துயரங்கள் ஏற்பட்டன.

யுத்த முடிவுக்குப் பின்னர், மதவாச்சி யிலிருந்து மடுப் பாதை வரையான 43 கி.மீ நீளமான தொடருந்து பாதை 2013, மே 14ல் ஆரம்பிக்கப்பட்டது, 90 கி.மீ நீளமான ஓமந்தை முதல் கிளிநொச்சி வரையான பாதை 2013, செப்ரம்பர் 14, முதல் செயற்பாட்டுக்கு வந்தது.

அதேவேளை கிளிநொச்சி முதல் பளை வரையான இருபத்தேழரை கி.மீ நீளமான பகுதி 2014, மார்ச் 2ல் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இப்போது ஓமந்தை - பளை தொடருந்துப் பாதையின் மீள் கட்டமைப்பு பூர்த்தியாகி, பளை - யாழ்ப்பாண தொடருந்து பாதை 2014 ஒக்ரோபர் 13 திங்கட்கிழமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவினால் திறந்துவைக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை 18 கி.மீ நீளமான தொடருந்து பாதை நீட்டிப்பு கட்டுமானப் பணி நடந்து வருகிறது. அது இந்த வருட முடிவில் பூர்த்தியாகி விடும் என்று இர்கோன் நிறுவன மேலதிக பொது முகாமையாளர் வி.கே.ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இந்தியர்களால் புதிதாக அமைக்கப்பட்ட தொடருந்து பாதையில் எந்த வித தொந்தரவும் இன்றி தொடருந்து வேகமாகச் செல்லக் கூடியதாக உள்ளதால் அதில் பயணம் செய்வது மகிழ்ச்சியான ஒன்று, தடைகளோ அல்லது குலுக்கமோ இல்லாமல் பயணிகள் தங்கள் சேரிடத்தை விரைவில் அணுக முடியும்.

“புனரமைக்கப்பட்ட பாதைகள், தொடருந்துகள் மணிக்கு 120 கி.மீ வேகத்தில் செல்வதற்கு உகந்த வகையில் அமைக்கப்பட்டுள்ளன. அதன் கருத்து கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்தை அடைவதற்கு முன்னரைப் போல எட்டு முதல் ஒன்பது மணி நேரம் எடுக்காமல், ஐந்து மணி நேரமே போதுமானதாக உள்ளது என்பதாகும்” என்று இர்கோன் சர்வதேச நிறுவனத்தின் தலைவர் ஜி.எல் குப்தா தெரிவித்தார்.

அனுராதபுரம் - ஓமந்தை பகுதிக்கான பாதை இந்தியாவிடம் வழங்கப்படவில்லை, அது இன்னமும் பண்டைய காலத்து தொடருந்து பாதையாக இருப்பதால் அந்தப் பயணம் நெளிந்து வளைந்து உயரமும் பதிவுமான பயணமாக உள்ளது. தொடருந்து, பளையை அடைவதற்காக ஓமந்தையை கடக்கும் போது இப்புதிய பாதைய்ய உடனடியாக உணரக்கூடியதாகவுள்ளது. தொடருந்து ஆட்டத்தை நிறுத்தி விடும் - மணிக்கு 100 கி.மீ வேகத்தில் சீரான ஓட்டமாக அது மாற்றப்படுகிறது.

“பிளாஸ் பட் வெல்டிங்கினால் தண்டவாளங்கள் சிறப்பாக பொருத்தப் படுவதால், இணைப்பை ஏற்படுத்த வேண்டிய தேவை இல்லை. அது அடுத்த தொடருந்து நிலையத்தை அடையும் வரை 22 கி.மீ வரை ஒரே தண்டவாளமாக இருப்பதால் ஆட்டமும் துள்ளலுமான பயணம் இடம் பெறுவதில்லை. அவற்றை இணைத்துள்ள குறுக்கு கட்டைகள் அடுத்த 50 வருடத்துக்கு தாங்கக் கூடியவை” என்று திட்ட முகாமையாளர் எஸ்.எல்.குப்தா தெரிவித்தார்.

இந்திய பொறியியலாளர்கள் மேலும் நடைபாதை புகையிரதக் கடவைகள், விரிவாக்க ஆழி இணைப்புகள் மற்றும் விசிறி வடிவ திருப்பங்கள் போன்ற நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய தொடருந்து பாதையை வழங்கியுள்ளார்கள்.

சமிக்ஞைகள் மற்றும் ஆறு தொடருந்துகள் உட்பட முழு வட மாகாண தொடருந்து திட்டத்துக்கும் (மதவாச்சியிலிருந்து தலைமன்னார் வரை மற்றும் ஓமந்தையிலிருந்து காங்கேசன்துறை வரை), மொத்தமாக 650 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகி உள்ளதாம். “இந்த தொடருந்து பாதை அமைப்பு அதி உயர் நவீன தரங்களையும் மற்றும் வசதிகளையும்” கொண்டுள்ளது.

சுமார் 1,500 கிலோமீட்டர் நீளமான இலங்கையின் மொத்த தொடருந்து பாதைகள் காலனித்துவ காலத்தில் கட்டப்பட்டவை, காலப் போக்கு மாறி விட்டதால் அவற்றை தர முயர்த்தவும் மற்றும் திருத்தங்கள் செய்வதற்கான அவசியமும் ஏற்பட்டுள்ளன.

குப்தா மேலும் கூறுகையில், சல்லிக் கற்கள் மற்றும் கல்லுடைக்கும் இயந்திரங்கள் போன்ற பொருட்கள் இலங்கையிலிருந்து பெறப்பட்டன எனினும் ஒவ்வொன்றும் 259 கி.கிராம் நிறையுள்ள கொன்கிரீட் குறுக்கு கட்டைகள் மற்றும் தண்டவாளங்கள் என்பன இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்றார்.

இந்த தொடருந்து பாதை புனர் நிர்மாணம், மேலதிக நிலங்களையோ அல்லது உடமைகளையோ கையகப் படுத்தவில்லை. பொறியியலாளர்கள் தெரிவித்ததன்படி, வடக்கு தொடருந்து பாதைத் திட்டத்தை முடிப்பதற்கு நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் 3,000 வரையான தொழிலாளர்கள் ஈடுபடுத்தப் பட்டார்களாம்.

வடக்கு தொடருந்து பாதையின் ஒரு பகுதியாக, தலைமன்னார் மற்றும் இராமேஸ்வரம் இடையேயான படகுச் சேவையை வெகு விரைவில் மீள ஆரம்பிக்க வசதியாக தலைமன்னாரில் ஒரு புதிய கப்பல்துறையும் கட்டப்பட வுள்ளது. இது இந்தியாவுக்கும் மற்றும் இலங்கைக்கும் இடையேயான தொடர்பை மேலும் அதிகரிக்கச் செய்யும். யுத்தத்தின் பின்னர் இலங்கையின் புனர்வாழ்வு, புனர் கட்டுமானம் மற்றும் நல்லிணக்க முயற்சிகளுக்கு உதவுவதற்கான இந்தியாவின் அர்ப்பணிப்பின் ஒரு பகுதியை, வட பகுதி தொடருந்து புனரமைப்பு திட்டத்தை

**வட பகுதிக்கான ரயில் பாதை 1894இல் திறக்கப்பட்டது, அது பொல்காவலயில் ஆரம்பித்து காங்கேசன்துறையில் முடிவடையும் 339 கி.மீ நீள பாதை. மற்றும் மதவாச்சியில் ஆரம்பித்து தலைமன்னார் பியரில் முடிவடையும் 106 கி.மீ நீளமான மன்னார் பாதை 1914இல் திறக்கப்பட்டது.**

நிறைவேற்றுவதற்கான தொகையான சுமார் 800 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான தொகையை சலுகை கடனாக இந்தியாவிடமிருந்து இலங்கை பெற்றுள்ளது.

இந்த திட்டத்தின் பிரதான பகுதிகளாக ஓமந்தை - பளை, பளை - காங்கேசன்துறை, மதவாச்சி - மடு, மடு - தலைமன்னார் பிரிவுகளுக்கான வட பகுதி தொடருந்து பாதைகளை புனரமைப்பது உட்பட மற்றும் அனுராதபுரத்திலிருந்து வட பகுதிக்கான சமிக்ஞை மற்றும் தொலைத் தொடர்பு அமைப்புகளை நிறுவுவதும் உள்ளடங்கும்.

“இந்தியா 9000 கோடி இந்திய ரூபாய்களை இங்கு அர்ப்பணிப்பு செய்துள்ளது.” அமெரிக்க டொலரில் குறிப்பிட்டால் அது 1.6 பில்லியன் டொலர்களாகும்.

# எல்லை நிர்ணயம் நிறைவடைந்ததும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்

## ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவிப்பு

(கொழும்பு)

எல்லை நிர்ணயப் பணிகள் நிறைவடைந்தவுடன் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் ஒத்தி வைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்த இருப்பதாக மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் ஏ.எல். எம். அதாஉல்லா தெரிவித்தார்.

மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள், உள்ளூராட்சி அதிகார சபையின் தேர்தல்கள் (திருத்தச்) சட்ட மூலங்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகள் வெற்றிடங்கள் நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) திருத்த சட்ட மூலம் என்பன தொடர்பான விவாதம் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

இங்கு உரையாற்றிய அரிய நேத்திரன் எம்.பி. மட்டக்களப்பில் உள்ளூராட்சி சபைகளுக்கும் வடக்கில் புதுக்குடியிருப்பு மற்றும்



முள்ளியவளை பிரதேச சபைகளுக்கும்உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்படாமல் ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

இந்த உள்ளூராட்சி சபைகளை த.தே.கூ. கைப்பற்றுவதாலேயே தேர்தல் நடத்தப்படாமல் ஒத்தி வைக்கப்படுவதாக குறிப்பிட்டார். இதற்குப் பதிலளித்த அமைச்சர் அதாஉல்லா உள்ளூராட்சி தேர்தல் திருத்தச் சட்டத்துக்கு அமைவாக எல்லை நிர்ணயப் பணிகள் முன்னெடுக்கப்படுகிறது. அதனாலே தேர்தல்கள் ஒத்துவைக்கப்பட்டன. இதற்கு வேறு பொய்க்காரணம் கற்பிக்க வேண்டாம்.

எல்லை நிர்ணயப் பணிகளை பூர்த்தி செய்ய டிசம்பர் வரை காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது. எல்லை நிர்ணயம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியானதும் ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படும் எனவும் அமைச்சர் அதாஉல்லா மேலும் குறிப்பிட்டார்.

# சிறுபோக செய்கைகளில் விளைச்சல்கள் குறைவடைந்துள்ளன

## என்கிறது விவசாய அமைச்சு

இந்த வருட சிறுபோகத்தில் நெல் மற்றும் சோளப் பயிர்ச் செய்கையின் விளைச்சல்கள் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

வறட்சியான காலநிலை காரணமாக கடந்த வருடத்தை விட இந்த வருடம் செப்ரெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் விளைச்சல் 30 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்துள்ளதாக விவசாயத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

வருடாந்தம் 1.2 மில்லியன் தொன் நெல் விளைச்சல் எதிர்பார்க்கப்படுகின்றது.

அறுவடை காலத்தில் வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவிய வறட்சியான காலநிலை இந்தமுறை பெரிதும் தாக்கம் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் பெரும்போகத்தில் 3.6 மில்லியன் தொன் நெல் விளைச்சல் பெறப்பட்ட போதும், கடந்த வருடத்தை விட 22 சதவீதம் குறைவாகவே கணிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சோளப்பயிர்ச் செய்கையில் இந்த வருடம் 2 இலட்சத்து 44 ஆயிரத்து 213 தொன் விளைச்சல் பெறப்பட்ட போதிலும் இது கடந்த வருடத்தை விட 2 சதவீதம் குறைவாகவே கணிப்பிடப் பட்டுள்ளது.

# ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை நிறுத்த ஹெல உறுமயவிற்கு ஆற்றல் இல்லை

## என்கிறார் கம்மன்பில



ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை களமிறக்கும் ஆற்றல் ஜாதிக ஹெல உறுமய கட்சிக்கு கிடையாது என கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் உதய கம்மன்பில ஒப்புக்கொண்டுள்ளார். ஜனாதிபதி தேர்தல் ஒன்றுக்கு வேட்பாளரை நிறுத்தி வெற்றியீட்டும் அளவிற்கு கட்சிக்கு அனுபவ முதிர்ச்சி கிடையாது.

பொதுபல சேனா அமைப்புடன் சிறந்த நல்லுறவை பேணி வருகின்றோம்.

பொதுபல சேனா மற்றும் ஜாதிக ஹெல உறுமய கட்சி ஆகியனவற்றுக்கும் இடையில் கொள்கைகள் ஒரே விதமானவை. செயற்பாடுகளில் மட்டுமே ஒரு சில வேறுபாடுகள் காணப்படுகின்றன.

பொதுபல சேனாவுடன் பல சந்தர்ப்பங்களில் இணைந்து செயற்பட்டுள்ளோம். எதிர்காலத்திலும் இரண்டு தரப்பும் இணைந்து செயற்பட விரும்புகின்றோம். நாட்டுக்கு தேவையான சந்தர்ப்பங்களில் பௌத்த சக்திகள் என்ற ரீதியில் நாம் இணைந்து செயற்பட்டுள்ளோம். எனினும் நாம் கட்சி என்ற ரீதியில் வாக்களிப்பு முடிவுகளில் 10 வீதமான வாக்குகளே பெற்றுக்கொள்கின்றோம்.

எனவே நாம் எப்படி ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியும்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டக் கூடிய அனுபவ முதிர்ச்சி இல்லாத காரணத்தினாலேயே பொதுபல சேனா அமைப்பு, பௌத்த தலைவர் ஒருவரை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடச் செய்ய உள்ளதாக அறிவித்துள்ளது. நாட்டின் ஏகபோக பௌத்த சக்தியாக ஜாதிக ஹெல உறுமயவை நாம் கருதவில்லை.

பௌத்த சக்தி என்ற ரீதியில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பௌத்த அமைப்புக்களுடன் இணைந்து செயற்பட முடியும் என உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

# தேசிய ஓய்வூதியர் தின நிகழ்வு ஜனாதிபதி தலைமையில்

தேசிய ஓய்வூதிய தின நிகழ்வு நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கொழும்பு வெதமுல்ல ஓய்வூதிய திணைக்கள ஓய்வு விடுதியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சுமார் 3000இற்கும் மேற்பட்ட ஓய்வுபெற்றவர்கள் கலந்து கொண்டு ஜனாதிபதிக்கு நினைவுச்சின்னமொன்றை வழங்கி ஜனாதிபதியை கௌரவித்தனர்.

இதன்போது ஜனாதிபதி அரசாங்க உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றவர்களுடன் சிநேகபூர்வமாக உரையாடி அவர்களது சுகநலன்களை விசாரித்தார்.

இந்நிகழ்வில் அமைச்சர்களான டப்ளியூ.டி.ஜே. செனவிரத்ன-கெஹெலிய ரம்புக்வெல- பிரதி அமைச்சர் விஜய தஹநாயக்க-நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால- அரசசேவைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் பி.பீ.அபேகோன்-மத்திய வங்கித் தலைவர் அஜித் நிவாட் கப்ரால் ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் சுனில் ஹெட்டியாராச்சி- ஆகியோர் கலந்துகொண்டனர்.

# உயர்தரத்தில் சித்தியடைந்தவர்களை பல்கலையில் இணைக்க நடவடிக்கை

கடந்த வருடம் நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை, அடுத்த மாத மளவில் பல்கலைக்கழகங்களில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

புதிதாக மாணவர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வரும் சந்தர்ப்பத்தில், பல்கலைக்கழக மாணவர்களில் குறிப்பிட்ட ஒரு பகுதியினர் பல்கலைக்கழகங்களை முடுவதற்கு செயற்பட்டு வருவதாக ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் ஷெனிகா ஹிரிம்புரேகம குறிப்பிடுகின்றார்.

எவ்வாறாயினும், பெரும்பாலான மாணவர்கள் அமைதியான முறையில் தங்களின் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ஆர்வமாக உள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

புதிய மாணவர்களுக்கான பாடத் தெரிவுகளை மாணவர்களுக்கு அனுப்பிவைக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் கூறினார்.

# சிகரெட்டின் விலை நேற்றுமுதல் அதிகரிப்பு

(கொழும்பு)

சிகரெட்டுகளின் விலை நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கோர்லிப் ரக சிகரெட் ஒன்றின் விலை இரண்டு ரூபாவினாலும் டன்ஹில் ரக சிகரெட் ஒன்றின் விலை ஒரு ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கோர்லிப் சிகரெட் ஒன்று 30 ரூபாவாகவும் டன்ஹில் சிகரெட் ஒன்று 31 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# மீன்பிடி துணைக்கருவிகளுக்கென 4200 மில்லியன் ஒதுக்கீடு

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

மீனவர்களுக்கான மீன்பிடி துணைக்கருவிகளுக்கென 4200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன நேற்று



முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுபற்றி அமைச்சர் ராஜித தெரிவிக்கையில்:

தற்போது 1500 மில்லியன் ரூபா பெறுமதியான துணைக் கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டு மீனவர்களுக்கு விநியோகிக்கும் பணி இடம்பெற்று வருகிறது. இத்தொகை ஒதுக்கப்பட்ட மொத்த தொகையில் 39.04 சதவீதமாகும். இவற்றினை விட சுமார் 37000 நீர் மிதப்புச் சட்டைகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன என்றார்.

# இலங்கைப் பெண் கொலை ஆப்கானிஸ்தானியர் கைது

குவைத்தில் இலங்கைப் பெண் ஒருவரை மின்சாரம் பாய்ச்சி கொலை செய்ததாக கூறப்படும் ஆப்கானிஸ்தானியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் குறித்து குவைத் பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

தமக்கு கிடைத்த தகவல் ஒன்றின்படி, பஹாலில் பிரதேசம் ஒன்றில் இருந்து 33வயதான இலங்கைப் பெண்ணின் சடலம் மீட்கப்பட்டது.


இதனையடுத்து, சுமார் 3 மணியத்தியாலங்களுக்குள் இறந்த பெண்ணின் நண்பர் என்ற ஆப்கானிஸ்தானியர் கைது செய்யப்பட்டார். விசாரணைகளின் போது தமது நண்பருடன் குறித்த இலங்கைப் பெண் தகாத உறவை கொண்டிருந்ததாக சந்தேகித்தே தாம் அவரைக் கொலை செய்த தாக ஆப்கானிஸ்தானியர் ஏற்றுக்கொண்டார் என தெரிவித்ததாக குவைத் பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

# இரு சிறுமிகள் மீது துஷ்பிரயோகம் செய்தவர் கைது

திருகோணமலை, குச்சவெளி, வடலிக்குளம் பகுதியில் இரண்டு சிறுமியரை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக கூறப்படும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கிடைத்த தகவலுக்கு அமைய 18 வயதான சந்தேகநபர் நேற்றுக்காலை கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். 12 மற்றும் 13 வயது சிறுமிகளை அழைத்துச் சென்று சந்தேகநபர் பாலியல் உறவில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சிறுமிகளிடமும் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர். இதனையடுத்து சட்ட மருத்துவ பரிசோதனைக்காக சிறுமிகள் திருகோணமலை சட்ட வைத்திய அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபரை திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குச்சவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





கைதடி மேற்கு சரஸ்வதி முன்பள்ளியின் ஆசிரியர் தினநிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது ஆசிரியர்கள் கௌரவிக்கப்படுவதையும் ஆசிரியர்களுடன் முன்பள்ளி மாணவர்கள் நிற்பதையும் காணலாம். (51)

# காணிப்பிரச்சினை தொடர்பில் நடவடிக்கை எடுக்கவேண்டும்

## வடமாகாண சபை எதிர்க்கட்சி தலைவர் தவராசா தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

கோவில்கள், பள்ளிவாசல்கள், தேவாலயங்களுக்குச் சொந்தமான காணிகளில் குடியிருக்கும் மக்களுக்கு அந்தக்காணிகளை சொந்தமாக்க மாகாண சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.

காணிப்பிரச்சினை தொடர்பாக நேற்றுமுன்தினம் வடமாகாண சபையில் இடம்பெற்ற அமர்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உங்களில் எத்தனை பேருக்கு தெரியும் யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கோவில் காணிகளில் 2,146 குடியிருப்பாளர்கள் வாழ்கின்றார்கள் என்று. இது யாழ்.மாநகர சபையில் மட்டும் வடமாகாணத்தை எடுத்துக் கொண்டால் தொகை மிக அதிகம் இராணுவம் இருப்பதை மட்டும் இங்கு கதைக்கிறீர்கள்.

இம்மக்கள் வீட்டைத் திருத்த முடியாது, வங்கிக்கடன் பெற முடியாது, மின்சாரம் பெறமுடியாது எவ்வளவோ பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

இவர்களுக்கு இக்காணிகளை வழங்க ஒரு பிரேரணையைக் கொண்டு வந்து அதனை செயறபடுத்துங்கள், எல்லோரும் அதற்கு ஒத்துழைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# தேசிய மட்டப் போட்டிக்குதெரிவான ஆங்கில மொழி நாடகங்கள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணக் கல்வித்திணைக்களத்தினால் வடமாகாணப் பாடசாலைகளிற்கிடையே நடாத்தப்பட்ட ஆங்கில நாடகப் போட்டியில் 1 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்ட பாடசாலைகள் தேசிய மட்ட ஆங்கில நாடகப்போட்டிக்குத் தெரிவாகியுள்ளன.

தேசிய மட்டப்போட்டிக்குத் தெரிவாகியுள்ள பாடசாலைகளின் நாடகப்போட்டிகள், கெப்பிட்டிக் கொலாவ மாவத்தை, கொழும்பு 7 இல் அமைந்துள்ள ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா மகாவித்தியாலயத்தில் பின்வரும் ஒழுங்கில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பப் பிரிவிற்கான ஆங்கில உரையாடல் நாடகப் போட்டியில் 1 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்ட யா/சென்.ஜோன் பொஸ்கோ வித்தியாலய மாணவர்களுக்கான போட்டி இன்று மு.ப. 10 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது.

கீழ்ப்பிரிவுக்கான ஆங்கில உரையாடல் நாடகப்போட்டியில் 1 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்ட யா/சென்.ஹென்றியரசர் கல்லூரி மாணவர்களுக்கான போட்டி நாளை மு.ப. 10 மணி தொடக்கம் 5 மணி வரை நடைபெறும்.

மேற்பிரிவுக்கான ஆங்கில கவிதை சார் நாடகப் போட்டியில் 1 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்ட யா/உடுவில் மகளிர் கல்லூரி மாணவர்களுக்கான போட்டி எதிர்வரும் 18 ஆம் திகதி மு.ப. 10 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறும்.

மேற்பிரிவிற்கான ஆங்கில உரையாடல் நாடகப போட்டியில் 1 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்ட வ/வவுனியா தமிழ் மகாவித்தியாலய மாணவர்களுக்கான போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி மு.ப. 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும். மேற்படி போட்டிகளுக்கான அனுமதி அட்டைகள் சம்மந்தப்பட்ட பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வடமாகாண கல்வித்திணைக்கள ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.வர்ணகுலராஜா அறிவித்துள்ளார். மேலதிக தகவல்கள் தேவைப்படுவோர் 077 9122739 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (06)

# பொன்விழா நிகழ்வு குப்பிளானில்

(யாழ்ப்பாணம்)

குப்பிளான் கிராமம் உருவாகி 50 ஆண்டுகள் நிறைவையொட்டி பொன்விழா நிகழ்வுகள் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்த வகையில் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தினால் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்று நடாத்தப்படவுள்ளது.

இக்கிராமம் தனியாக உருவாகி 50 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு பொன்விழா நிகழ்வாக இக்கிராம பொது அமைப்புக்கள் பல்வேறுவிதமான நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளன.

இந்த நிலையில் விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகம் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியினை நடாத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# மறைக்கல்வித்தேர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மறைக்கல்வி நடுநிலையத்தினால் நடாத்தப்படும் கத்தோலிக்க மறைக்கல்வித்தேர்வு இன்று காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரையும் நடைபெறவுள்ளது.

இந்தத் தேர்வு தரம் 3 முதல் தரம் 11 வரையான மாணவர்களுக்கு நடாத்தப்படவுள்ளன.

கிறிஸ்தவ மாணவர்களிடையே மறைக்கல்வியை வளர்க்கும் முகமாக நடாத்தப்படும் இத்தேர்வு தொடர்பான அறிவுறுத்தல் மற்றும் சுட்டெண் என்பன பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# முரசின் இன்றைய பலன்



(11.10.2014 சனிக்கிழமை)

ஜய வருஷம் புரட்டாதி மாதம் 25 ஆம் திகதி.
மரணயோகம் / திருதியை.
பரணி நட்சத்திரம் மு.பகல். 08.19 வரை. பின் கார்த்திகை.
இராகு காலம் 09.02 - 10.32 வரை. சுபநேரம் 03.02 - 04.32 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** உங்களின் பணிச்சுமையுடன் பிறரின் மேலதிகமான பொறுப்புக்களையும் ஏற்க நேரிடும், சீதனப்பிரச்சினை தீர்ந்து விவாகம் நடைபெறல்.

**ரிஷபம்** நிலுவைகளைப் பெற்போக்குவரத்தினைக் கைவிட்டு தொலைபேசி மூலம் தொடர்புகொள்ளுதல், நண்பரின் தீடீர் மறைவை எண்ணி அதிர்ச்சி அடைதல்.

**மிதுனம்** விரும்பிய இடத்திற்கு இடமாற்றம் ஏற்பட்டதை நினைத்து ஆனந்தப்படல், குடும்ப சூழ்நிலையால் அமைதிகெடல்.

**கடகம்** புதிய யுக்தியை மேற்கொண்டதால் வியாபாரம் அமோகமாக களைகட்டுதல், குடும்பத்தலைவர் திடீரென நோய் வாய்ப்படல்.

**சிம்மம்** ஆடம்பரச் செலவுகளை ஓரங்கட்டிவிட்டு சேமிப்பில் கவனஞ் செலுத்தல், உத்தியோகத்தில் இழந்த சலுகைகளை மீண்டும் பெறல்.

**கன்னி** அறிவுக்கு முதலிடம் கொடுத்து செயற்படுங்கள், திறமைகளால் ஏனையவர்கள் உவகை அடைதல்.

**துலாம்** நண்பர்கள் வலியவந்து உறவுக்கு கரம் நீட்டுவார்கள், அதிரடி செயற்பாடுகளினால் வியாபாரத்தில் ஏற்பட்ட போட்டிகளை வென்றெடுத்தல்.

**விருச்சிகம்** மனதில் தேங்கிய துயரவெள்ளம் வற்ற ஆத்மீகத்தில் ஈடுபாடும், நண்பரின் தரிசனமும் கிட்டுதல்.

**தனுசு** பெற்றோர்களின் நினைவாக அநாதைகள், ஏதிரிகளுக்கு தானதர்மம் செய்யமுற்படல், நண்பருடன் முரண்பட்டு நட்புக்கெட்டுவிடல்.

**மகரம்** கொடுக்கல் வாங்கலில் நிலவிய பிரச்சினைகள் சுமுகமாகியதால் நிம்மதி பிறத்தல், வியாபாரத்தில் புதிய யுக்திகளை மேற்கொள்ளல்.

**கும்பம்** புதிதாக ஒப்பந்தம் செய்யமுன் ஆலோசனைகள் கேட்டல் விழாவினை நடாத்துவதற்கு நண்பர் குழாமுடன் கலந்துரையாடுதல்.

**மீனம்** அநாவசியத்தலையீட்டையும் செலவுகளையும் கைவிட்டதால் விமோசனம் தக்கவைத்தல். நேரிடையான தலையீடு அவசியம் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.



# முரளியின் குறிக்கோள்

(கொழும்பு)

உலகிலுள்ள அனைத்து சுழல்பந்து வீச்சாளர்களுக்கும் சிறந்த முறையில் பந்து வீச உதவ வேண்டும் என்பதே எனது ஒரே குறிக்கோள் என இலங்கை அணியின் முன்னாள் சுழல்பந்து வீச்சு ஜாம்பவான் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

நான் கொல்கத்தா மாநில அணியுடன் 3 வருடங்களுக்கு ஒப்பந்தம் செய்துள்ளேன். வருடத்திற்கு 30 நாட்கள் என அந்த அணிக்கு பயிற்சி அளிக்கவுள்ளேன். கரீபியன் லீக் தொடரிலும் விளையாட அழைப்பு வந்துள்ளது. ஆனால் நான் அங்கு செல்லவில்லை. அதே போல் பிக்போஸ் லீக் தொடரிலும், ஐ.பி.எல். தொடரிலும் இனி நான் விளையாடப் போவதில்லை.

எதிர்காலத்தில் எனது ஒரே நோக்கம் உலகிலுள்ள அனைத்து சுழல்பந்து வீச்சாளர்களுக்கும் சிறந்த முறையில் பந்து வீச உதவ வேண்டும் என்பதாகும் எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியின் முன்னாள் சுழல்பந்து ஜாம்பவானாக வலம் வந்த முத்தையா முரளிதரன் பல்வேறு சாதனைகளை படைத்துள்ளார். இவர் டெஸ்ட் போட்டிகளில் 800 விக்கெட்டுகளை வீழ்த்தி உலக சாதனையும் புரிந்துள்ளார்.

அண்மையில் நிறைவடைந்த பிக் போஸ் லீக் தொடரில் விளையாடிய முத்தையா முரளிதரன் 16 போட்டிகளில் விளையாடி 19 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கால்பந்தில் அசத்தும் மஹேல

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியின் ஜாம்பவான் ஜெயவர்த்தன கால் பந்து விளையாட்டிலும் கலக்கல் வீரராக வலம் வருகிறார்.

கிரிக்கெட் வரலாற்றில் பல சாதனைகள் புரிந்த ஜெயவர்த்தன, சமீபத்தில் நடைபெற்று முடிந்த பாகிஸ்தான் அணிக்கு எதிரான தொடரோடு டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றார்.

இதனையடுத்து இரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சி கொடுக்க நினைத்த அவர் கால்பந்து விளையாட்டில் கால்பதித்துள்ளார்.

அண்மையில் மருதானை சாஹிரா கல்லூரி பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் சாஹிரா அணிக்கும், நட்சத்திர கிரிக்கெட் வீரர்கள் உள்ளடங்கிய நட்சத்திர அணிக்கும் இடையிலான கால்பந்து போட்டி நடைபெற்றது.

இதில் ஆர்ஜென்ரீனா அணியின் நட்சத்திர வீரர் மெஸ்சி போல் கால்பந்து விளையாட்டில் கலக்கிய ஜெயவர்த்தன தனது நட்சத்திர அணிக்காக 3 கோல்களை அடித்து இரசிகர்களை உற்சாகப்படுத்தினார்.

சமிந்த வாஸ், சம்பக ராமநாயக்க, உபுல் சந்தன மற்றும் கிரேம் லப்ரூய் ஆகியோரை கொண்ட நட்சத்திர அணி, சாஹிரா அணிக்கு எதிராக 6 கோல்களை போட்டு வெற்றி பெற்றது.

# சுனில் நரைனுக்குச் சதி

## சந்தேகம் கொள்ளும் லொயிட்

சுனில் நரைன் பல ஆண்டுகளாக இது போன்று தான் பந்து வீசி வருகிறார். ஆனால் திடீரென்று தடை விதிப்பது ஆச்சரியமாக இருக்கிறது. அவர் ஒரே மாதிரித்தான் பந்து வீசுகிறார். அதில் என்ன மாற்றத்தை கண்டுபிடித்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அவர்களது முடிவில் எனக்கு சந்தேகம் இருக்கிறது என மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முன்னாள் கப்டன் கிளைவ் லொய்ட் தெரிவித்துள்ளார்.

# இத்தாலி வீரருக்கு அபராதம்




(ஷாங்காய்)

இரசிகர்களிடம் மோசமாக நடந்து கொண்ட இத்தாலி வீரர் பேபியோ பாக்னினிக்கு 1 இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சீனாவில் ஷாங்காய் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகின்றது. இதன் முதல் சுற்றில் உலக தரவரிசையில் 17ஆவது இடத்திலுள்ள இத்தாலியின் பேபியோ பாக்னினி, தகுதிச்சுற்றில் இருந்து முன்னேறிய சீனாவின் வாங் சுகானிடம் (553ஆவது இடம்) 6-7, 4-6 என, வீழ்ந்தார்.

இந்தக் கோபத்தில் இரசிகர்களை நோக்கி, தனது நடுவிரலை காண்பித்து சர்ச்சை ஏற்படுத்தினார். தொடர்ந்து போட்டி முடிந்ததும், சுகானிடம் கைகொடுக்கும் போது, முரட்டுத்தனமாக நடந்து கொண்டார். இதையடுத்து, பாக்னினிக்கு 1 இலட்சம் அபராதம் விதிக்கப்பட்டது.



# காலிறுதியில் பெடரர், ஜோகோவிச்

(ஷாங்காய்)

ஷாங்காய் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரில் முதல்நிலை வீரரான ஜோகோவிச், ரோஜர் பெடரர் ஆகியோர் காலிறுதிக்கு தகுதி பெற்றனர்.

முன்னணி வீரர்கள் பங்கேற்கும் ஷாங்காய் மாஸ்டர் ரென்னிஸ் தொடர் சீனாவின் ஷாங்காய் நகரில் நடைபெற்று வருகின்றது. 3ஆம் நிலை வீரரான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் 2ஆம் சுற்றில் ஆர்ஜென்ரீனாவின் லியோனர்டோ மேயரை எதிர்த்து விளையாடினார். முதல் செட்டை 7-5 என்ற கணக்கில் வென்ற பெடரர் 2ஆவது செட்டை 3-6 என்ற கணக்கில் இழந்தார்.

பரபரப்பான 3ஆவது செட் டைபிரேக்கர் வரை நீண்டது. கடைசி செட்டில் மட்டும் 5 முறை மேயரின் புள்ளியைத் தகர்த்து பெடரர் தனது தோல்வியைத் தவிர்த்தார். இறுதியில் அவர் கடைசி செட்டை 7-6 (9-7) போராடி வென்றார்.

இதேவேளை, நேற்று முன்தினம் நடைபெற்ற 3ஆம் சுற்றுப் போட்டியில் முதல்நிலை வீரரான சேர்பியாவின் ஜோகோவிச் 6-3, 4-6, 6-4 என்ற செட்களில் ரஷ்யாவின் குகுஷ்கின்னையும், ஸ்பெயினின் டேவிட் பெரர் 2-6, 6-1, 6-2 என்ற செட்களில் இங்கிலாந்தின் ஆன்டி முர்ரேவையும் வென்று காலிறுதிக்கு தகுதி பெற்றனர்.



# கோடிகளை அள்ளுவதில் டோனி ஐந்தாமிடம்

(மும்பை)

விளம்பரம் மூலம் வருவாய் குவிக்கும் உலகின் முதல் 10 வீரர்களில் இந்திய கிரிக்கெட் அணி கப்டன் மகேந்திர சிங் டோனி 5ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

விளம்பரங்கள் மூலம் அதிக வருவாய் ஈட்டும் வீரர்கள் பட்டியலை ஆண்டுதோறும் போபர்ஸ் இதழ் வெளியிட்டு வருகிறது. அதன்படி, இந்தாண்டுக்கான முதல் 10 வீரர்கள் பட்டியலை தற்போது வெளியிட்டுள்ளது. இதில், இந்தியா சார்பில் டோனி மட்டுமே இடம் பெற்றுள்ளார். இவர் தனது துடுப்பில் விளம்பரத்தை வெளியிட ஆண்டுக்கு 25 கோடி பெறுகிறார். இதைத்தவிர, பல்வேறு விளம்பரங்கள் மூலம் ஆண்டுக்கு 122 கோடி பெறுகிறார். இதன் மூலம் அவர் 5ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். கடந்தாண்டு டோனி 128 கோடி வருவாய் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இப்பட்டியலில் அமெரிக்காவின் கூடைப்பந்தாட்ட வீரர் ஜேம்ஸ் முதலிடத்தைப் பிடித்துள்ளார். இவரது வருவாய் 325 கோடி. 2ஆவது இடத்தை கோல்ப் வீரர் அமெரிக்காவின் டைகர் உட்ஸ் பெற்றுள்ளார். தடகள வீரர் உசைன் போல்ட் (ஜமேக்கா) 6ஆவது இடத்தையும், ரியல் மட்ரிட் கால்பந்து நட்சத்திரம் கிறிஸ்டியானோ ரொனால்டோ (போர்த்துக்கல்) 7ஆவ்து இடத்தையும், மெஸ்சி (ஆர்ஜென்ரீனா) 9ஆவது இடத்தையும், , ஸ்பெயினின் ரென்னிஸ் நட்சத்திரம் நடால் 10ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

இந்தப் பட்டியல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இரண்டாவது ஒரு நாள் இன்று மோகித்திற்குப் பதில் இசாந்

(புதுடில்லி)

கொச்சியில் நடைபெற்ற ஒருநாள் போட்டியில் காயமடைந்த மோகித் சர்மாவுக்குப் பதில், இசாந்த் சர்மா இந்திய அணியில் சேர்க்கப்பட்டார்.

இந்திய, மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான ஐந்து போட்டிகளைக்கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் போட்டி கொச்சியில் நடைபெற்றது.

இப்போட்டியில் இந்திய அணியின் இளம் வேகப்பந்து வீச்சாளர் மோகித் சர்மா, மொத்தம் 9 ஓவர்கள் பந்துவீசி செய்து, 61 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட் கூட கைப்பற்றவில்லை. இதனிடையே, கொச்சியில் நடைபெற்ற போட்டியில் மோகித் சர்மா காயத்தால் அவதிப்பட்டார். இதனால், இவருக்குப் பதில் அனுபவ வேகப்பந்து வீச்சாளர் இசாந்த் சர்மா,இந்திய அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடைசியாக கடந்த 2014, ஜனவரி 22இல் நியூசிலாந்துக்கு எதிரான ஹமில்டன் ஒருநாள் போட்டியில் இவர் பங்கேற்றார். இதன் பின், பங்களாதேஷ் தொடர், ஆசிய கோப்பை மற்றும் சமீபத்திய இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடர்களில் இசாந்த் சேர்க்கப்படாமல் இருந்தார்.

தற்போது, 9 மாதங்களுக்குப் பின் இந்திய ஒருநாள் அணியில் மீண்டும் இடம் பெற்றுள்ளார். இன்று டில்லியில் நடைபெறவுள்ள மே.தீவு அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் இசாந்த், பங்கேற்கவுள்ளார்.

இன்றைய போட்டியில் நட்சத்திர வீரர் ஹோலி சிறப்பாக செயற்படுவார் ஏன்ற நம்பிக்கை உள்ளது. அவர் சிறந்த வீரர். அணியின் வெற்றிக்கு வித்திடக்கூடிய வீரர்களில் இவரும் ஒருவர் என்பதில் ஐயமில்லை. ஹோலி நிச்சயம் இன்றைய போட்டியில் சிறப்பாக செயற்படுவார் எனறு எதிர்பார்க்கின்றோம் என ரவி சாஸ்திரி தெரிவித்துள்ளார்.


# அருணோதயாவின் முத்துக்கள்



பவித்திரா



நப்தலி ஜொய்சன்



சாத்வீகா



நிதுசன்



சாள்ஸ் அன்ரனி



லவணன்

(அளவெட்டி)

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டியில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி நான்கு தங்கம், மூன்று வெள்ளி, ஒரு வெண்கலம் அடங்கலாக எட்டு பதக்கங்களை வென்று வடமாகாணத்திற்கு பெருமை சேர்த்துள்ளது. அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டி கடந்த 2ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரை கொழும்பு சுகததாஸ விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இதில் வடமாகாணம் 189 புள்ளிகளைப் பெற்று ஐந்தாமிடத்தைப் பிடித்துள்ளது. இதில் 78 புள்ளிகளை அளவெட்டி அருணோதயக் கல்லூரி வீர, வீராங்கனைகள் வடமாகாணத்திற்கு பெற்றுக் கொடுத்துள்ளனர். வழமை போன்று கோலூன்றிப் பாய்தல் போட்டியில் ஆதிக்கம் செலுத்திய அளவெட்டி அருணோதயக் கல்லூரி நான்கு தங்கம், மூன்று வெள்ளி, ஒரு வெண்கலம் அடங்கலாக எட்டு பதக்கங்களை வடமாகாணத்திற்கு ஈட்டிக் கொடுத்துள்ளது. இதில் 21 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் அ. பவித்திரா புதிய சாதனையை நிலைநாட்டியமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் அருணோதயக் கல்லூரி வரலாற்றில் கோலூன்றிப் பாய்தல் போட்டியில் இந்த ஆண்டு நான்கு தங்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

பதக்கம் வென்றோர் விபரம் வருமாறு: 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் 3.90 மீற்றர் பாய்ந்த க. நப்தலி ஜொய்சன் தங்கம், இதே வயதுப் பிரிவில் மோ. தனிஸ் 3.30 மீற்றர் பாய்ந்து வர்ண விருது, 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் ப. சாத்வீகா 2.60 மீற்றர் பாய்ந்து தங்கம், இதே வயதுப் பிரிவில் எஸ். மேரி நிலக்சனா 2.35 மீற்றர் பாய்ந்து வெண்கலப் பதக்கம், 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் பா. நிதுசன் 4.05 மீற்றர் பாய்ந்து தங்கம், இதே வயதுப் பிரிவில் ம. சாள்ஸ் அன்ரனி 3.95 மீற்றர் பாய்ந்து வெள்ளி, 21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் பா. லவணன் 3.85 மீற்றர் பாய்ந்து வெள்ளி, 21 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் அ. பவித்திரா 3.17 மீற்றர் பாய்ந்து புதிய சாதனையுடன் தங்கம், இதே வயதுப் பிரிவில் ஐ. மேரி பவுஸ்தீனர 2.85 மீற்றர் பாய்ந்து வெள்ளிப் பத்க்கத்தையும் வென்று பாடசாலைக்கும், மாகாணத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

இச்சாதனைகளைப் படைத்து கல்லூரிக்கும், மாவட்டத்திற்கும், மாகாணத்திற்கும் பெருமை சேர்த்த வீரர்கள் மற்றும் பயிற்றுவித்த உடற்கல்வி பொறுப்பாசிரியர் பாகீஸ்வரன், போட்டிக்கு அழைத்துச் சென்று ஊக்கமளித்த ஆசிரியர்கள், பழைய மாணவர்களான ம. கபிலன், க. திருபானந்தன், செல்வி. செ. சிவசோதி, ந. சுகுனேந்திரன் ஆகியோருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார். (93)



தனிஸ்



மேரி நிலக்சனா



மேரி பவுஸ்தீனா

## விளையாட்டு செய்திகள்

## தேசிய மட்ட கால்பந்து பதுளையில் இன்று

(பதுளை)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடாத்தப்படும் தேசிய மட்ட கால்பந்தாட்டப் போட்டி இன்றைய தினம் (சனிக்கிழமை) பதுளை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. விலகல் முறையில் நடைபெறவுள்ள இப்போட்டித் தொடரில் அனைத்து மாவட்ட அணிகளும் பங்குகொள்ளவுள்ளதாகவும், யாழ். மாவட்ட அணி முதல் போட்டியில் அம்பாறை மாவட்ட அணியை எதிர்கொள்ளவுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)



## யாழ்.இந்துவிற்கு இரு பதக்கங்கள்

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டியில் யாழ் இந்துவிற்கு இரு பதக்கங்கள் கிடைத்துள்ளன. ஒரு தங்கம் ஒரு வெள்ளி பதக்கங்கள் உட்பட்ட இரு வர்ண விருதுகளும் வெல்லப்பட்டுள்ளன. 21 வயதிற்குட்பட்ட ஆண்களிற்கான உயரம் பாய்தல் போட்டியில் யாழ் இந்துவின் வீரன் கந்தசாமி தனுஜன் தங்கப் பதக்கத்தையும் வர்ண விருதையும் வென்றுள்ளார்.

இதேவேளை வசீகரன் ஜஸ்மினன் 21 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் வர்ண விருதையும் பெற்றுக்கொண்டார்.

மேலும் இவ் இருவரையும் இவர்களது வெற்றிக்கு உறுதுணையாக இருந்த சுவாமிநாதன் ஆசிரியரையும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சமூகம் பாராட்டுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (48)

## ஐந்தாமிடம் வடமாகாணம்

(கொழும்பு)

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டு விழாவில் மேல் மாகாணம் 1118 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பிடித்துள்ளது. இதில் வடக்கு மாகாணம் 189 புள்ளிகளைப் பெற்று ஐந்தாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. கடந்த ஆண்டு வடமாகாணம் ஆறாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

இப்போட்டி கடந்த 2ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரை கொழும்பு சுகததாஸ விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இதில் ஒவ்வொரு மாகாணமும் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் விபரம் வருமாறு:

| இடம் | மாகாணம் | புள்ளிகள் |
|---|---|---|
| 01) | மேல் மாகாணம் | 1118 |
| 02) | வடமேல் மாகாணம் | 0541 |
| 03) | சப்ரகமுவா மாகாணம் | 0519 |
| 04) | மத்திய மாகாணம் | 0472 |
| 05) | வடக்கு மாகாணம் | 0189 |
| 06) | வடமத்திய மாகாணம் | 0187 |
| 07) | தென் மாகாணம் | 0163 |
| 08) | ஊவா மாகாணம் | 0121 |
| 09) | கிழக்கு மாகாணம் | 0052 |

## யாழ். மத்திய கல்லூரி இரு பிரிவுகளில் வெற்றி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி அணிக்கெதிரான நட்புறவுக் கால்பந்துப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி இரு பிரிவுகளில் வெற்றிபெற்றது.

இப்போட்டி கடந்த திங்கட்கிழமை ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 15,17,19,21 ஆகிய வயதுப் பிரிவு அணிகள் மோதின. 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கிலும், 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி 2-0 என்ற கோல் கணக்கிலும், 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் சென். அன்ரனீஸ் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கிலும் வெற்றிபெற்றன. இதேவேளை, 21 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டி சமநிலையில் நிறைவு பெற்றது. இதேவேளை, நட்பு ரீதியிலான கால்பந்துப் போட்டிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. (93)

## தாச்சியில் சாந்தை விநாயகர் சம்பியன்


(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு குஞ்சன் கலட்டி அறிவொளி விளையாட்டுக்கழகம் நடாத்திய மாபெரும் தாச்சிப் போட்டியின் வெற்றிக் கிண்ணத்தை பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் அணி கைப்பற்றிக்கொண்டது.

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை குஞ்சன் கலட்டி அறிவொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் உடுவில் ஆலடி சிந்து அணியும் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் அணியும் மோதின.


முற்பாதி ஆட்டத்தில் ஆலடி சிந்து அணி வீரர்கள் வேகமாகச் செயற்பட்டு பழங்களைப் பெற்றவண்ணமிருந்தன. இதன் காரணமாக முற்பாதி ஆட்டம் நிறைவடைந்த வேளை ஆலடி சிந்து அணி 4-3 என்ற பழம் அடிப்படையில் முன்னிலை பெற்றிருந்தது. பிற்பாதி ஆட்டத்தில் எழுச்சி பெற்ற பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் அணி அடுத்தடுத்து இரு பழங்களைப் பெற்றுக்கொண்டதுடன் எதிரணியை பழம் பெற்றுக் கொள்ளாத வகையில் மடக்கியது. சாந்தை விநாயகரின் வியூகத்தில் சிக்கிக்கொண்ட ஆலடி சிந்து அணியால் மேலதிக பழங்கள் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. நிறைவில் சாந்தை விநாயகர் அணி 5-4 என்ற பழங்கள் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டித் தொடரின் சிறந்த தாச்சியாக சாந்தை விநாயகர் அணியைச் சேர்ந்த சதீசன் தெரிவு செய்யப்பட்டார்.

இப்போட்டி நிகழ்வில் தாச்சி இரசிகர்கள், விளையாட்டு நலன் விரும்பிகள், ஆர்வலர்கள், யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தைச் சேர்ந்த அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டு இரு அணிகளுக்கும் உற்சாகமூட்டியமை குறிப்பிடத்தக்கது.



# பங்காளிக் கட்சிகளை வடக்கின் முதல்வர் நிராகரிப்பதன் உள்ளடக்கம்

– சாலையூரான் –



தமிழ் கூட்டமைப்பின் எம்.பி.க்கள், வடக்கு மாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர்கள் அண்மையில் கலந்து கொண்ட ஒரு கூட்டத்தில் ஆயுதம் ஏந்திய கட்சிகளுடன் தான் இணைந்திருக்க முடியாது. அதனால்தான் தமிழரசுக் கட்சியுடனேயே தான் இணைந்திருப்பதாக வடக்கின் முதல்வர் சற்று அழுத்தமாக குறிப்பிட்டிருக்கிறார்.

தமிழ் கூட்டமைப்புக்குள் இந்த விடுதலை இயக்கங்களிலிருந்து வந்தவர்களை கட்சிக்குள் எவ்வாறு வைத்திருக்க வேண்டும், அவர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை சுட்டிக்காட்டி....

அவர்களுக்கான இடத்தில் அவர்கள் இருந்துகொள்ள வேண்டும் என்பதாக இந்த தமிழரசுக்கட்சியின் தலைவர்கள் கூற முற்பட்ட பல சந்தர்ப்பங்கள் உண்டு.

தமிழ் கூட்டமைப்பை ஒரு அரசியல் கட்சியாக பதிய வேண்டும், பங்களிக் கட்சிகளுக்கும் தேர்தல் மற்றும் அரசியல் பதவிக்கான பிரதிநிதித்துவங்களில் சம அந்தஸ்து வேண்டும் என்கிற கோரிக்கைகள் பங்காளிக் கட்சிகளிடமிருந்து முன்வைக்கப்பட்ட போதெல்லாம் இந்த எதிர்வினை தமிழரசுக்கட்சியினரிடமிருந்து அவ்வப்போது வெளிப்பட்டிருக்கிறது.

தமிழ் கூட்டமைப்புக்குள் நிலவும் இந்த முரண் நிலையை விளங்கிக் கொள்வதற்கு தமிழரசுக்கட்சி தலைவர்களின் கனவான் அரசியல் பற்றி முதலில் நாம் புரிந்து கொள்வது அவசியம்.

கசங்காத வெள்ளை வேட்டியுடன் நெற்றியில் திருநீறு, சந்தனப்பொட்டு சகிதம் தமிழையும் சைவத்தையும் முன்நிலைப்படுத்தி கல்தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு முன்தோன்றிய மூத்த குடிப் பெருமை கூறி தமிழ் மக்கள் கற்பனை செய்து பார்க்க முடியாத உன்னதமான தமிழீழத்தை கனவாய்த் திணிப்பது இந்த கனவான் அரசியலின் உள்ளடக்கம்.

தமது வாக்கு வங்கிக்கு வசதியாக முடிந்தவரை வன்முறையான ஒரு சூழல் தொடர்வதையே குறியாகக் கொண்டிருக்கும் இந்த கனவான்கள்....

தாம் அறத்தின் வழி நடப்பவர்கள், குற்றங்கள், பாவச் செயல்களை கிஞ்சித்தும் விரும்பாதவர்கள் எல்லா உயிர்களையும் கருணை மனோபாவத்துடன் நோக்குபவர்கள் என்கிற தோற்றப்பாட்டை காண்பிக்க இந்த தலைவர்கள் முயல்வதை... இவர்களைக் கூர்ந்து பார்த்து வரும் யாவரும் அறிவர்.

இவ்வாறான ஒரு தோற்றப்பாட்டுடன் பொதுக் கூட்டங்களில் பொது நிகழ்வுகளில் இந்த விடுதலை இயக்க கட்சித் தலைவர்களுடன் சரிசமமாக தாமும் மேடையில் அமர்வது தமிழரசுக்கட்சி தலைவர்களுக்கு வெளியே சொல்ல முடியாத பெரும் சங்கடமான ஒரு விவகாரமாகவே எப்போதும் இருந்து வந்திருக்கிறது.

தேர்தல் காலங்கள் தவிர ஏனைய சந்தர்ப்பங்களில் பங்காளிக்கட்சி தலைவர்களுடன் பொது நிகழ்வுகளில் கலந்து கொள்வதை தமிழரசுக்கட்சி திட்டமிட்டே தவிர்த்து வந்திருப்பதற்கு இந்த வெள்ளை வெட்டி மனோபாவம்தான் காரணம்.

தேர்ந்தெடுத்து தமிழ் மேட்டுக்குடிகளின் மேலணிக்கான பிரதிநிதிகளை தமது கட்சிக்குள் முன்நிலைப்படுத்த தமிழரசுக்கட்சியினர் முயற்சிகளை மேற்கொண்டுவரும் நிலையில்... தமிழ் சமூகத்தின் பல்வேறு அணிகளையும் உள்ளடக்கி பரந்துபட்ட கட்சி உறுப்புரிமையை பங்காளிக் கட்சிகள் கோருவது அதன் தலைவர்களுக்கு அடக்க முடியாத ஆத்திரமாக இருக்கிறது.

இந்த நிலமையின் ஊடே தம்து கட்சி பிரதிநிதிகளை தாம் சமூகத்தின் எந்த மட்டத்திலிருந்து எவ்வாறு தேர்ந்து கொள்கிறோம் யாருக்கு என்ன அதிகாரங்கள் என்கிற அறிவிப்பு எதுவும் இல்லாமலே குறிப்பிட்ட மட்டத்திற்குள் விடயங்களை ஙகையாள்வது தமிழரசுக் கட்சி தலைமையின் இலட்சணம்.

இது ஒருபுறமிருக்க தேசிய விடுதலை அமைப்புக்களையும் அவற்றின் போராட்டத்தையும் மலினப்படுத்தும் வகையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் முதல்வர் பாரதூரமான கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

மாகாண சபையில் முதல்வர் பதவியை பெற்றிருக்கும் விக்கினேஸ்வரன் இந்த விடுதலை அமைப்புக்களின் எண்ணிறந்த போராளிகளது சாம்பல் மேட்டிலிருந்தே இந்த வடக்கு மாகாண சபை உருவாகி இருக்கிறது என்பதை அவர் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தப் போராட்டம் வெறுமனே இன விடுதலையை மட்டும் நோக்காக கொண்டிருக்கவில்லை. தமிழ் சமுகம் தனக்குள்ளே கொண்டிருந்த அக முரண்பாடுகளான பிரதேச பால், சாதி, வர்க்க, பிரச்சினைகளுக்கும் தீர்வை வேண்டி நின்றதையும் அதற்கான ஏற்பாடாக தமிழ் சமூகத்தின் இடைநிலை மற்றும் தாழ்த்தப்பட்ட அணியினரையும் இந்தப் போராட்டம் உள்வாங்கிக் கொண்டிருந்ததையும் முதல்வர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வடக்கின் முதலமைச்சர் பதவியை ஏற்றுக் கொள்கிறார் என்றால் யாழ்ப்பாணச் சமூகத்தின் படிநிலை ஏற்றத்தாழ்வுகள், தீண்டாமைக்கெதிரான போராட்டங்களை உள்ளடக்கிய தேசவிடுதலைக்கான போரில் பெரும் எண்ணிக்கையில் தம் இன்னுயிரை நீத்த ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமூகங்களின் போராளிகளுக்கு முதலில் இவர் சிரந்தாழ்த்தி மரியாதை செலுத்துதல் கடமை.

மறுபக்கத்தில், வெறும் வாக்கு வங்கிக்காக புலிகளை ஆதரிப்பதான ஒரு போலி தோற்றப்பாட்டை கொண்டிருக்கும் தமிழரசுக்கட்சியுடன் எவ்வாறு முதல்வர் ஒட்டிக் கொள்ள முடிகிறது என்பதற்கும் அவர் விளக்கம் கூற வேண்டும்.

தமிழரசுக் கட்சியுடன் இணையப் போவதாக முதல்வர் கூறியதன் மூலம் தன்னுடைய விருப்பத்தை மட்டுமன்றி தமிழரசுக்கட்சியின் விருப்பத்தையும் கூடவே பங்காளிக்கட்சிகளிடம் அவர் வெளிப்படுத்தி இருக்கிறார்.

இனிமேலாவது திறந்த மனதுடன் சக தமிழ் கட்சிகளையும் ஒரு பரந்த முன்னணிக்குள் இணைத்துக்கொண்டு தமது அரசியல் பயணத்தை தொடர்வது பற்றி இந்த தேசிய விடுதலை இயக்கங்களிலிருந்து வந்த கட்சிகள் சிந்திக்குமாயின் அது தமிழரசுக்கட்சிக்கு சிறந்த ஒரு பாடமாக அமையும்.

# கே.வி. மகாதேவன் 8



– பி.ஜி.எஸ்.மணியன் –

"கூண்டுக்கிளி" ஒரு பரீட்சார்த்தமான படம். ஆனால் மக்கள் மத்தியில் சரியான வரவேற்பைப் பெறாமல் படுதோல்வி அடைந்தது. படத்தின் தோல்வி டி.ஆர். ராமண்ணாவை பெரிதும் பாதித்தது.

ஆகவே அவர் தான் அடுத்து தயாரிக்கும் படங்கள் எல்லாமே ஜனரஞ்சகமான பொழுது போக்குச் சித்திரங்களாக மக்கள் மத்தியில் பெருத்த வரவேற்பைப் பெறக்கூடியவைகளாக அமையவேண்டும் என்ற தீர்மானத்துடன் மிகுந்த பொருட்செலவில் எம்.ஜி.ஆர்., டி.ஆர். ராஜகுமாரி, ஜி. வரலக்ஷ்மி, ஜே.பி. சந்திரபாபு, ஈ.வி. சரோஜா ஆகியோரை பிரதான வேடங்களில் நடிக்க வைத்து தனது அடுத்த படத்தை தயாரித்தார்.

1955 இல் வெளிவந்த அந்தப்படம் மாபெரும் வெற்றிப்படமாகி வசூலை வாரிக்குவித்தது.

அந்தப் படம்தான் "குலேபகாவலி". இதற்கு இசை அமைத்தவர்கள் மெல்லிசை மன்னர்களான விஸ்வநாதன் - ராமமூர்த்தி.

அது சரி. இந்தப் படத்துக்கும் கே.வி. மகாதேவனுக்கும் என்ன சம்பந்தம்?

"குலேபகாவலி" என்றதும் நம் நினைவில் வந்து நின்று வாய் தானாகவே முணுமுணுக்கும் பாடல் தஞ்சை ராமையாதாஸ் அவர்கள் எழுதிய "மயக்கும் மாலைப் பொழுதே நீ போ போ. இனிக்கும் இன்ப இரவே நீ வா வா. இன்னலைத் தீர்க்க வா." என்று ஏ.எம். ராஜாவும் ஜிக்கியும் இணைந்து பாடும் ஒரு டூயட் பாடல்தான்.

"பாகேஸ்ரீ" ராகத்தை அதி அற்புதமாகக் கையாண்டு இந்த ஒரு பாடலுக்கு மட்டும் அற்புதமாக இசை அமைத்துக் கொடுத்தவர் கே.வி. மகாதேவன்.

உண்மையில் இந்தப் பாடல் "கூண்டுக்கிளி" படத்துக்காக கே.வி. மகாதேவன் இசை அமைத்த பாடல். ஆனால் பாடலை அந்தப் படத்தில் பயன்படுத்திக் கொள்ள ராமண்ணாவால் முடியவில்லை. இந்தப் படலை "குலேபகாவலி" படத்தில் உபயோகப் படுத்திக்கொண்டார்.




"குலேபகாவலி" வெளிவந்த் அதே 1955ஆம் வருடம் தமிழ்ப் புத்தாண்டு வெளியீடாக ஏ.பி. நாகராஜன் கதை வசனம் எழுதி கதாநாயகனாக நடித்த "பெண்ணரசி" படம் வெளிவந்தது. ஏ.பி. நாகராஜன், சூர்யகலா, எம்.என். நம்பியார், பி.எஸ். வீரப்பா, ஈ.வி. சரோஜா ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்த இந்தப் படத்தை கே.சோமு இயக்கி இருந்தார்.


இந்தப் படத்திற்கு இசை அமைக்கும் போது ஒரு புதுமையான முயற்சியை மேற்கொண்டார் கே.வி. மகாதேவன்.

சாதாரணமாக ஒரு திரைப்படப் பாடல் என்று எடுத்துக்கொண்டால் முகப்பிசை (pre-lude) என்றும் இணைப்பிசை (interlude) என்றும் இரண்டு பிரிவுகள் கண்டிப்பாக இருக்கும். பாடல் ஆரம்பமாகும் முன்பாக பல்லவிக்கு முன்னதாக வருவது முகப்பிசை. பல்லவியையும் சரணத்தையும் இணைக்கும் விதமாக வருவது இணைப்பிசை. பொதுவாக இந்த இணைப்பிசையாக வாத்தியங்களைப் பயன்படுத்துவார்கள். ஆனால் இந்தப் படத்தில் இடம் பெற்ற கவிஞர் மருதகாசி எழுதிய "இன்பம் என்றும் இங்கே ஆட்சி புரியுது" என்ற திருச்சி லோகநாதன் - எம்.எஸ். ராஜேஸ்வரி பாடிய டூயட் பாடலைப் பார்த்தோமென்றால் அதில் இணைப்பிசையே இருக்காது. பல்லவி முடிந்ததும் எம்.எஸ். ராஜேஸ்வரியின் ஹம்மிங்கோடு ஆரம்பித்து இடையில் திருச்சி லோகநாதன் இணைந்துகொள்ள சரணம் தொடங்கும். முதல் சரணம் முடிந்து அடுத்த சரணம் ஒரு விருத்தமாக தொடங்கும். இணைப்பிசையே பாடலில் இருக்காது. கே.வி. மகாதேவனின் கற்பனை வளத்துக்கு இந்தப் பாடல் ஒரு எடுத்துக்காட்டு.

"பெண்ணரசி" பட்த்திலிருந்துதான் டைட்டிலில் கே.வி.மகாதேவன் பெயருக்குக் கீழே "உதவி: புகழேந்தி" என்று போட்டு தனது உதவியாளரை கௌரவப்படுத்த ஆரம்பித்தார்.

(தொடரும்)

# யார் புத்திசாலி?



ஒரு முனிவரிடம் இரண்டு சீடர்கள் இருந்தனர். இருவரும் பலசாலிகள், புத்திசாலிகள். ஒரு முறை தங்களில் யார் புத்திசாலி என்பதில் இவர்களுக்குள் சண்டை ஏற்பட்டது.

இந்தச் சண்டை முனிவரிடம் வந்தது. அவர் சீடர்களிடம் "சீடர்களே... இன்று ஏனோ எனக்கு அதிகமாகப் பசிக்கிறது. சமையல் முடிய தாமதமாகும் போல் தெரிகிறது. நீங்கள் இருவரும் அங்கேயிருக்கும் மரத்தில் பழங்களைப் பறித்து வாருங்கள்" என்றார்.

முனிவரிடம் மிகவும் பணிவாக நடந்து கொள்ளும் அந்தச் சீடர்கள் இருவரும் மரத்தை நோக்கி ஓடினர். ஆனால், அந்த மரத்தின் முன்பாக முள் செடிகள் இருந்ததால் அவர்களால் அந்த மரத்தை நெருங்க முடியவில்லை.

முதல் சீடன் சற்று பின்னோக்கி வந்தான். பின்னர் முன்னோக்கி வேகமாக ஓடினான். ஒரே தாண்டில் முள் செடிகளைத் தாண்டினான். அந்த மரத்திலிருந்த பழங்களை முடிந்த வரை பறித்தான். மரத்திலிருந்து இறங்கிய அவன் மீண்டும் ஒரே தாவலில் முள்செடியைத் தாண்டினான். முனிவரின் முன்னால் வந்து நின்றான். அவரிடம் பறித்துக் கொண்டு வந்த பழங்களைக் கொடுத்தான்.

இரண்டாமவன் ஒரு அரிவாளை எடுத்து வந்தான். முள்செடிகளை வெட்டி ஒரு பாதை அமைத்தான். அப்போது சில வழிப்போக்கர்கள் அலுப்போடு அந்தப் பக்கமாக வந்தனர். அவர்கள் இரண்டாம் சீடன் வெட்டி வைத்த பாதை வழியே சென்று, மரத்திலிருந்த பழங்களைப் பறித்துச் சாப்பிட்டனர். மரத்தடியில் படுத்து இளைப்பாறினர். இரண்டாவது சீடனும் தேவையான அளவு பழங்களைப் பறித்து வந்தான்.

இப்போது முனிவர் முதல் சீடனிடம், இரண்டாவது சீடன் தான் அதிபுத்திசாலி என்றார்.

முதலாமவன், "சுவாமி, நீங்கள் இன்னும் எங்களுக்குப் போட்டியே வைக்கவில்லை. அதற்குள் அவனை எப்படிச் சிறந்தவன் என்று சொன்னீர்கள்?" என்று கேட்டான்.

முனிவர் அவனிடம், "சீடனே, நான் உங்களிருவரையும் பழம் பறிக்கச் சொன்னதே உங்களில் சிறந்தவர் யார்? என்று தெரிந்து கொள்ளத்தான். நீ மரத்தருகே இருந்த முள்செடிகளைத் தாண்டிக் குதித்து, இந்தப் பழங்களைப் பறித்தது வந்தாய். இது உன் சுயநலத்தைக் காட்டுகிறது. ஏனெனில், அதை நீ எனக்கு மட்டுமே தந்தாய். நான் மட்டுமே பலன் அடைந்தேன். இரண்டாம் சீடனோ முள்செடியை வெட்டிப் பாதையைச் சீரமைத்ததால், எனக்கு மட்டுமின்றி ஊராருக்கும் பழங்கள் கிடைத்தன. இன்னும் பல நாட்கள் இந்தப் பழங்கள் அனைவருக்கும் கிடைக்கும். எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கச் செய்பவனே அதிபுத்திசாலி" என்றார்.

# அங்காடி

"அங்காடி" என்பது பழங் காலத்தில் தமிழில் வழங்கிய சொல். இக்காலத்தில் சந்தை அல்லது "பஜார்" என்று சொல்லப்படும் இடமே முற்காலத்தில் "அங்காடி" எனப்பட்டது.

பெரிய நகரங்களில் அந்தியும் பகலும் அங்காடி நடைபெற்றது. அந்தியில் நடைபெற்ற அங்காடியை "அல்லாங்காடி" என்றும், பகலில் நடைபெற்ற அங்காடியை "நாளங்காடி" என்றும் அழைத்தனர்.

பட்டினத்தார் பாடல் ஒன்றில் "அங்காடி நாய் போல் அலைந்து திரிந்தேனே" என்று பாடியுள்ளார்.

கன்னடத்திலும் தெலுங்கிலும் இன்றும் "அங்கடி" என்ற சொல் வழங்குகின்றது. மலையாளத்திலும் "அங்கடி" உண்டு.

- ரா.பி.சேதுப்பிள்ளை (தமிழின்பம்-74)





அம்மாவை, தீயசக்திகள் சூழ்ந்திருக்கும் கர்நாடகத்திலிருந்து மீட்டு வர நிகழ்ந்து கொண்டிருக்கும் போராட்டமும் பிரார்த்தனையும் தொடர்பாக உருவாக்கப்பட்ட விளம்பரப் பதாகைகளுள் எனக்கு மிகவும் பிடித்தமானது இது.

அழும் குழந்தை, தமிழ்நாட்டு வரைபடத்தின் குறியீடு என்பது எளிதில் விளங்கும். அந்தக் குழந்தையை தாய்மை கலந்த கனிவோடு பார்த்து புன்னகைக்கும் அந்த முகத்தைப் பார்த்து கூட இரக்கம் வராத அளவிற்கு அத்தனை கல்நெஞ்சம் கொண்டவர்களா அவர்கள்?

காவிரியை நீயே வெச்சுக்கோ என்று பெருந்தன்மையோடு விட்டுத்தரும் பண்பு, கல் தோன்றி மண் தோன்றா மூத்த குடி தமிழர்களுக்கே உரித்தானது. இதை வடிவமைத்தவரை வருங்காலத்தில் அம்மா அவர்கள் மந்திரியாக்கி அழகுபார்த்தால் மிக்க மகிழ்ச்சியடைவேன்.

- சுரேஷ் கண்ணன் -

# என்ன கொடுமையடா சாமி!



## வெளிவாயன் வேலாயுதன் சொல்லுவது....

கூட்டமைப்பை ஒரு கட்சியாகப் பதிவு செய்ய சனங்களை அழுத்தம் குடுக்க அழைக்கிறார் எங்கடை சுரேஸ் அண்ணை. அதை தலைப்புச் செய்தியாக்கி பிள்ளையைக் கிள்ளி விடுகுது ஊதுகுழல் பத்திரிகை.

இனி மாவையிட்டை ஒரு பதிலை வாங்கிப் போட்டு தொட்டிலை ஆட்டி விடலாம். இந்த அக்கப்போரைப் பார்க்க ஆவலாயிருக்கிற சனங்களிட்டை பத்திரிகையை ஈசியாய் வித்திடலாந்தானே!

சனங்கள் அழுத்தம் குடுக்கிறதெண்டால் என்ன?

ஒண்டிலை தமிழரசுக் கட்சிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்ய வேணும். இல்லாவிடில் தமிழரசுக் கட்சித் தலைவர்களை எங்கடை பிரசைகள் குழுக்கள் சந்தித்து கூட்டமைப்பைப் பதிவு செய்யுங்கோ எண்டு சொல்ல வேணும்.

அதுவும் இல்லையெண்டால் ஒருவரோ அல்லது சிலரோ கொண்ட தியாகிகள் உண்ணாவிரதத்திலை குதிக்கவேணும். இதைப் போலை பரிசுகெட்ட வேலை வேறை ஒண்டும் இல்லை.

ஏனெண்டால் நாங்கள் ஒருமிச்சு நிக்கிறம். புலிக்குப் பிறகு தமிழற்றை ஏகப் பிரதிநிதியள் நாங்கள்தான் எண்டு மார்கொட்டிக் கொண்டு கதைச்ச கூட்டமைப்பின் அதிகாரபூர்வ பேச்சாளரே தமிழரசுக் கட்சிக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிற நிலை வந்திருக்குது.

அதை வைச்சு அரசியல் லாபந் தேட இன்னொரு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி நடத்திற பத்திரிகை வெளிக்கிட்டிருக்குது. இதைவிடக் கிலிசை கேடான விசியம் ஒண்டும் இல்லைப் பாருங்கோ!

உண்மையிலை தமிழரசுக் கட்சிக்காரர்கள் பச்சை மண்ணும் சுட்ட மண்ணும் ஒட்டாது எண்ட நிலைப்பாட்டிலையே எப்பவும் இருந்தவை. புலிகள்தான் கொஞ்சம் ஒற்றுமைப்படுத்தினவை.

கொஞ்சக் காலம் உள்ளுக்கை தமிழரசுக் கட்சிக் கூட்டங்களிலை சலசலப்பு இருந்த போதும் வெளியிலை தெரியேல்லை. தமிழரசுத் தலைவர்களும் அதை மறைச்சு அமுக்கி வைச்சிருந்தினை. விக்கியர் அரசியலுக்கும் புதிசு. தமிழரசுப் பாரம்பரியமும் அறியாதவர். அவர் போட்டுடைச்சு விட்டார்.

வேண்டாப் பெண்டாட்டி கை பட்டால் குற்றம் கால் பட்டால் குற்றம் எண்ட மாதிரி இவை வேண்டாதவை எண்டதை சிறிதரன், மாவை, இப்ப விக்கி எண்டு எல்லாரும் சொல்லிப் போட்டினை.

ரோசம் வந்து சுரேஸோ செல்வமோ சித்தரோ கூட்டமைப்பை விட்டிட்டு தனியாய் களத்திலை இறங்குவினை எண்டு மட்டும் ஏமாந்திடாதேங்கோ மகா ஜனங்களே!


கூட்டமைப்பு ஒரு முடக்குதிரை எண்டாலும் அதைத் தள்ளிக் கொண்டு பின்னாலை போற வரைக்குந்தான் இவைக்கு இருப்பு இருக்குது. அதை விட்டால் வியாபாரத்தைக் கவனிச்சுக் கொண்டு குடும்பத்தோடை செற்றில் ஆக வேண்டியதுதான்.

இன்னொரு வகையில் சொல்லுறதெண்டால் கூட்டமைப்பைக் கைவிடுறது இவைக்கு அரசியல் அஞ்ஞாதவாசந்தான். இராமனுக்கு ஒரு வரிசம் எண்டால் இவையளுக்கு மரண பரியந்தம் வரை அஞ்ஞாதவாசம்!

எனவேதான் சுரேஸ் அண்ணை பிலாக்கணம் பாடுது. சனங்களைக் கெம்பி எழுந்து தமிழரசுக் கட்சிக்கு அழுத்தம் குடுக்கச் சொல்லிக் கேக்குது. சனங்களோ ஒரு பக்கம் பழசை மறக்காமல் இருக்குது. மண்டையன் குழுவெண்டால் மறக்கேலுமே!

மற்றப் பக்கம் அதுகளுக்கு கன சோலி. வீட்டுக்கடன், ஈட்டுக் கடன் கட்டவே முடியாமல் தத்தளிக்குது. கொஞ்சச் சனம் மெகாசீரியலே தஞ்சமென தொலைக்காட்சிக்கு முன்னாலை கிடக்குது. அதுகளிலை சிலருக்கு அஞ்சோ பத்தோ குடுத்து வாகனங்களிலை ஏத்தி வந்து ஆர்ப்பாட்டஞ் செய்ய வைச்சால் சரி. மற்றப்படி சனங்களுக்கு இது தொடர்பில் எந்த அக்கறையுமில்லை.

ஆனால் பாருங்கோ சுரேஸ் அண்ணை. உங்கடை மகா ஜனங்கள் தளத்திலை இல்லையே! புலத்தில் அல்லவா இருக்கினை. உங்கடை பிரதமர் உருத்திர குமாரனையும், தமிழ்நாட்டுச் சீமான், வைகோவையும், இம்மானுவேல் அடிகளையும் பிடிச்சீங்கள் எண்டால் காரியத்தை சுலபமாய் வெல்லலாம்.



அவை சில வேளை அறிக்கை விடுத்து விட்டு வாளாதிருந்தால் இருக்கவே இருக்கிறது இன்னுமொரு வாய்ப்பு. அதுதான் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ். ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் மத்தியஸ்தத்திலை தமிழரசுக் கட்சித் தலைவர்களுக்கும் ஈ.பி.ஆர்.எல்.எப்., புளொட், ரெலோ ஆகிய முக்கூட்டு முன்னணிக்கும் இடையில் கட்சிப் பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தையை நடத்தலாமல்லே!

என்ன கொடுமையடா சாமி. பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காய் நிற்கிறதே கூட்டமைப்பு!

# புதிர்ப்போட்டி இல. 10

பின்வரும் வினாக்ககள் நெய்யரியில் ஒவ்வொரு நிரலிலும் ஒவ்வொரு 3x3 அடைப்பிலும் 1 தொடக்கம் 9 வரையுள்ள இலக்கங்கள் மீண்டும் வராதவாறு இடப்பட்டுள்ளன.

## புதிர்போட்டி 10.1


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | ⊙ | 7 | 8 | | | | |
| | | | | | 2 | | | |
| 8 | | 9 | 1 | | 5 | 4 | | |
| 4 | | 1 | ⊗ | 2 | | | | |
| | | | | | 3 | 5 | 6 | ⊕ |
| | 5 | | | 1 | | | | |
| | 2 | | | | | | 5 | 4 |
| | 9 | | | | | 8 | | |
| | | | | 7 | | | | 3 |

1) குறி ⊙ உள் அடைப்பிற்குப் பொருத்தமான எண் யாது?
1) 2 2) 1 3) 5 4) 4 5) 9

2) குறி ⊗ உள்ள அடைப்பிற்குப் பொருத்தமான எண் யாது?
1) 7 2) 5 3) 3 4) 2 5) 1

3) குறி ⊕ எண் அடைப்பிற்குப் பொருத்தமான எண் யாது?
1) 9 2) 4 3) 1 4) 2 4) 8

x இல ஆகிய வரிப்படங்களில் காட்டப்பட்டுள்ள கோலத்தை அவதானித்து z வரிப்படத்தில் - ? - குறிப்பிடப்பட்ட வெற்றிடத்திற்குப் பொருத்தமான இலக்கத்தை தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்க.




x y z

M என்பது 8 மீற்றர் நீளமும் 2 மீற்றர் அகலமும் ஒரு செவ்வகமாகும். N என்பது M இன் அதே பரப்பளவைக் கொண்ட ஒரு சதுரமாகும். எனின் ே இன் சுற்றளவு யாது?

## சரியான விடைகளை எழுதி பாராட்டுப் பெறுவோர்

பெயர் :- கே.நிலவன்
தரம் :- 7
பாடசாலை:- கிளி/ பூநகரி மகா வித்தியாலயம்.

பெயர் :- சி.சுபர்ணா
தரம் :- 5
பாடசாலை:- யா/ வல்வை மகளிர் கல்லூரி.

பெயர் :- சி.சபிதா
தரம் :- 12
பாடசாலை:- யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

### விண்ணப்பதாரின் விபரம்

முழுப்பெயர் :- ............................................
பாடசாலை :- ............................................
கல்வி கற்கும் தரம் :- ............................................
வீட்டு முகவரி :- ............................................
தொ.பேசி இலக்கம் :- ............................................

### அனுப்பவேண்டிய முகவரி

புதிர்ப்போட்டி இல: --------
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

## புதிர்போட்டி 10.3

தரப்பட்டுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ள எண் கோலத்தைப் பார்க்க அங்கு கூடுகள் பூரணப்படுத்தப் படாது கிடையாகவோ நிலைக்குத்தாகவோ ஒரு எண் இருமுறை வராத வாறும் கிடை நிலைக்குத்துக்களின் கூட்டுத்தொகை கோலத்திற்கு வெளியேயும் எழுதிக் காட்டப்பட்டுள்ளன.

1) A என்ற இடத்திற்கு வரவேண்டிய பொருத்தமான எண் யாது?
1) 8 2) 7 3) 9 4) 5 5) 4

2) B என்ற இடத்திற்கு வரவேண்டிய பொருத்தமான எண் யாது?
1) 6 2) 9 3) 2 4) 5 5) 7

3) C என்ற இடத்திற்கு வரவேண்டிய பொருத்தமான எண் யாது?
1) 7 2) 2 3) 6 4) 1 5) 5

4) தேவி, கலா, ரதி ஆகிய மாணவர்களின் Z புள்ளிகளின் சராசரியும் லதா, வானதி ஆகிய மாணவிகளின் Z புள்ளிகளின் சராசரியும் சமன். இவை ஒவ்வொன்றும் 1802.இற்குச் சமம். தேவி, கலா, ரதி, வாணி ஆகிய மாணவிகளின் சராசரி Z புள்ளிகள் யாது?

5) தற்போது தனராஜின் வயது அவருடைய மகனின் வயதின் மூன்று மடங்காகும். பத்து வருடங்களுக்கு முன்னர் அவருடைய வயது மகனின் வயதின் ஏழு மடங்காக இருந்தது. எனின் தற்போது தனராஜின் வயது யாது?

1) ஒரு லீற்றர் ரூ.57 விலையுள்ள திரவத்தையும் ஒரு லீற்றர் ரூ. 52 விலையுள்ள திரவத்தையும் ஆய்வு கூட பரிசோதகரான நிமால் கலப்பதற்கு முடிவு செய்தார். இவ்வாறு கலக்கப்பட்ட ஒரு லீற்றர் திரவத்தின் கிரயம் ரூ. 55 ஆகும். எனின் ஒரு வகையான திரவங்களையும் அவர் என்ன விகிதத்தில் கலந்தார்?

2) தனது உதவியாளரை விட மும்மடங்கு வேகமாகப் பணியாற்றும் தவம் ஒரு வேலையை 8 நாட்களில் முடிக்கிறார். அதே வேலையை 6 உதவியாளர்கள் மட்டும் செய்தால் அதனை முடிக்க அவர்களுக்கு எத்தனை நாட்கள் எடுக்கும்?

3) மணித்தியாலத்திற்கு 40 km கதியிற் செல்லும் பஸ்வண்டி ஒரு லீற்றர் பெற்றோலில் 20 km பயணஞ் செய்கிறது. மணித்தியாலத்திற்கு 50 km கதியிற் பயணஞ் செய்கையில் அது ஒரு லீற்றருக்கு பிரயாணம் செய்கின்ற தூரத்தில் 10% குறைகின்றது. 11 லீற்றர் பெற்றோலைப் பயன்படுத்தி இவ் பஸ் வண்டியினால் 50 km கதியில் எத்தனை km தூரம் செய்யலாம்.

## புதிர்போட்டி 10.2

கீழே காட்டப்பட்டுள்ள எண் கோலத்தைப் பார்க்க இங்கு எண்கள் ஏதோவொரு கோலத்திற்கமைய இடப்பட்டுள்ளன. அவற்றினைக் கருத்திற்கொண்டு L, M, N, O, P போன்ற கூடுகளுக்கு இடப்படவேண்டிய எண்ணைத் தரப்பட்டுள்ள சரியான விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.


| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | 1 |
| | | | | | | | | 2 | 3 |
| | | | | | | | 3 | 5 | 4 |
| | | | | | | 4 | 7 | 7 | 11 |
| | | | | | 5 | 9 | 10 | L | 15 |
| | | | | 5 | [illegible] | 13 | 23 | 24 | 39 |
| | | | 4 | 9 | M | 28 | 33 | 57 | 54 |
| | | [illegible] | 7 | 14 | 29 | 41 | 74 | N | 135 |
| | 2 | 5 | O | 25 | 44 | 85 | 107 | 188 | 189 |
| 1 | 3 | [illegible] | 19 | 39 | 83 | 126 | 233 | 269 | P |

1) I யின் பெறுமானம்
1) 14 2) 12 3) 17 4) 22 (--------)

2) M யின் பெறுமானம்
1) 15 2) 22 3) 24 4) 32 (--------)

3) N யின் பெறுமான்ம்
1) 125 2) 90 3) 81 4) 16 (--------)

இதற்கான விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும் புதிர்ப்போட்டியில் வெளியிடப்படும் அதற்கு முன்னதாக பெயர் விபரத்துடன் உங்களது பதில்கள் புகைப்படத்துடன் குறித்த முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் கிடைப்பதோடு பாடங்களுடன் பெயர்களும் பிரசுரிக்கப்படும்.



பின்வரும் வினாக்களின் வசனமொன்றின் ஆறு பகுதிகள் தரப்பட்டுள்ளன. அதன் ஆரம்பப் பகுதி A எனவும் இறுதிப் பகுதி F எனவும் தரப்பட்டுள்ளது. எஞ்சிய நான்கு பகுதிகளான B,C,D,E என்பன குறித்த ஒழுங்குமுறைப்படி காட்டப்படவில்லை. கருத்துள்ள வசனம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்காக அவற்றை இடவேண்டிய சரியான ஒழுங்கு முறையினைக் கண்டு அதனைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து சரியான விடையைத் தெரிவு செய்க.

1) A - கல்லூரிக்கு சென்று
B- ஒரு ஒன்றுகூடல் நடைபெற்றது
B -இற்றைக்கு மூன்று வருடங்களுக்கு முன்பு
C - நண்பர்கள் குழாம் ஒன்றுகூடி
D - இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும்
E - அறுபது வருடங்களைப் பூர்த்தி செய்ததன் காரணமாக
1) B,C,B,E 2) E,D,C,B
3) E,B,D,C 4) C,D,B,E

2) A - கடந்த டிசம்பர் மாதத்தில்
F - மக்களின் முன் உரையாற்றினார்
B - இற்றைக்கு மூன்று வாரங்களுக்கு முன்பு
C - பொதுத்தேர்தல் முறைகேடுகள் மூலம்
D - வெற்றிபெற்றமை தொடர்பான குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்ட ஜோன்ஸ்ரன்
E- கனடாவில் நடைபெற்ற
1) E,C,D,B 2) E,C,B,D
3) E,B,D,C 4) C,D,B,E

3) A - இறைவனின் விக்கிரகத்தை தாங்கிச் செல்லும்
F - விசேட அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன.
B - வீதியின் இருபுறமும் வெள்ளைக்கொடி களாலும்
C - பயணஞ் செய்யும் சகல
D - வருடாந்த அலங்கார உற்சவத் தேர்
E - வீடுகளுக்கு வீடு அலங்கரிக்கப்பட்டும்
1) E,C,D,B 2) E,C,B,D
3) E,B,D,C 4) C,D,B,E

## சென்றவார விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01) 4 | 06) 4 | 11) - | 16) 2 |
| 02) 3 | 07) 4 | 12) - | 17) 1 |
| 03) 2 | 08) 2 | 13) - | 18) 3 |
| 04) 3 | 09) 5 | 14) - | 19) 4 |
| 05) 3 | 10) 2 | 15) - | 20) 5 |

# மன்னாரில் குடியமர்ந்த குடும்பங்களுக்கு உதவி வழங்கும் செயற்றிட்டம்

## அவுஸ்ரேலிய அரசு நிதி அனுசரணை

மன்னாரில் மீளக்குடியமர்த்தப்பட்ட கிராமங்களுக்கு அடிப்படை வசதிகளான மலசலகூட வசதிகளை வழங்கும் பொருட்டு அவுஸ்ரேலிய அரசாங்கம் 10 மில்லியன் ரூபா தொகையினை ஒதுக்கீடு செய்துள்ளது.

இதனடிப்படையில் மாந்தை மேற்குப்பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 44 மலசலகூடங்களை அண்மையில் அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகர் அவற்றுக்குரிய வீட்டுப்பாவனையாளர்களிடம் கையளித்துள்ளார்.

மேலதிகமாக இன்னும் 160 மலசலகூடங்களை அதே பிரதேசமான மாந்தை மேற்கில் வசிக்கும் தமிழ் , முஸ்லிம் மக்களுக்கு அமைத்துக்கொடுப்பதற்கென அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகராலயம் 10 மில்லியன் ரூபாவினை ஒதுக்கியுள்ளது.

அவுஸ்ரேலிய அரசாங்கத்தின் கீழுள்ள திட்டத்தின் வேகமானதும் உயர்ந்த கருக்கொள்கையாக விளங்குவது, அடித்தட்டு மக்களின் துன்பங்களை போக்குவதேயாகும்.

இவற்றினை கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட, இரண்டாவது செயலாளர் சோல் அஷ்போல்ட் கருத்துத் தெரிவிக்கையில், மன்னாரில் மீளக்குடியமர்த்தப்பட்டதும், அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற பல துன்பங்களை எதிர்நோக்கிய மக்களுக்காக இவ்வாறான திட்டத்தினை மேற் கொண்டதில் நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.

இத்திட்டத்தின் மூலம் பின்தங்கிய சமூகங்கள் பல முன்னோக்கி வரலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். ஊடக வளர்ச்சி அறக்கட்டளை, மன்னார் கரிதாஸ் வாழ்வுதயம், மன்னார் மீட்பு மற்றும் நிவாரண சங்கம் ஆகிய மூன்று பொதுச் சேவை நிறுவனங்களினூடாகவே இத்திட்டம் திறம்பட மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் நேரடி உதவித்திட்டமானது எவ்வித இலாப அடிப்படையிலும் மேற்கொள்ளப்படுவதில்லை, இது பொதுமக்களின் நன்மையினை மட்டுமே கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருவதாகும். இத்திட்டத்தின் மூலம் அடிப்படை சுகாதார வசதிகள், கல்வி, தொழிற் பயிற்சி, வருமான அதிகரிப்பு, கிராமிய சமூகத்துக்கான உட்கட்டமைப்பு வசதிகள், பெண்களுக்கான அதிகாரம், யுத்தத்திற்கு பின்னரான மீள்கட்டுமானம் ஆகியன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்திற்கென 2013 - 2014 ஆம் ஆண்டுக்கான காலப்பகுதியில் அவுஸ்ரேலிய அரசாங்கத்தினால் 27 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## சேதமடைந்துள்ள வீதியால் போக்குவரத்தில் அசௌகரியம்

பலாலி வீதி தபால்பெட்டி சந்தியில் இருந்து வெளிவாரிப்பட்டப் படிப்புக்கள் பீடத்திற்குச் செல்லும் வீதி மிகமோசமான நிலையில் சேதமடைந்து காணப்படுகின்றது.

இந்த வீதியில் வெளிவாரிப் பரீட்சைப் பிரிவு மாணவர்கள் மற்றும் அங்கு கடமையாற்றும் அலுவலர்கள் ஏனைய பயணிகள் எனப் பலரும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

வீதியின் நடுவே பாரிய குண்டுகள் குழிகள் காணப்படுவதுடன் சமநிலையற்று சிறிய கற்களுடன் இவ் வீதியானது காணப்படுகின்றது. தற்போது மழை காலம் ஆரம்பித்துள்ள நிலையில் குண்டுகளுக்குள் மழைவெள்ளம் தேங்கிக் காணப்படுகின்றது. இதனால் போக்குவரத்துச் செய்வதில் இன்னும் கஷ்ட நிலை ஏற்படும் எனவும் பயணிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே வெளிவாரிப் பரீட்சைக் காலங்களின் போது மாணவர்கள் அங்கு செல்வதில் பல்வேறு துன்பநிலையை எதிர்கொண்டே செல்கின்றனர். எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்த வீதியை புனரமைக்க முன்வரவேண்டும் எனப் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (85)

## இடைக்காடு மகாவித்தி பரிசளிப்பு விழா

(அச்சுவேலி)

அச்சுவேலி, இடைக்காடு மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று பி.ப. 2 மணிக்கு வித்தியாலய திறந்த வெளி கலையரங்கில் வித்தியாலய முதல்வர் ஏ.அருந்தவநேசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரி, சத்திரசிகிச்சை நிபுணர்வேங்கடாசலம் சிறப்பு விருந்தினராக யாழ். தேசிய கல்வியியற்கல்லூரி ஐ.சி.ரி. விரிவுரையாளர் வே.நந்தகுமார். கௌரவ விருந்தினராக கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சு.சற்குணராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். மேலும் பரிசில்களை திருமதி காயத்திரி சுதர்சன் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளதாக பாடசாலைச் சமூகம் அறிவித்துள்ளது. (85)

## நிர்வாகசபை தெரிவு

(அச்சுவேலி)

ஆவரங்கால் மேற்கு விவசாய சம்மேளன பொதுக்கூட்டம் விவேகானந்தா சனசமூக நிலைய மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை பி.ப.3 மணியளவில் இடம்பெற்றது.

இதில் தலைவராக வெ. அமிர்தலிங்கம், செயலாளராக கா. சிவசோதி, பொருளாளராக க.பொன்னையா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.


இக்கூட்டத்திற்கு புத்தூர் கமநல உத்தியோகத்தர், ஆவரங்கால் கிராம சேவையாளர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர். (85)



கிளிநொச்சி உருத்திரபுரத்தில் அண்மையில் நடைபெற்ற முதியோர் கௌரவிப்பு நிகழ்வின்போது.... (40)

## வாரம் ஒரு காரம்

### ஜனாதிபதித் தேர்தலை தற்போது நடாத்துவது பொருத்தமானதா?... சிறுபான்மையினங்களின் சிந்தனையென்ன?...






ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக பல வாதப் பிரதிவாதங்கள் நிலவி வருகின்றன. ஒரு சாரார் உடனடியாக இதை நடத்தி முடிக்க வேண்டும் எனவும். மறுசாரார் இதை இப்போது நடத்துவது ஆளும் கட்சிக்கு பொருத்தமானது அல்ல; தற்போது நடாத்த வேண்டிய தேவையும் இல்லை என வாதிடுகின்றனர்.

ஊவா மாகாண சபைத் தேர்தலின் முடிவுகளில் சிறுபான்மை முஸ்லீம் மக்களின் ஆதரவினை ஆளும் கட்சி இழந்து விட்டது. இதற்கு அளுத்கம கலவரமே காரணம் எனவும். என்றைக்கு அரசு இனவாதக்கட்சிகளுக்கப்பால் சென்று ஆட்சி நடாத்தி மக்களின் நலனை பார்க்கின்றதோ அன்று தான் சிறுபான்மை முஸ்லீம்களின் ஆதரவினை வெல்ல முடியும் எனவும் கருத்துக்கள் கிளம்பியுள்ளன.

மறுபுறத்தில் ஊவா மாகாண சபைத் தேர்தலில் மலையக மக்களின் ஆதரவினை அரசு பலமாகப் பெற்றுள்ளது எனவும், இதை வைத்து பொதுத் தேர்தல் முடிவுகளை எடுக்க முடியாது எனவும் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக ஜனாதிபதி கருத்து வெளியிடும் போது 'அதிக தேர்தலை நடாத்துவது எனது ஆட்சிக்காலத்தில் தான். இதுவே ஜனநாயகம் நிலவுவதற்கு சான்று' என்கின்றார்.

இதேவேளை இடதுசாரித் தலைவர்களான வாசுதேவ நாணயக்கார, டியூ குணசேகர, திஸ்ஸவிதாரண போன்றோர் கூட்டாக சேர்ந்து ஜனாதிபதியிடம் தேர்தலைப் பிற்போடுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் கருத்து வெளியிடும் போது ஜனாதிபதித் தேர்தலைத் தற்போது விரும்பவில்லையெனவும் நாடாளுமன்றத் தேர்தல்கள் முதலில் நடாத்தப்பட வேண்டும் என்பதே கட்சியின் நிலைப்பாடு எனவும் தெரிவித்துள்ளார்.

தமிழ்தேசியக் கூட்டமைப்பு இவற்றுக்கெல்லாம் அப்பால் சென்று அகிம்சைப் போர் வெடிக்கப் போகின்றதாம் 2015 இல் மாவையின் தலைமையில் தமிழர்க்கான இறுதித்தீர்வு கிடைக்கப்போகின்றதாம் என அலட்டுகின்றது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அபிவிருத்திக்காக ஆளும் கட்சியுடன் இணைந்து செயற்படுவோம். இணக்க வழியில் அரசியலுரிமைகளைப் பெறுவதே எமது இலக்கு எனக்கூறி செயற்பட்டு வருகின்றது.

இவற்றையெல்லாம் தொகுத்து நோக்கும் போது தேர்தல் தொடர்பாக தமிழர்களாகிய நாமென்ன முடிவிற்கு வரமுடியும். இதர சிறுபான்மை இனங்கள் என்ன முடிவிற்கு வரமுடியும். எவை எமக்கு சாதகமான சந்தர்ப்பங்கள் என்று நோக்க வேண்டியுள்ளது.

நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையுள்ளது. ஜனாதிபதியும் 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை பதவியில் இருக்கமுடியும். அத்துடன் அரசுக்கு நாடாளு மன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் உள்ளது. இன்னும் இரண்டு வரவு செலவுத் திட்டங்களைத் தாக்கல் செய்ய முடியும்.

இவ்வாறு இருக்கும் போது ஜனாதிபதி 'தேர்தலிற்கு தமது கட்சிகளை தயாராகும் படி'யும் கூறியுள்ளார்.

அன்று தொட்டு இன்று வரை சிறுபான்மை இனங்களுக்கான தீர்வு தள்ளிப்போவதற்கு, திடீர் திடீரென வந்த ஆட்சி மாற்றங்களும் ஒரு காரணம். வெறுமனவே உள்ளூர் பத்திரிகை விமர்சனங்கள் போல பொறுப்பற்ற முறையில் நாம் சிந்திப்பதை முதலில் நிறுத்த வேண்டும்.

45ஆயிரம் ரூபாவிற்கு மோட்டார் வண்டிகள் கொடுக்கும் ஓர் போற்றக்கூடிய செயற்பாட்டை 'ஜனாதிபதி மோட்டார் வண்டி விற்க வருகின்றார' என கட்டமிட்டு செய்தி போடுபவர்களின் வாசக வட்டங்களாக மாத்திரம் நாம் இருக்கக்கூடாது. சுயமாக சிலவற்றை சிந்திக்க வேண்டும். நல்லதைப் போற்ற வேண்டும். தீயதை மாற்றத்திற்காக விமர்சிக்க வேண்டும்.

வீதி அபிவிருத்தியை விமர்சிக்கும் வீரவான்கள் வீதியால் பயணசுகம் அனுபவிக்க வில்லையா?.... யாழ்தேவி வரவை எதிர்ப்பவர்கள் வோறன்ட் (warrant) எடுத்து போக முந்துவதை நாம் பார்க்க மாட்டோமா?.....

எதிர்ப்பதுதான் எமது ஒரே கோசம் என ஓலமிடும் ஜென்மங்களை மாற்ற முடியாது. நாம்.... நாம் சுயமாக சிந்திக்க வேண்டும். இந்த ஆட்சிக் காலத்திலேயே சிறுபான்மை இனங்கள் தமக்குரிய அதிகாரங்களைப் பெறுவதுதான் சுலபமானது.

வேறு எந்தக் கட்சிகள் ஆட்சிக்கு வந்தாலும் தம்மை ஸ்திரப்படுத்தும் காலப்பகுதிக்குள் சிங்கள இனவாதக்கட்சிகள் அரசை ஆக்கிரமித்து விடுவார்கள். தமிழ்கூட்டமைப்பின் வீரப்பேச்சும் அவர்களை உசுப்பேத்த ஊஞ்சலாடும் தமிழர் தீர்வு.

ஆகவே ஆட்சி மாற்றம் இனப்பிரச்சினைத் தீர்வைக் கொண்டுவரப் போவதில்லை. அதைப் புரிந்துகொண்டுதான் நாம் செயற்பட வேண்டும்.

# இந்திய பிரஜைகள் இருவருக்கு பிணை

கல்முனையில் கைது செய்யப்பட்ட இந்தியப் பிரஜைகள் இருவரும் கல்முனை நீதவான் நீதிமன்றத்தினால் தலா 75 ஆயிரம் ரூபாய் பெறுமதியான சரீர பிணைகளில் விடுவிக்கப்பட்டனர்.

சுற்றுலா விஸாவில் இலங்கைக்கு வருகைதந்து, குடிவரவு, குடியகல்வு சட்டத்தை மீறி கல்முனை, பஸ் நிறுத்துமிடத்துக்கு அண்மையில் வர்த்தகத்தில் ஈடுபட்ட இந்தியப் பிரஜைகள் இருவரை கல்முனை பொலிஸார் நேற்று முன்தினம் கைது கைது செய்யதனர்.

32,36 வயதுகளுடைய கைது செய்யப்பட்ட இருவரும் கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவ்விருவரும் தலா 75 ஆயிரம் ரூபாய் பெறுமதியான சரீர பிணைகளில் விடுவிக்கப் பட்டதுடன் அது தொடர்பிலான மேலதிக விசாரணைகள் நேற்று நடைபெற்றன.

## ஆட்கடத்தல் சட்டமூலத்தை கனடா ஆராய்கிறது

(கொழும்பு)

கனடாவின் ஆட்கடத்தல் தொடர்பான சட்டதிட்டங்களை அந்த நாட்டின் உயர் நீதிமன்றம் ஆராயவுள்ளது.

கடந்த வருடங்களில் இலங்கையில் இருந்து அகதிகளாக சென்றவர்கள் தாக்கல் செய்திருந்த மனுக்களின் அடிப்படையில் இந்த விசாரணை நடைபெறவுள்ளதாக கனடாவின் இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது.

குறிப்பாக 2009 -2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் இருந்து சென்ற அகதிகளே இந்த மனுக்களை தாக்கல் செய்திருக்கின்றனர்.

# கண்டி வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கி வைப்பு

(கொழும்பு)

அரச துறை பொது சேவை வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கும் அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் கண்டி மாவட்டத்தில் 2000 பேருக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

கண்டி கெட்டம்பே மகாநாம கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதமர் டி.எம். ஜயரட்ண, அமைச்சர்கள் கெஹலிய ரம்புக்வெல, மஹிந்தானந்த அலுத்கமகே, பிரதியமைச்சர் ஏர்ள் குணசேகர, மத்திய மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.



கண்டி மாவட்ட பொது சேவை அரச உத்தியோகத்தர்களுக்கென 7000 மோட்டார் சைக்கிள்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

முதற்கட்டமாக நேற்று முன்தினம் 2000 பேருக்கு மோட்டார் சைக்கிள்கள் கண்டி மாவட்ட பொது சேவை அரச உத்தியோகத்தர்களுக்கென 7000 மோட்டார் சைக்கிள்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

முதற்கட்டமாக நேற்று முன்தினம் 2000 பேருக்கு மோட்டார் சைக்கிள்கள ஜனாதிபதியால் வழங்கப்பட்டன.

# வரவு செலவு திட்டத்திற்கான கால அவகாசத்தை நீடியுங்கள்

## எதிர்க்கட்சிகள் கோரிக்கை

(கொழும்பு)

வரவு செலவுத் திட்டத்திற்கான கால அவகாசத்தை நீடிக்குமாறு எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இம்முறை வரவு செலவுத் திட்ட விவாதத்திற்காக மிகக் குறுகிய காலமே ஒதுக்கப்பட்டுள்ளதாக ஜே.வி.பி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன குற்றம் சுமத்தியுள்ளன.

எனவே, வரவு செலவுத் திட்ட விவாதங்களை நடாத்துவதற்கும் வாக்கெடுப்பு நடாத்துவதற்கும் போதியளவு கால அவகாசம் வழங்கப்பட வேண்டுமென கோரியுள்ளன.

2015ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

வரவு செலவுத்திட்ட விவாதம் மற்றும் வாக்களிப்பிற்காக 20 நாட்களை அரசாங்கம் ஒதுக்கீடு செய்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் நவம்பர் மாதம் 18ஆம் திகதி வரவு செலவுத்திட்ட மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

இரண்டாம் வாசிப்பிற்கு 7 நாட்களும், மூன்றாம் வாசிப்பிற்கு 19 நாட்களும் ஒதுக்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கோரியுள்ளது.

மேலதிகமாக நான்கு நாட்களை வழங்கத் தயார் என அரசாங்கம் அறிவித்துள்ளது. எனினும் வரவு செலவுத் திட்ட விவாதத்திற்கான நாட்களை ஒதுக்கீடு செய்வது குறித்து இன்றைய தினம் நடைபெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

## கடந்த ஆகஸ்ட்டில் ஏற்றுமதியில் அதிகரிப்பு;

(கொழும்பு)

கடந்த ஆகஸ்ட் மாதம் நாட்டின் ஏற்றுமதி நூற்றுக்கு 7.9 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இந்த அதிகரிப்பானது, 991 மில்லியன் அமெரிக்க டாலர்கள் என் மதிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, இறக்குமதி செலவு 16.9 ஆல் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் இறக்குமதிக்கே அதிகளவு செலவிடப்பட்டுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது

# கடைத்தொகுதி தீக்கிரை; தம்புள்ளையில் சம்பவம்



தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திற்கு அருகில் உள்ள, பெற்றோலிய வளப் பிரதி அமைச்சர் சரண குணவர்த்தனவிற்குச் சொந்தமான கடைத் தொகுதியில் தீப்பற்றியுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு ஏற்பட்ட தீ, தீயணைப்புப் படையினரின் உதவியுடன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இத் தீ காரணமாக துணிக் கடை, பழக்கடை, மரக்கறிக் கடை மற்றும் பிளாஸ்ரிக் கடை ஆகியன எரிந்து நாசமாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதி அமைச்சரின் இக்கடை தொகுதியை கூலிக்கு வாங்கி வியாபாரம் செய்தவர்கள் தீ விபத்தால் பெரிதும் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர். 6 மாதங்களுக்கு முன்னரும் குறித்த கடைத் தொகுதி தீக்கிரை யானமை குறிப்பிடத்தக்கது.

# பத்து மாவட்டங்களில் மண்சரிவு அபாயம்

(கொழும்பு)

தொடர்ச்சியாக மழை பெய்யுமாக இருந்தால் 10 மாவட்டங்களில் மண் சரிவு அபாயம் ஏற்படும் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அதன் அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே நாட்டின் பல மாவட்டங்களில் மழை வீழ்ச்சி ஏற்பட்டிருந்த நிலையில், நான்கு மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

எனினும் தொடர்ந்து மழை பெய்யும் பட்சத்தில் 10 மாவட்டங்களுக்கு இந்த எச்சரிக்கை நீடிக்கப்படும் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதன்படி கேகாலை, இரத்னபுரி, மாத்தளை, கண்டி, பதுளை, நுவரெலியா, களுத்துறை, மாத்தறை, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் மண் சரிவு ஏற்படலாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

# துப்பாக்கியுடன் மூவர் கைது

ஹபரண - பொலன்னறுவை பிரதான வீதி ஈரிகே ஓய பன்சலைக்கு அருகில் துப்பாக்கி மற்றும் கைக்குண்டுகளுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில், மோட்டார் சைக்கிள் ஒன்றை நிறுத்தி சோதனை நடாத்திய போதே இவர்கள் சிக்கியுள்ளனர். கேகாலை பகுதியைச் சேர்ந்த குறித்த சந்தேகநபர்கள் வசமிருந்து இரண்டு கைக்குண்டுகள் மற்றும் துப்பாக்கி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவம் குறித்த மேல்திக விசாரணைகளை ஹபரண பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, அகுரஸ்ஸ - தீகல லேனம பிரதேசத்தில் சட்ட விரோதமாக துப்பாக்கி வைத்திருந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# மக்களின் நலன்களை கருதாத நாடாளுமன்ற அமர்வுகள்

## குற்றம் சுமத்துகிறார் சஜித்

(கொழும்பு)

மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு நாடாளுமன்ற அமர்வுகள் நடாத்தப்படுவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நாளொன்றுக்கு 150 இலட்ச ரூபா பணம் செலவிட்டு நாடாளுமன்ற அமர்வுகள் நடாத்தப்படுகின்றன.


நாட்டையோ நாட்டு மக்களையோ கருத்திற்கொண்டு அமர்வுகள் நடாத்தப்படுவதில்லை. ஊழல் மோசடிகளில் ஈடுபட்டு வரும் உள்ளூராட்சி மன்றத் தலைவர்களை பாதுகாக்க நாடாளுமன்ற அமர்வுகள் நடாத்தப்படுகின்றன.

மோசடிகளில் ஈடுபடுவோர், சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுவோர், ஏகாதிபத்திய நிர்வாகத்தில் ஈடுபடுவோரை பாதுகாக்கும் நோக்கில் அரசாங்கம் உள்ளூராட்சி மன்ற சட்டத் திருத்தங்களை செய்ய உள்ளது.

உள்ளூராட்சி மன்ற கட்டமைப்பைப் பலப்படுத்தக் கூடிய வகையில் இந்த நேரத்தைப் பயன்படுத்த முடியாதா?

ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட, சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட உள்ளூராட்சி மன்றத் தலைவர்களின் பெயர் விபரங்களை சமர்ப்பிக்கின்றேன். ஏனெனில், உள்ளூராட்சி மன்ற விவகார அமைச்சர் ஓர் சிறுபிள்ளைதானே. உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் கொடுப்பனவுகளை உயர்த்த முடியும்.

குறைந்தபட்சம் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு முச்சக்கர வண்டி ஒன்றையேனும் வாங்கிக் கொள்ளக் கூடிய



வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டுமென சஜித் பிரேமதாச கோரியுள்ளார்.

உள்ளூராட்சி திருத்தச் சட்டம் தொடர்பில் நாடாளு மன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# க.பொ.த.(சா/த) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper

## English Language

ஆசிரியர் : T.மயூரன்

**TEST 1**

**Underline the correct word given in brackets to make the following paragraph meaningful**

Knitting lece is a (1) (fascinate / fascinating / fascinated) Process. Most people in the (2) (South / Southern) part of Sri Lanka (3) (good / better / well) at making different types of laces using cotton thread. Many families in the South do this as a way of (4) (Life / live / living) Knitting lace is (5) (complete / completed / cpmpletely) done by hand.

**TEST 2**

**Match the utterances under (A) with suitable functions under (B) . Write the relevant number in the box.**

**(A) Utterances**

1) Man will be hunting for another planet to survive.

2) We are going on a picnic next Sunday.

3) The train leaves the station at half past nine.

4) I'II definitely come to your birthday party.

5) Let me carry the bags for you.

**(B) Functions**

a) Predicting something ☐

b) Informing a scheduled event ☐

c) Offering help ☐

d) Promising ☐

e) Talking about a future arrangement ☐

**Write five sentences about the picture**



1) ..........................................................................

2) ..........................................................................

3) ..........................................................................

4) ..........................................................................

5) ..........................................................................

**TEST 4**

**Read the following dialogue and answer the questions that follow.**

Maurice : My sister is coming to London for a week

Monika : Oh, that will be nice.

Maurice : Yes, but unfortunately, I can't put up with her and hotels are so expensive.

Monika : Perhaps she can stay with us. We've got a spare room in our flat.

Maurice : Oh, that's fine. Thanks Monika.

Monika : Who else will come with Stella?

Maurice : Her hubby, sometimes.

1) Who is Stella? ..........................................................................

2) Where does Monika live? ..........................................................................

3) How long will Mourice's sister stay in London? ..........................................................................

4) Will Stella put up with her brother? ..........................................................................

5) Is Stella married? ..........................................................................

**TEST 5**

**Complete the following dialogue using the options given in the box.**

Mother : What shall I make you when you come for tea (1) ........................ What about chocolate cake?

Saman : Oh, yes mum. (2) ..........................................................

Mother : How many friends will join you ?

Saman : (3) ..........................................................................

Mother : I'II make (4) ..........................................................................

Saman : Thanks, mum. (5) .......................................................... your ginger flovoured ted.

**Don't forger / It's my favourite too / some pastries as well / with your friends / well..... seven or eight**

**TEST 6**

**Write Paragraph on one of the following. Use about 50 words**

(a) A visit to the zoo (b) My favourite book

..........................................................................

..........................................................................

..........................................................................

**TEST 7**

**Number the following sentences in the right order to form a text which describes an incident.**

**A Penguin Joke**

☐ The next morning, the policeman was walking down the same street when he saw the couple again with the penguin.

☐ One day, a man and his wife were walking down the street when they came across a penguin

☐ 'Mmm,' said the policeman. 'I think the best thing is to take it to the zoo'.

☐ 'Oh!' exclaimed the man. 'What a surprise! What shall we do with it?

☐ 'Well, we did, said the man. We took it to the zoo and we all had a really good time'

☐ 'What a good idea!' said the woman. 'We' II go there straight away'.

☐ 'I know', said his wife. 'We' II ask a policeman'.

☐ So this afternoon we're taking it to the Cinema, and this evening we're going to have a meal in a fish restaurant.

☐ So, they found a policeman and explained what had happened.

☐ 'I thought, I told you to take that penguin to the zoo', the policeman said.

## TEST 8

**You received the following note from your friend. Write a reply giving only the relevant information use about 50 words.**

Hai Premila,

Our friends have planned to go to the Planetarium next Saturday. Are you coming with us? Why didn't you come to school last week? Is your mother ok now? Hope you'd join us. Please let me know.

with love
Asha.

.................................................................................

.................................................................................

.................................................................................

.................................................................................

.................................................................................

.................................................................................

## TEST 9

**The following extract contains 10 mistakes which are underlined. Write each correct word in the box provided. First one is done for you.**

Once upon a time, a long time ago, (1) their (there) was a knight, who as he (2) grow [ ] older lost all his (3) hairs [ ] He (4) become [ ] a s bald as (5) a [ ] agg. He (6) don't [ ] want any one to see his bald head. So he (7) buy. [ ] a beautiful, black (8) curl [ ] wig.

## TEST 10

**Following is a fax massage received by a leading restaurant. Some phrases are deleted. Find them in the box and wirte them in the spaces.**

To : Ever Rest, From : Laura Jonathen.
Message :

I' d like to reserve (1) ................................. We are arriving there (2) ......................... We hope to spend (3) ................................ My daughters and I would preferably like a (4) ................................... Is it possible to have (5) ..........................................? I would grateful to you could tell me the price of each room.

**rooms with a sea view / rooms at you hotel / ten days in your hotel / on 17th August / double bedroom with a balcony.**

கடந்த ஞாயிறு, புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் வெளியான வினாக்களின் விடைகள்

05.10.2014 ஞாயிற்றுக்கிழமை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) 3 | 6) 3 | 11) 3 | 16) 1 | 21) 12 | 26) 1 |
| 2) 1 | 7) 1 | 12) 1 | 17) 2 | 22) 3 | 27) 2 |
| 3) 3 | 8) 2 | 13) 3 | 18) 2 | 23) 2 | 28) 1 |
| 4) 2 | 9) 2 | 14) 1 | 19) 2 | 24) 16 | 29) 3 |
| 5) 2 | 10) 2 | 15) 2 | 20) 3 | 25) 1 | |

08.10.2014 புதன்கிழமை

01. (1) கல்வியில் / கல்வி / நாட்டுமக்களின் கல்வியில் / அங்குள்ள மாணவர்களின் கல்வியில் / கல்வியில் தங்கியுள்ளது.
(2) பெருமை
(3) நூல் நிலையங்கள்
(4) கண்கள் / கண்கள் போல்
(5) பக்குவமாக / பக்குவமாகப்
(6) பயன்படுத்துவோம்

02. (I) மாணவர்கள் (II) மேசை (III) நாம்
(1) தாலாட்டு / தாலாட்டுப்பாடல் / தாலாட்டுப்பாட்டு / தாலாட்டுப்பாட்டு
(2) ஓவியன் / சித்திரிகன்
(3) தீவு

03. (I) நாம் பூக்களைப் பறிப்போமா? ] நாங்கள் / நாம்
நாம் பூக்கள் பறிப்போமா?
நாம் மலர்கள் கொய்வோமா?
நாம் மலர்கள் பறிப்போமா? ஆய்வோமா?

(II) நான் உள்ளே வரலாமா?
உள்ளே. நான் வரலாமா?

(III) நான் நர்ளைக்கு வருவேன்
நாளைக்கு நான் வருவேன்
நான் நாளை வருவேன்

04. **PLEASE CLEAN THECLASSROOM?**
**CLEAN THE CLASSROOM PLEASE**

எழுத்துப் பிழையின்றி இருத்தல் வேண்டும் சொற்கள் தனித்தனியாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

05. **ELEPHANT/elephant**
**UMBRELLA/umprella**

எழுத்துப் பிழையின்றி எழுதப்பட்டிருத்தல் வேண்டும் சிறிய எழுத்துக்களில் (simple letters) அல்லது இரண்டும் கலந்து எழுதியிருப்பின் சரியெனக் கொள்க.

06. (I) என்ன வாடிவென்ன / என்ன இந்தகண்ண / எண்ட வாடிவென்ன
(II) நூலகம் எத்தனை மணிக்குத் திறக்கப்படும் / நூலகம் திறக்கப்படுவது எத்தனை மணிக்கு

07. (I) புளிக்கும்
(II) அக்கறை

08. (I) சந்தைகள் பூங்காக்கள் என்பன பொதுச்சொத்துக்களாகும்
(II) தம்பி, எங்கே போகிறாய்?

09. (I) (2) ஆராய்ச்சி
(II) (3) நட்சத்திரம்

10. (4) எண்ணெய் மரம்

11. (2) அதன் இனத்தைப்பரப்ப உதவுதல்

12. (2) அச்சி, எருக்கலை, சீதேவியார், செங்கழுநீர்

13. (4) கீரி

14. (2) மண்புழு

15. (1) தேனீ

16. (2) புறத்தோல் கறைபடாது பளபளப்பாக இருத்தல்

17. (4) கச்சான்

18. (3) கௌபி

19. (4) சுற்றாடலில் நீர் தேங்குவதற்கு இடமளிக்காதிருத்தல்

20. (4) பொது சுகாதாரப் பரிசோதகருக்கு

21. (4) திறந்த வெளிக்குச்செல்லல்

22. (1) காற்று வீசும் திசையை அறியலாம்

23. (1) பம்பரகந்த

24. (1) பெருங்கரடி அல்லது (2) கலப்பை

25. (2) களனிகங்கை

26. (1) பண்டுகாபயன்

27. (1) பாதசாரிகள் கடந்து செல்லும் இடம் முன்னால் உள்ளது என்பதை

28. (4) செம்மஞ்சள்

29. (1) வனைதல் தொழிலில்

30. (3) உளி

31. (1) கலாநிதி ரீ.பீ.ஜயா

32. (3) மண்ணெண்ணை

33. (1) தீடிர் விபத்துக்கள் பற்றிய தகவல்கள்

34. (2) தாராவுக்கு

35. (2) பௌர்ணமிதினத்தில்
(3) பௌர்ணமிக்கு அடுத்தநாள்

10.10.2014 வெள்ளிக்கிழமை

| | | |
|---|---|---|
| 01. 1 | 09. 1 | 17. 1 |
| 02. 3 | 10. 2 | 18. 1 |
| 03. 2 | 11. 3 | 19. 3 |
| 04. 1 | 12. 1 | 20. 1 |
| 05. 1 | 13. 1 | 21. 2 |
| 06. 2 | 14. 1 | 22. 1 |
| 07. 2 | 15. 3 | 23. 2 |
| 08. 1 | 16. 3 | 24. 2 |

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரம் மேம்பட வேண்டும்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



அபிவிருத்தியில் ஓரளவு முன்னேற்றத்தை கண்டுள்ள போதும் மக்களின் வாழ்வாதாரத்தில் இன்னும் போதிய முன்னேற்றங்கள் எட்டப்படவில்லை. அதற்காகா தொடர்ந்தும் அபிவிருத்தியின் பாதையில் பயணிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை வட்டக்கச்சி மக்களுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்கி உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்.

மீள்குடியேற்றத்தின் பின்னர் நடைபெற்ற அபிவிருத்தி திட்ட பெறு பேறுகளின் அடிப்படையில் வடக்கு மாகா ணத்தில் கிளிநொச்சி மாவட்டமே வீட்டுத் திட்டங்களை அமைத்துக் கொடுத்ததில் முன்னணியில் திகழ்கின்றது. அதாவது இருபத்தி இரண்டாயிரத்தி எண்ணூறு வரையான வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை மக்களின் முன்னேற்றம் பற்றிச் சிந்திக்கின்ற சந்தர்ப்பத்தில் எமது பிரதேசத்தில் நிலவும் அமைதிச்சூழலின் பாதுகாப்பு தொடர்பாகவும் அக்கறை செலுத்த வேண்டியுள்ளது.

பொறுப்பற்ற சில அரசியல்வாதிகளின் செயற்பாடுகளும் நாடு கடந்து வாழும் சிலரின் செயற்பாடுகளும் எமது மக்களின் வாழ்வில் மீளவும் குழப்பங்களை ஏற்படுத்த முனைகின்றன. உணர்ச்சி வசப்பட்ட செயறபாடுகள் எமது மக்களின் வாழ்வை மீளவும் அவலத்திற்குளாக்கும் எனவே அதுசார்ந்த விழிப்புணர்வை மக்கள் பெற்றுக் கொள்ளவேண்டும் என்றார்.

இதேவேளை இங்கு உரையாற்றிய வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன் தெரிவிக்கையில்,

மீள்குடியேற்றத்திற்குப் பின்னர் அரச அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்பட்ட வாழ்வாதார திட்டத்திற்கான நிதியீட்டத்தைப்பார்க்கிலும், தற்போது வழங்கப்படுகின்ற வாழ்வாதாரத்திற்கான நிதி மிக அதிகமானது. இதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோரின் சாதுரியமான அணுகு முறையும் உழைப்பும் உள்ளடங்கியுள்ளன என்றார்.

இந் நிகழ்வில், வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், கரைச்சி பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் மனோகரன், கிளிநொச்சி மாவட்ட கால்நடை அபிவிருத்தி திட்ட உதவிப் பணிப்பாளர் கௌரிதிலகன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பங்கேற்பு

மாகாணமட்ட ஆங்கிலதின சொல்வதெழுதுதல் போட்டியில் வவுனியா கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி செல்வி தரண்சிகா பிரபாகரன் இரண்டாம் இடத்தைப்பெற்றுள்ளார்.

இன்று கொழும்பு சிறிமாவோ பண்டார நாயக்கா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள தேசிய மட்டப் போட்டியில் இவர் கலந்துகொள்ளவுள்ளார். (90)


# கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

வரணி பிரதேசத்தில் தற்போது காலபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் கால்நடைகளை வளர்ப்போர் தமது கால்நடைகளை கட்டி வளர்க்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தவறும் பட்சத்தில் கால்நடை பிடிகாரரினால் பிடிக்கப்பட்டு கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென வடவரணி விவசாய சம்மேளனம் அறிவித்துள்ளது.

மேலும் இந்த வருடத்திற்கான உரவிநியோகம் தற்போது புத்தூர்ச் சந்தியிலுள்ள கமநல சேவை நிலையத்தில் வழங்கப்பட்டு வருவதாகவும் சம்மேளனம் அறிவித்துள்ளது.

இதேவேளை கட்டாக்காலி கால்நடைகள் அவிழ்த்து விடப்படுவதால் விவசாய செய்கை பாதிக்கப்படுவதாகவும் இதனை கருத்தில் கொண்டே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (150)



வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலயத்தின் 6 ஆம் திருவிழாவான பாம்புத் திருவிழா அண்மையில் நடைபெற்ற போது.... (40)

# மாகாணமட்ட ஆங்கிலதின போட்டி வெற்றி பெற்ற மாணவர்கள் விபரம்

(யாழ்ப்பாணம்)

**வடமாகாண மட்டத்தில் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட ஆங்கிலதினப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்று வெற்றிபெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.**

**உறுப்பெழுத்து, தரம்-3**

எம்.சரண்யா- (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), ஐ.கீர்த்திகா- (கோப்பாய் நாவலர் வித்தியாலயம்), பி.பிரவீனா- (இமையாணன் ஜி.ரி.எம்.எஸ்.)

**தரம்-4**

எல்.தட்சா, பி.சுவிற்ரிகா- (சென்.சேவியர் பெண்கள் கல்லூரி), எஸ்.வர்சிகா- (சென் ஜோன்.பொஸ்கோ வித்தி.)

**தரம்-5**

ஏ.சௌமிகா-(சென்.ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), ஆர்.லக்ஷாயினி-(கிளி.சென் பாத்திமா ஆர்.சி.ரி.எம்.எஸ்), பி.சோபிதா-(சென்.ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலயம்)

**தரம்-6**

த.விதுஷா (மிருசுவில் ஜி.ரி.எம்.எஸ்), எம்.டிஜிந்தினி-(மன்.சென சேவியர் மகளிர் கல்லூரி), எஸ்.மதுமிதா-( வேம்படி மகளிர் கல்லூரி)

**தரம்-7**

எஸ்.சிவாம்சன்-(யாழ்.இந்துக் கல்லூரி), எல்.கிஷந்தனா (மன்.சென்.சேவியர் மகளிர் கல்லூரி), எஸ்.அபிஷன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

**தரம்-8**

எஸ்.துஷியந்தி-(கைதடி நாவற்குழி ஜி.ரி.எம்.எஸ்), எம்.ஜனனி-(பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்), ஏ.குவைதா-(மன்.அல்அஸ்கர் மகாவித்தி)

**தரம்-9**

கே.சங்கவி-(வ.சிவப்பிரகாசா.எல்.சி), சி.ஜனார்த்தனா, யூ.அபிநயா-மன்.சென்.சேவியர் மகளிர் கல்லூரி)

**உறுப்பெழுத்து (Print Script) தரம்-10**

க.அச்சுதன் -(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), வை.சிநதுஜா-(அருணோதயா கல்லூரி), ஐ.பிரின்சியா-(இளவாலை கன்னியர்மடம்)

**தரம்-11**

ரி.சங்கவி-(மெதடிஸ்த பெண்கள் கல்லூரி), வி.நிரோஜா-((முல்.பாண்டியன்குளம் மகாவித்தியாலயம்), ஜெ.லிசாளினி-(கிளி.பாரதி வித்தியாலயம்)

**தரம்-12**

எவ்.அனீசா (மன்.சென்.சேவியர் மகளிர் கல்லூரி), ரி.மிதுசனா-(வட்டு.இந்துக்கல்லூரி), கே.வேணுகா-(சிவப்பிரகாச எல்.சி)

**தரம்-13**

ஏ.தாரணி-(யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ரி.துளசி (பூநகரி நல்லூர் மகாவித்தியாலயம்), எஸ்.ரக்ஷனா (சென்.சேவியர் மகளிர் கல்லூரி)

**உறுப்பெழுத்து (Cursive Script) தரம் 10**

ஆர்.வந்தனா-இமையாணன் ஜி.ரி.எம்.எஸ்), வி.பிரவீனா-(சைவப்பிரகாசா எல்.சி), ரி.ஜஸ்மின் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி),

**தரம்-11**

என்.பாத்திமா நிகிலா-(மன்.அல் அஸ்கர் ம.வி), ரி.வந்தனமலர் (மன்.நானாட்டான் மகாவித்தியாலயம்), பி.பபிசாளினி (மானிப்பாய மகளிர் கல்லூரி)

**தரம்-12**

ஆர்.அபிராமி-(வேம்படி மகளிர் கல்லூரி), பி.சுகன்யா-(சிவப்பிரகாசா எல்.சி), கே.குகநாத்-(யாழ்.இந்துக் கல்லூரி)

**தரம்-13**

எஸ்.பூர்வஜா-(யாழ்.இந்து மகளிர் கல்லூரி), பி.சொரூபிகா (வ.சிவப்பிரகாசா எல்.சி), என்.பாத்திபா அஸ்ரா (மன்.அல் அஸ்கர் மகா வித்தியாலயம்)

**சுய ஆக்கம் [தரம்-6]**

எம்.மிதுளன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), பி.துளசிகா (உடுவில் மகளிர் கல்லூரி), எஸ்.கீர்த்தனா (வ.ரம்பைக்குளம் ஜி.எம்.வி)

**தரம்-7**

ஆர்.அக்ஷயா, எஸ்.சகானா - (வ.ரம்பைக்குளம் ரி.எம்.வி), ரி.ரோகினி- (கிளிநொச்சி இந்துக் கல்லூரி)

**தரம்-8**

ரி.விசாகன்-(வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்), எம்.ரினோஷன்- (மன்.சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி), ஜெ.திபிதா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

**தரம்-9**

ரி.சுகந்தினி-(வட்டு.மத்திய கல்லூரி), என்.விதுஷன் (ஹாட்லிக் கல்லூரி), கே.மருதிகா (இளவாலை கன்னியர்மடம்)

**தரம்-10**

ஐ.தேவந்தி-(வேம்படி மகளிர் கல்லூரி), வி.விதூட்சா (ரம்பைக்குளம் ரி.எம்.வி), எல்.ஸ்ரீகர்ஷன்-(யாழ்ப்பாணக் கல்லூரி)

**தரம்-11**

எம்.பிருந்தினி-(வேம்படி மகளிர் கல்லூரி), சி.ஆன். மதுசானி (மன்.சென்.சேவியர் மகளிர் கல்லூரி), எஸ்.லம்போதரன்-(ஹாட்லிக் கல்லூரி)

**தரம்-12**

எம்.துஷிதா- (நெல்லியடி மத்திய கல்லூரி), எம்.காயத்திரி- (வ.சிவப்பிரகாசா எல்.சி), ஆர்.அபிநயா (வ.ரம்பைக்குளம் ஜி.எம்.வி.),

**தரம்-13**

எஸ்.விருத்திகா- (உடுவில் மகளிர் கல்லூரி), வி.மேரிதேபோறா (யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம்)

எஸ்.தினுஜா- (உடுவில் மகளிர் கல்லூரி)

**சொல்வதெழுதல் தரம்-6**

ஏ.மெற்றில்டா, வி.கவீனா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), கே.அருட்செல்வம் (வ.வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்)

**தரம்-7**

ஜெ.சர்மினி, கே.அபிநயா (மெதடிஸ்த பெண்கள் கல்லூரி), எஸ்.சுவர்ணா- (மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்)

**தரம்-8**

கே.பவதாரணி- (மானிப்பாய் மகளிர் கல்லூரி), ஜெ.லியன்சியா- (கிளிநொச்சி மகாவித்தியாலயம்), ஜெ.சாம்பவி-(நெல்லியடி மத்திய கல்லூரி)

**தரம்-9**

ரி.ரூபவதனா-(யாழ்ப்பாணக் கல்லூரி), சி.மிறண்டா (மன்.சென்.வேவியர் கல்லூரி), ரி.தாரணிகா- (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

**தரம்-10**

யு.நர்த்தனா- (முல்.வித்தியானந்தாக் கல்லூரி), கே.நிதுஷா (மெதடிஸ்த பெண்கள் கல்லூரி), எஸ்.பவதாரன்-(கிளிநொச்சி மகாவித்தியாலயம்)

**தரம்-11**

வி.மதனிகா- (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பி.தரண்சிகா- (வ.கனகராயன் குளம் மகாவித்தியாலயம்), கே.மாதுமை-மெதடிஸ்த பெண்கள் கல்லூரி)

**தரம்-12**

எஸ்.சசிமீரா- (வேம்படி மகளிர் கல்லூரி), கே.கயரூபன்-(ஹாட்லிக் கல்லூரி), எஸ்.கிரிஷிகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

**தரம்-13**

எஸ்.சௌமியா (வ.வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்), ஆர்.மிக்செல்-(மன்.முருங்கன் மகாவித்தியாலயம்), எஸ்.பிரணவி (வேம்படி மகளிர் கல்லூரி), (06)

# பாகிஸ்தானின் அத்துமீறல்களுக்கு இந்தியா தக்க பதிலடி வழங்கியுள்ளது

## பிரதமர் மோடி தெரிவிப்பு



எல்லைப் பகுதியில் பாகிஸ்தானின் அத்துமீறல்களுக்கு இந்தியா துணிவோடு தக்க பதிலடி கொடுத்துள்ளது என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.

மகாராஷ்ர சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவாரின் சொந்த ஊரான பாராமதியில் வியாழக்கிழமை நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் மோடி பேசியதாவது, இந்திய எல்லைப் பகுதியில் நேற்று முன்தினம் நடந்த துப்பாக்கிச் சண்டையின்போது, எதிரிகள் அலறினார்கள். பாகிஸ்தானின் அத்துமீறல்களுக்கு நமது வீரர்கள் துணிச்சலுடன் பதிலடி கொடுத்துள்ளனர்.

முந்தைய காலங்களைப் போன்று, பாகிஸ்தானின் அத்துமீறல்களை இந்தியா பொறுத்துக் கொண்டிருக்காது. இந்தியாவில் நிலைமை மாறிவிட்டதை இப்போது அவர்கள் உணர்ந்து கொண்டுள்ளனர்.

இந்நிலையில், எல்லைப் பகுதியில் நடைபெற்று வரும் மோதல்களை, சிலர் அரசியல் இலாபத்துக்காக விமர்சித்து வருகின்றனர். இதுபோன்ற விவகாரங்களை அரசியலாக்கக் கூடாது. நாட்டில் தேர்தல் வரும் போகும். அரசாங்கமும் மாறும். ஆனால், அரசியல் இலாபத்துக்காக விவாதம் நடத்தி, எல்லைப் பகுதியில் போராடும் நமது வீரர்களின் நம்பிக்கையைக் குலைக்கக் கூடாது.

சண்டை நடைபெறும் இடங்களில் துப்பாக்கியால்தான் பேச முடியும். அதைத்தான் நமது வீரர்கள் செய்து வருகின்றனர். இந்நிலையில், பாகிஸ்தான் வீரர்களின் தாக்குதல்களால், எல்லைப் பகுதியில் பதற்றம் நிலவும் நேரத்தில், அதைக் கவனிக்காமல் நான் மகாராஷ்ரத்தில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதாக சரத் பவார் குற்றம் சாட்டுகிறார். மகாராஷ்ர மாநிலத்தின் மும்பை, மாலேகான், புணே ஆகிய நகரங்களில் பயங்கரவாதத் தாக்குதல்கள் நடைபெற்றன. உங்களால் பயங்கரவாதிகளைப் பிடிக்க முடியவில்லை என்றார்.

# தற்கொலைத்தாக்குதல் ஏமனில் 70 பேர் பலி





(ஏமன்)


ஏமன் நாட்டில் தீவிரவாதி ஒருவன் நடாத்திய தற்கொலை படை தாக்குதலில்70 பேர் உயிரிழந்தனர். 75இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

தலைநகர் சானாவில் உள்ள தாகீர்சதுக்கம் அருகே சுற்றித் திரிந்த தீவிரவாதி ஒருவன் தமது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை திடீரென வெடிக்கச் செய்தான். மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதியில் வெடிபொருட்களை வெடிக்க செய்ததில் 70 பேர் உடல் சிதறி பலியாகினர். இதில் 19பேர் இராணுவ வீரர்கள் உள்ளடங்குகின்றனர். நெஞ்சை பதற வைக்கும் இந்த கோரச்சம்பவ நேரடிக் காட்சி தற்போது வெளியாகியுள்ளது.

இந்த தாக்குதலில் படுகாயமடைந்தவர்கள் சிறிது தூரம் தவழ்ந்தவாறே சென்ற காட்சிகள் சோகத்தை ஏற்படுத்தின. இந்தச் சம்பவத்தை தொடர்ந்து அந்த பகுதி முழுவதும் உடல்கள் சிதறி காணப்பட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

உலகச் செய்திகள்

# சிரியா, ஈராக் பகுதிகளில் அமெரிக்கா வான் தாக்குதல்



ஐ.எஸ்.ஐ.எஸ். கிளர்ச்சியாளர்கள் ஆதிக்கம் அதிகமாக இருக்கும் ஈராக், சிரியா பகுதிகளில் வான்வழித் தாக்குதலை அமெரிக்கா தொடர்ந்து நடத்தி வருகிறது.

இந்நிலையில், ஈராக்கின் கொபானி பகுதியில் நடத்திய தாக்குதலில் ஐ.எஸ். ஆதிக்கத்தில் இருந்த இரண்டு கட்டடங்கள் தரைமட்டமாகின. இதேபோல், சிரியாவிலும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதல் தொடரும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது. இருப்பினும், வான்வழித் தாக்குதலால் மட்டும் ஐ.எஸ்.ஐ.எஸ் கிளர்ச்சியாளர்களை முழுமையாக கட்டுக்குள் கொண்டு வர முடியாது என பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

# ஆபிரிக்க குடியரசில் உள்நாட்டு போர் அமைதிப்படை வீரர் உட்பட 9 பேர் பலி

(பாங்குய்)

மத்திய ஆபிரிக்க குடியரசில் நடைபெற்று வரும் உள்நாட்டு சண்டையில் கடந்த 48 மணி நேரத்தில் மட்டும் ஐ.நா அமைதிப்படையை சேர்ந்தவர் உள்பட ஒன்பது பேர் பலியாகியுள்ளதாக ஐ.நா மற்றும் அந்நாட்டு செஞ்சிலுவை சங்கம் கூறியுள்ளது.



அந்நாட்டில் அதிகாரம் மற்றும் வளங்களை கைப்பற்றும் நோக்கில் பலாகா எதிர்ப்பு போராளிகள் கடந்த பல மாதங்களாக தாக்குதல் நடத்தி வருகின்றனர். இத்தாக்குதலால் அங்கு இதுவரை ஆயிரக்கணக்கானோர் பலியாகியுள்ள நிலையில், ஏறத்தாழ பத்து இலட்சம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

இந்நிலையில் கடந்த வியாழனன்று பாங்குய் பகுதியில் நடைபெற்ற மோதலில் ஐ.நா அமைதிப்படை வீரர் உட்பட 9 பேர் பலியானதாகவும் 25 பேர் காயமடைந்ததாகவும் தகவல்கள் கூறுகின்றன. அந்நாட்டில் கடந்த 2013 ஆம் ஆண்டு செலேக்கா போராளிகள் ஆட்சியை பிடித்ததையடுத்து அங்கு தொடர்ந்து மோதல்கள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் இரத்து

(மோன்ரோவியா)

லைபீரிய நாட்டில் எபோலா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ள காரணத்தினால் அங்கு நடக்கவிருந்த செனட் தேர்தலை இரத்து செய்துள்ளதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

## கப்பல் கவிழ்ந்து 17 பேர் உயிரிழப்பு



(இந்தோனேஷியா)

இந்தோனேஷியாவில் கப்பல் கவிழ்ந்ததில் 17 பேர் உயிரிழந்துள்ளனர். 24 பேரைக்காணவில்லை. கிழக்கு ஜாவா மாகாணத்திற்கு உட்பட்ட ஸ்டுப்பான்ட்டோ என்ற இடத்தில் ஜபல்நூர் என்ற சிறிய வகை கப்பலில் மாப்பிள்ளை வீட்டார் திருமணத்திற்காக பாலி தீவுக்கு சென்று கொண்டிருந்தனர். கப்பலில் மொத்தம் 49 பேர் இருந்தனர்.

அப்போது திடீரென கப்பல் இயந்திரம் மற்றும் நீர்க்குழாயில் பழுது ஏற்பட்டு படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் 17 பேர் உயரிழந்தனர்.

24 பேரைக் காணவில்லை. கப்பல் கப்டன் உள்ளிட்ட 8 பேர் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர். மீட்புப்பணியில் வீரர்கள் தொடரந்து ஈடுபட்டு வருகின்றனர்.

# உங்கள் பெயரை செவ்வாயில் எழுதலாம்

## நாசா அறிவிப்பு





செவ்வாய் கிரகத்தில் பெயரை எழுத விரும்புவோருக்கு அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசா வாய்ப்பு ஒன்றை ஏற்படுத்தி தந்துள்ளது.

பூமிக்கு அடுத்ததாக செவ்வாயில் மனிதன் குடியேற வாய்ப்புள்ளதாக கருதப்படுவதால் தொடர்ந்து நாசா ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளது.

தற்போது செவ்வாய் கிரகத்தின் மேற்பரப்பில் பெயர்களை எழுத ஆசைப்பட்டால், நாசாவின் இணையதளப் பக்கத்திற்கு சென்று, ஓரியன்"ஸ் மார்ஸ் விசிட் (Orion's Mars Visit)என்ற பக்கத்தைப் பார்த்து அங்குள்ள விண்ணப்பத்தை பதிவு செய்ய நாசா வாய்ப்பளித்துள்ளது.

இதை பார்த்து ஆர்வம் அடைந்த பலரும் உடனடியாக தங்களது பெயர்களை பதிவு செய்து கொண்டதால், இதுவரை 95 ஆயிரம் பேர் விண்ணப்பத்துள்ளதாக கூறப்படுகிறது.





**பெல்ஜியத்தின் பிரசெல்ஸ் நகரில் உள்ள ஐரோப்பியன் கமிஷன் அலுவலகத்தில் கஜகஸ்தான் அதிபர் நூர்சுல்தான் நஸர்பையோ, கமிஷன் தலைவர் ஜோஸ் மானுவல் பிராசோ ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.**

# வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம் அரசியல் கைதிகளை விடுவிக்க கோரிக்கை

(வவுனியா)

நீண்டகாலமாக வழக்குகள் எதுவுமின்றி தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு கோரி வவுனியாவில் நேற்று கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் நகர சபை முன்றலில் ஆரம்பமான இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணி, வவுனியா நீதிமன்ற வளாகம்வரை சென்றது.

வவுனியா நகரசபை மைதானத்தில் ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டப் பேரணி, வவுனியா நீதிமன்ற வளாகம்வரை சென்ற போது நகரசபை பிரதான வீதியில் பொலிஸார் தடை ஏற்படுத்தினர். எனினும், அமைதியாக பேரணி சென்றமையால் அவர்களை நீதிமன்றம்வரை செல்வதற்கு பொலிஸார் அனுமதித்தனர்.

இந்த நிலையில், நீதிமன்றத்துக்கு முன்பாகக் கூடியவர்கள் பதாகைகளை தாங்கியவாறு அமைதியாக சிறிது நேரம் நின்றதன் பின்னர் ஆர்ப்பாட்டப் பேரணி மீணடும் நகரசபை மைதானத்தை வந்தடைந்தது.

நிபந்தனை இன்றி அரசியல் கைதிகளை விடுதலை செய், அரசே தாயையும் மகளையும் பிரிக்காதே, நீதி வேண்டும் நீதி வேண்டும் அரசியல் கைதிகளுக்கு நீதி வேண்டும், எமது வாழ்வு எமது கைகளில்; அந்நியரிடமில்லை, போடாதே போடாதே பொய் வழக்கு போடாதே போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தாங்கியிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், ஈ.சரவணபவன், வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், உறுப்பினர்களான து.ரவிகரன், எஸ்.சிவமோகன், இ.இந்திரராஜா, ம.தியாகராஜா, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பொ.கஜேந்திரகுமார். முற்போக்கு தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சு.விஜயகாந்த், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா பிரஜைகள்குழு பிரதிநிதிகள், தென்னிலங்கை மனித உரிமை அமைப்பு பிரதிநிதிகள், அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# அநுராதபுரம் விமானத்தள தாக்குதல் சந்தேகநபருக்கு மீண்டும் விளக்கமறியல்

அநுராதபுரம் விமானப் படை முகாம் மீது புலிகள் தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் உறுப்பினர் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகள் நேற்று அநுராதபுரம் விசேட மேல் நீதிமன்றத்தில் நடைபெற்ற போது நீதிபதி சுவர்ணாதிபதி இந்த உத்தரவை பிறப்பித்தார்.

தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய விடுதலைப் புலிகளின் மேலும் 4 உறுப்பினர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய நீதிபதி அனுமதி வழங்கினார்.

நீதிமன்றத்தில் கருத்து வெளியிட்ட குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள், புலிகளின் இந்தத் தாக்குதலில் அநுராதபுரம் விமானப்படை முகாமுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டதாகக் கூறினர.

இத்தாக்குதலில் 14 படையினர் கொல்லப்பட்டதுடன், மேலும் பலர் காயமடைந்தனர். 10 விமானங்கள் முற்றாக அழிந்தன. 6 விமானங்கள் பாதியளவில் சேதமடைந்தன.

இதனால் குற்றவாளிகளுக்கு எதிரான குற்றப் பத்திரிகையில் திருத்தங்களை செய்ய வேண்டியது அவசியம் என குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றில் குறிப்பிட்டனர்.

இதனடிப்படையில் குற்றப் பத்திரிகையில் திருத்தங்களை செய்ய நீதிபதி அனுமதி வழங்கினார்.

# வர்த்தக உறவுகளை வலுவாக்க அவுஸ்ரேலியா இணக்கம்

(கொழும்பு)

இலங்கை மற்றும் அவுஸ்ரேலியாவுக்கு இடையிலான இருநாட்டு வர்த்தக உறவுகளை பலப்படுத்தும் வகையில் இருநாட்டு வெளிவிவகார அமைச்சர்களுக்கும் இடையில் விசேட கலந்துரையாடலொன்று நேற்று இடம்பெற்றது.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷொப்பிற்கு இடையிலான இக்கலந்துரையாடல் அவுஸ்ரேலியாவின் பேர்த் நகரில் இடம்பெற்றது. இந்தியப் பெருங்கடல் ரிம் சங்கம் தொடர்பிலும் இவர்களது கலந்துரையாடல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இடம்பெற்ற கலந்துரையாடலில் வர்த்தக வியாபாரம், முதலீட்டுக் கொள்கைகள், சீரமைக்கப்பட்ட கொழும்பு நகரம், அவுஸ்ரேலிய, இலங்கைக்கு இடையில் இடம்பெறும் ஒருங்கிணைந்த வேலைகள், பாதுகாப்புக்கள் ஆகிய முழுவிடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

## அங்கரின்...

தினம் தெரிவித்தனர்.

ஹிராந்துரு கோட்டைப் பகுதியில் அங்கர் பால்மாவை உண்ட 3 சிறுவர்கள் பாதிக்கப்பட்டதனை அடுத்து குறித்த மூன்று அங்கர் தொகுதிகளுக்கும் தற்காலிக தடை விதிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த மூன்று தொகுதிகளும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இந்த சோதனையின் போது எதிரமறையான முடிவுகள் கிடைக்காததையடுத்து மூன்று தொகுதிகளுக்கும் விதிக்கப்பட்ட இடைக்கால விற்பனைத் தடை நீக்கப்பட்டுள்ளதாக பொதுச் சுகாதாரப் பணிப்பாளர் செனரத் பண்டார றொய்ட்டர்ஸ் செய்திச் சேவைக்கு தெரிவித்துள்ளார்.

## கோரிக்கைகளை...

நியமனம், இராணுவ வெளியேற்றம் உள்ளிட்ட வடமாகாண சபையின் கோரிக்கைகள் ஜனாதிபதியால் செய்யப்படவில்லை.

அத்துடன், மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் 2012 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய முன்னேற்றகர விடயங்கள் கவனத்தில் எடுக்கப்படுவதாக அழைப்பு கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், வடமாகாண சபை, 2013 ஆம் ஆண்டே ஆரம்பிக்கப்பட்டமையால் இது தொடர்பில் வடமாகாண சபை விளக்கமளிக்க முடியாது.

ஆகையால் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந்துகொள்வது அர்த்தமற்றது என முதலமைச்சர் தனது கடிதத்தில் குறிப்பிட்டு அனுப்பியுள்ளார்.

## மதூர்...

செலுத்தப்பட்டது.

இரு நாடுகளுக்கிடையில் நெருக்கமான உறவைப் பேணுவதாகவும் இருநாடுகளுக்கிடையிலான பாதுகாப்பு நடவடிக்கைகள் உறவை மேம்படுத்தும் என்றும் இதன்போது ஜனாதிபதி தெரிவித்தார்.

இச்சந்திப்பின் போது இந்திய பாதுகாப்புச் செயலாளருக்கு நினைவுச் சின்னமொன்றையும் ஜனாதிபதி வழங்கினார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே.சின்ஹா, இந்திய பாதுகாப்பு அமைச்சின இணைப்புச் செயலாளர் ராம் சங் சிங், இந்திய வெளிவிவகார அமைச்சின் இணைப்புச் செயலாளர் திருமதி சுசித்திரா துரை, இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஷேனுகா செனவிரத்ன, இலங்கை கடற்படைக் கட்டளைத் தளபதி ரியல் அட்மிரல் ஜயந்த பெரேரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சட்டத்திற்கு...

குறிப்பிட்டுள்ளார்.

வடக்கில் தனியார் காணிகளில் நிலை கொண்டுள்ள படையினர் இந்த வருடத்திற்குள் அவற்றில் இருந்து வெளியேற வேண்டும் என வடக்கு மாகாண சபையில் நேற்று முன்தினம் யோசனை ஒன்று நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இந்த ஆண்டுக்கான...

கைலாஷ் சத்யார்த்தி மற்றும் பாகிஸ்தான் சிறுமி மலாலா ஆகியோருக்கு நடப்பாண்டின் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் 1997 ஆம் ஆண்டு பிறந்தவர் சிறுமி மலாலா யூசப்ஸாய். அப்பகுதியில் பெண்கள் கல்வி கற்க தலிபான் தீவிரவாதிகள் தடை விதித்திருந்தனர்.

இந்நிலையில், தலிபான்களின் ஒடுக்குமுறை குறித்து பி.பி.சி.யின் உருது மொழி இணையத்தளம் ஊடாக பரப்புரை மேற்கொண்டு வந்தார் மலாலா. பின்னர் வெளிப்படையாக தொலைக்காட்சியில் பேட்டியளித்தார்.

இதனால், 2012ஆம் ஆண்டு மலாலாவை கொல்ல தலிபான் தீவிரவாதிகள் முயன்றனர். தலிபான்களில் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த நிலையில் இங்கிலாந்தில் அடைக்கலம் புகுந்தார் மலாலா.

அதன் பின்னர் தொடர்ந்தும் பெண்களின் கல்வி முன்னேற்றம் பற்றிய பிரசாரத்தை மேற்கொண்டு வருகிறார். மலாலாவின் பிறந்த நாளை, மலாலா தினம் என்று ஐக்கிய நாடுகள் சபை பிரகடனபடுத்தியது.

பாகிஸ்தான் நாட்டின் முதலாவது அமைதி, உலக அமைதி அறக்கட்டளையின் தைரியத்துக்கான விருது ஆகியவற்றை பெற்ற மலாலாவுக்கு நடப்பாண்டின் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. உலகிலேயே மிகச் சிறிய வயதில் நோபல் பரிசு பெற்றவர் என்ற பெருமை மலாலாவுக்கு கிடைத்துள்ளது.

இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்தில் பிறந்த கைலாஷ் சத்யார்த்தி. டெல்லியில் வசித்து வருகிறார். இவர் தனது "பச்பான் பச்சோ அந்தோலன்" என்ற அமைப்பின் மூலம் சுமார் 80 ஆயிரம் குழந்தைத் தொழிலாளர்களை மீட்டு அவர்களது வாழ்க்கையில் ஒளியேற்றி வைத்துள்ளார்.

இவர் 1984 ஆம் ஆண்டு முதல் பல்வேறு மனித உரிமை விருதுகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மக்களின்...

போதே அவர் இவ்விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது மக்கள் நீண்டகால யுத்தத்திற்குப் பின்னர் தற்போதைய அமைதிச் சூழலில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் அரசினால் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தி திட்டங்களின் ஊடாக மக்களின் வாழ்வாதாரமும் பொருளாதாரமும் முன்னேற்றம் கண்டு வருகின்றன.

அதுமட்டுமன்றி கல்வி, விளையாட்டு, சுகாதாரம் உள்ளிட்ட ஏனைய துறைகளும் முன்னேற்றம் கண்டு வரும் அதேவேளை, அதனூடாக புதியதொரு சமுதாயமும் வளர்ச்சி கண்டு வருகின்றது.

இந்நிலையில் இவ்வாறான வளர்ச்சிகளையும் மேம்பாடுகளையும் விரும்பாத சுயலாப அரசியல்வாதிகளும் சில தமிழ்ப் பத்திரிகைகளும் உண்மைக்குப் புறம்பானதும் தவறான கருத்துக்களையும் வெளியிட்டு மக்களை குழப்பி வருவதாக சுட்டிக்காட்டிய அமைச்சர், இவ்விடயம் தொடர்பில் மக்களுக்கு சரியான வழியைக் காட்ட வேண்டிய பொறுப்பை ஆசிரிய சமூகம் முன்னெடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

ஆசிரிய உதவியாளர்கள் தற்போது கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இரண்டு வருட பயிற்சி பெற்று வரும் நிலையில் தம்மை 3 II பதவி நிலைக்கு உள்வாங்குமாறும் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

அதற்கமைவாக குறித்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு துறைசார்ந்தோருடன் கலந்துரையாடி காலக்கிரமத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

வடமாகாணத்தில் 531 பேர் ஆசிரிய உதவியாளர்களாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குகேந்திரன், யா்ழ். மாநகர முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் உடனிருந்தனர்.

## முடிவுக்கு...

உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கடந்த புதன்கிழமை இரவு தொடக்கம் அவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இரண்டு நாட்கள் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தினால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு ஆளாகினர். இதையடுத்து வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு எதிராக நீதிமன்றின் உதவி நாடப்பட்டது. இதனை விசாரணைக்கு எடுத்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம் வேலை நிறுத்தத்தைக் கைவிடுமாறு உத்தரவிட்டது.

இந்த உத்தரவை ஏற்று இன்று காலை 7 மணி தொடக்கம் ரயில் சேவைகள் வழமை போல் இயங்கும் என ரயில்வே ஊழியர் தொழிற்சங்கம் அறிவித்தது.

## முழுமையாக...

திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் இதனை குறிப்பிட்டார். நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் கூடியளவிலான பரிந்துரைகளை அமுல்படுத்த அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

சுயாதீன ஆணைக்குழுக்கள் தொடர்பில் பிரச்சினைகள் உள்ளன. அவற்றின் சுயாதீனம் சம்பந்தமாக பல்வேறு நிலைப்பாடுகள் அரசாங்கத்திற்கு உள்ளன.

இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தி நியாயத்தை நிறைவேற்ற அரசாங்கம் எண்ணியுள்ளது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு நேர்மையாகவே செயற்பட்டது. ஆரம்பத்தில் அது குறித்து பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

அந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் குறுகிய காலத்திலும் நீண்ட காலத்திலும் அமுல்படுத்தப்பட வேண்டிய பரிந்துரைகள் உள்ளன. காலத்திற்கு அமைய அந்த பரிந்துரைகள் அமுல்படுத்தப்படும்.

உலகில் இப்படியான பிரச்சினைகள் காணப்படும் பல நாடுகள் உள்ளன. பரிந்துரைகள் அனைத்தையும் முடிந்த விரைவில் அமுல்படுத்தி முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் ரம்புக்வெல குறிப்பிட்டுள்ளார்.

# காணாமற்போனோர் விவகாரம்;
# பரஸ்பரம் தகவல் பரிமாற இணக்கம்

காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவும் தங்களுக்கிடையில் தகவல்களை பகிர்ந்துகொள்ள இணக்கம் தெரிவித்துள்ளன.

இதுதொடர்பில் காணாமல் போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம, அதன் செயலாளர் எச்.டபிள்யூ. குணதாச ஆகியோர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரான ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் பிரியந்த பெரேராவை கொழும்பிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் நேற்று சந்தித்தனர்.

ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் கவனஞ் செலுத்தப்பட்டது.


ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவால் வழங்கப்பட்டுள்ள பணிப்பாணையை அமுல்படுத்துவதற்காக ஆணைக்குழுவால் பின்பற்றப்படும் முறைமைகள், நடைமுறைகள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவருக்கு, பரணகம விளக்கமாக விவரித்தார்.

காணாமற்போனோரின் இரத்த உறவினர்களிடமிருந்து மனித உரிமைகள் ஆணைக்குழுவும் குறிப்பிடத்தக்களவு முறைப்பாடுகளைப் பெற்றுள்ளதாக பரணகமவிடம், பெரேரா தெரிவித்தார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகளை மேற்கொண்டோர், காணாமற்போனோர் ஆணைக்குழுவுக்கும் முறைப்பாடுகளை மேற்கொண்டிருக்கலாம் என இதன்போது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

காணாமற்போனோர் தொடர்பாக தங்களிடம் உள்ள தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் காணாமல் போனோர் தொடர்பான முறைப்பாடுகளுக்கான தீர்வுகளைக் காண்பதற்கு இணைந்து செயற்படவும் மனித உரிமைகள் ஆணைக்குழு, காணாமற்போனோர் ஆணைக்குழு ஆகியவற்றின் தலைவர்கள் இணக்கம் தெரிவித்தனர்.

# தலதா மாளிகையில் ஜனாதிபதி



(கண்டி)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நேற்று கண்டி தலதா மாளிகைக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டு, ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டதாக அவரது ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன் பின்னர், மல்வத்து மற்றும் அஸ்கிரிய மாநாயக்க தேரர்களைச் சந்தித்து அவர்களின் நலன் குறித்து விசாரித்த ஜனாதிபதி, அவர்களுடன் கலந்துரையாடியுனார்.

மாநாயக்க தேரர்கள் பிரித் ஓதி ஜனாதிபதிக்கு ஆசி வழங்கினார. அதேவேளை தலதா மாளிகைக்கு வழிபாடுகளில் ஈடுபட வந்த பொது மக்களுடன் ஜனாதிபதி உரையாடியதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# மீன்பிடி சட்டதிட்டங்கள் கையேடு மூலம் விளக்கம்

## நாடு தழுவிய மீனவ சங்கங்களுக்கு அறிவிப்பு

சர்வதேச கடற்பரப்பில் மீண்பிடியில் ஈடுபடும்போது கடைப்பிடிக்க வேண்டிய சட்டதிட்டங்கள் குறித்து மீனவர்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளதாக கடற்றொழில் பிரதியமைச்சர் சரத் குமார குணரத்ன தெரிவித்தார்.

இலங்கை மீனவர்கள் கடைப்பிடிக்க வேண்டி சட்டதிட்டங்கள் அடங்கிய ஆலோசனைக் கையேடு ஐரோப்பிய ஒன்றியத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பிரதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் பிரகாரம் சட்டதிட்டங்கள் எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்கு முன்னதாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும், அவ்வாறில்லாத பட்சத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் பிரதியமைச்சர் கூறினார்.

இதற்கமைய நாட்டிலுள்ள சகல மீனவர் சங்கங்களுக்கும் மேற்படி விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாக பிரதியமைச்சர் சரத் குமார குணரத்ன தெரிவித்தார்.

# கிளிநொச்சியில் ஜனாதிபதி சூறாவளி சுற்றுப் பயணம்

## செயற்றிட்டங்கள் பல அங்குரார்ப்பணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிக்கு நாளை விஜயம் மேற்கொள்ளும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கிளிநொச்சியில் பல்வேறு நிகழ்வுகளிலும் பங்கேற்கவுள்ளார்.

காலை 9.30 இக்கு விமானம் மூலம் இரணைமடுவை சென்றடையும் ஜனாதிபதி, 10 மணிக்கு இரணைமடுச் சந்தியில் அமைந்துள்ள நெலும் பியச மண்டபத்தில் யுத்தப் பாதிப்புகளுக்குள்ளான 1200 பேருக்கு 100 மில்லியன் ரூபா இழப்பீட்டுக்கான காசோலை வழங்கி வைக்கவுள்ளார்.

தொடர்ந்து 10.50 மணிக்கு கிளிநொச்சி மத்திய கூட்டுறவு மண்டபத்தில் இடம்பெறும் நிகழ்வில் வடமாகாணத்தைச் சேர்ந்த 20,000 பேருக்கு காணி ஆவணம் வழங்கி வைக்கும் நிகழ்விலும் கலந்துகொள்வார்.


இந்த நிகழ்வு முன்னர் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடப்பதாக இருந்து தற்போது கூட்டுறவு மண்டபத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து 12.15 மணிக்கு வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள மகிந்தோதய விஞ்ஞான ஆய்வு கூடத்தினை திறந்து வைப்பதோடு பிற்பகல் 1.45 மணிக்கு அக்கராயன் பிரதேச வைத்தியசாலையினையும் திறக்கவுள்ளார்.

தொடர்ந்து 3.30 மணிக்கு கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள மகிந்தோதய ஆய்வுகூடத்தை மாணவர்களிடம் கையளித்த பின்னர்.

மாலை 4.15 மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தினையும் திறந்து வைக்கவுள்ளார். (90)

# தமிழகத்திலிருந்து இலங்கைக்கு படகு மூலம் தப்பமுயன்றவர்கள் கைது



தமிழகத்திலிருந்து இலங்கைக்கு தப்பிச் செல்ல முயன்ற 6 பேரை கைது செய்து விசாரணை நடத்தி வருவதாக இராமேஸ்வரம் கியூ பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த 4 ஆம் திகதி தங்கச்சிமடம் கண்ணுப்பாடு தென்கடல் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான படகு ஒன்று காணப்பட்டது. இதுகுறித்து பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டு, கியூ பிரிவு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

இதேநேரம் இராமேஸ்வரம் பஸ் நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு சிவதர்ஷன், சிலோசினி, மாணிக்கம், பரசாத், ரமேஸ் மற்றும் சிலோமை நல்லம்மா ஆகிய 6 பேர் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியதாகக் கூறி, பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் விசாரணை மேற்கொண்ட போது அவர்கள் அனைவரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்பது தெரிய வந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் இலங்கைக்கு செல்ல முற்பட்ட போது, படகு இயந்திரக்கோளாறு காரணமாக பயணம் தடைப்பட்டுள்ளது. இதனையடுத்து குறித்த படகை தங்கச்சிமடம் கரைக்கு கொண்டு சென்று இயந்திரத்தை அருகே இருந்த சவுக்குக்காட்டுப் பகுதியில் மறைத்து வைத்து விட்டு 6 பேரும் மதுரை வாடிப்பட்டிக்குச் சென்றுள்ளனர்.

மீண்டும் இந்த '6 பேரும் இலங்கைக்கு செல்ல மற்றொரு படகை ஏற்பாடு செய்துள்ளனர். இந்த படகு நேற்று முன்தினம் காலை இராமேஸ்வரம் தென்கடல் பகுதிக்கு வரும் என்ற நிலையில் 6 பேரும் இராமேஸ்வரத்திற்கு பஸ்ஸில் வந்து காத்திருந்துள்ளனர். இதன்போது அவர்களை கியூ பிரிவு பொலிஸார் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# இன்று பரிசளிப்பு விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் செல்வி கிறேஸ் தேவதயாளினி தேவராசா தலைமையில் இடம்பெறவிருக்கும் இந்த விழாவில் இப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்பு கிளையின் தலைவர் திருமதி ரி.ரட்ணம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (01)

# சட்டங்களை எடுத்துக்கூறி எதிர்க்கட்சியினர் பொய்ப்பிரசாரம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக எதிர்க்கட்சிகள் பொய்ப் பிரசாரங்களை முன்னெடுத்து வருவதாக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுக்காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார். அடுத்து நடைபெறவுள்ள தேசிய தேர்தலில் மக்களின் நிலைப்பாடுகள் தெளிவாக வெளியிடப்படும். எதிர்க்கட்சிகள் பல்வேறு அரசியல் அமைப்பு ரீதியான சட்ட வாதங்களை முன்வைத்து மக்களை தவறான வழியில் வழிநடத்தி வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# தகாத பாலியல் – காதல் உறவு 35 ஆயிரம் சட்டவிரோத கருக்கலைப்பு

## சுகாதார அமைச்சு திடுக்கிடும் தகவல்

வருடந்தோறும் 35 ஆயிரம் சட்டவிரோத கருக்கலைப்புக்கள் இடம்பெறுவதாக சுகாதார அமைச்சின் ஆய்வினூடாக தெரியவந்துள்ளது.

தகாத பாலியல் உறவு மற்றும் காதல் விவகாரங்கள் என்பவற்றினால் இளவயது யுவதிகள் கருவுறுவதன் காரணமாக இந்த சட்டவிரோத கருகக்கலைப்பு சம்பவங்கள் அதிகரித்துள்ளமை ஆய்வினூடாகக் கண்டறியப்பட்டுள்ளது.

விரும்பத்தகாத பாலியல் உறவினால் நிகழும் கருவுறுதலின் காரணமாக ஏற்படும் சட்டவிரோத கருக்கலைப்பினால் உயிர் ஆபத்தையும் பல இளவயது யுவதிகள் எதிர்நோக்குகின்றனர்.

தகாத பாலியல் உறவு, தேவையற்ற கருவுறுல் மற்றும் சட்டவிரோத கருக்கலைப்பு தொடர்பான போதிய அறிவின்மையே இத்தகையை சம்பவங்கள் அதிகரித்துள்ளமைக்கு காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இவை தொடர்பில் இளம் யுவதிகளுக்கும் தாய்மார்களுக்கும் உளவளத்துணை ஆலோசனை வழங்குவதற்கும் இவை தொடர்பில் அறிவூட்டல் மற்றும் விழிப்புணர்வூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய, பிரதேச மட்டத்திலும் பாடசாலை மட்டத்திலும் இத்தகைய அறிவூட்டல் மற்றும் விழிப்புணர்வூட்டல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஒக்ரோபர் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.